

# ஞானச்சுடர்

வைகாசி மலர்

2009

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
11 JUL 2009
நூலகம்



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

## குறள்வழி



**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாம் செயல்.**

பொருள்: தத்தமக்கு இயன்றமட்டில் அறச்செயலைச் செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் இடைவிடாது செய்தல் வேண்டும். (33)

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

பொருள்: மனத்தில் களங்கமற்றவனாயிருக்கவேண்டும். அதுவே எல்லா அறமும் ஆகும், மற்றவை ஆரவாரத் தன்மையுடையன. (34)

## நற்சிந்தனை



### மறப்பேனோ குருநாதன் தன்னை

### நமச்சிவாயப் பத்து

அடியவர் மனத்தைநீங்கா அப்பனே கருணைவாழ்வே
வடிவுடை மழுமானேந்தும் வள்ளலே நமச்சிவாய 1

ஆக்கையே கோயிலாக வகஞ்சிவ லிங்கமாக
நீக்கமற் றெங்கும்நிற்கும் நிமலனே நமச்சிவாய 2

இலையாபடி பணிவார்தம்மை யின்பவீ டடையச்செய்யுந்
துணைவனே சோதிவெற்பே தூயனே நமச்சிவாய 3

ஈசனே யெம்மைநீங்கா இறைவனே யிமையோர்போற்றும்
வாசமார் கமலபாதா வள்ளலே நமச்சிவாய 4

உள்குவா ருள்ளத்தெல்லாம் உடனிருந் தறியுந்தேவே
கள்ளுலாங் குழலாள்பாகா கடவுளே நமச்சிவாய 5

ஊமையோ லிருந்தேயுண்மை புணருவார் தங்கட்கெல்லாம்
தாயைப்போ லருளைச்செய்யுஞ் சங்கரா நமச்சிவாய 6

எண்ணுவா ரெண்ணந்தோன்று மிடமெனப் பெரியோருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும்நல்ல தெய்வமே நமச்சிவாய 7

ஏகம்ப மேவியந்த ஏந்திழை கலக்கந்தீர்த்த
ஏகனே யெல்லாம்வல்ல எந்தையே நமச்சிவாய 8

ஐயந்தீர்த் தடியேன்றன்னை யன்றுநல் லூரிலாண்ட
துய்யனே துரியவெற்பே சுந்தரா நமச்சிவாய 9

ஒன்பதுவாய்த் தோற்பைதன்னில் உயிரடங்கி நிற்கநல்ல
அன்புசெய் தெய்வமேயென் அமுதமே நமச்சிவாய 10

# ஞானச்சுடர்



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திகதி 11.07.2001
நூலகம்

வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் -137

## 2009 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இறைவனிடம் நம்பிக்கை | ம.க. ஸ்ரீதரன் | 1 - 3 |
| கொல்லான் புலாலை.... | திருமதி ல. கவிதா | 4 - 6 |
| 'ராம' பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 7 - 9 |
| தாய்த் தெய்வ வழிபாடு | இரா. செல்வவடிவேல் | 10 - 13 |
| தானத்தின் சிறப்பு | க. சிவசங்கரநாதன் | 14 - 16 |
| அமாவாசை பூரணைகளும்... | சி.மு. தம்பிராசா | 17 - 19 |
| அவ்விய நெஞ்சத்தான்.. | நா. நல்லதம்பி | 20 - 22 |
| திருமுருகாற்றுப்படை..... | வல்வைச்செல்வம் | 23 - 24 |
| தெய்வீகத் தொண்டின்... | திருமதி நா. சந்திரலீலா | 25 - 27 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 28 - 30 |
| மாறிவரும் மனநிலை.... | இ. சாந்தகுமார் | 31 - 32 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 33 - 34 |
| கொன்றைவேந்தன் | ஔவையார் | - 35 |
| அவதார புருஷர்கள் | ஆ. மகேசு | 36 - 38 |
| நித்திய அன்னப்பணி | | 39 - 40 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி.... | செல்வி தி. வரதவாணி | 41 - 42 |
| ஆசாரக்கோவை | | 43 - 44 |
| அருள்திறன் | வாரியார் சுவாமிகள் | 45 - 46 |
| வட இந்திய ஸ்தல... | | 47 - 49 |
| செய்திச் சிதறல்கள் | | 50 - 51 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 52 - 54 |
| சமூகப்பணிகள்..... | | - 55 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 56 - 58 |


**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599

FAX: 021- 2263406

பதிவு இல. Q.D/38/NEWS/2009

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்

## சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை Dr V. பால கிருஷ்ணன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையில் ஞானச்சுடர் மலரின் பெருமைகளை வியந்து கூறியதோடு சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளையும் கூறினார். அவற்றில் அன்னதானப்பணிக்கு ஆச்சிரமம் முக்கியத்துவம் கொடுப்பதோடு பாடசாலை மாணவர்களுக்கு கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தல், மேலதிக வைத்திய சேவைக்கு உதவுதல், புதன் ஞாயிறு தினங்களில் வைத்தியசேவை, இலவசமாக மருந்துகள் வழங்குதல் மற்றும் பல்வேறு பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றது. அத்துடன் வருடாவருடம் ஒருமுறையேனும் வருகை தந்து மலரினை வெளியிட்டு வைப்பது எனக்கும் பெருமை சேர்க்கின்றது எனக்கூறித் தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

136ஆவது சுடருக்கான மதிப்பீட்டுரையை இளைப்பா[illegible]ய அதிபரான திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

தனது ஆரம்ப உரையில் ஆச்சிரம சுவாமிகளின் குருவருளும் முருகப் பெருமானுடைய திருவருளும் கிடைக்கப்பெற்று பரம்பொருளுடைய அருள் நிறைந்த மலரை ம[illegible]ிப்பீடு செய்வதற்கு வழிப்படுத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் எனக்கூறினார்.

மேலும் இம்மலர் இன்றைய மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் இளைய தலைமுறைகளை ஆன்மீக சிந்தனைகளோடு முன்னெடுக்கும் பொக்கிஷமாகவும் கண்ணிற்கு அழகையும் மனதிற்கு அமைதியையும் வழங்குகின்ற முறையில் அமைந்துள்ளது. இம்மலரில் இடம்பெற்ற கட்டுரைகள், கட்டுரைத் தொடர்கள் கவிதைகள், நற்சிந்தனைகள், பொன்மொழிகள் என்பவற்றைச் சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
**T.P.No. 021-2263406**
**060-2219599**

**காசோலை**
**செ. மோகனதாஸ்**
**க. இல. 7342444**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

உ

# சுடர் தரும் தகவல்

மனிதனின் உலக வாழ்வின் பக்கவேர்களில் ஒன்றாக விளங்குவது நம்பிக்கை ஆகும். ஒருவர் மற்றவர் மீது கொள்ளும் நம்பிக்கை அவர்களை ஏதோ ஒருவகையில் பிணைக்கிறது. அப்பிணைப்பே பின்னர் நட்பாக மலர்கின்றது. அந்நட்பு வளர்வதற்கு நாணயமான நேர்மையான நம்பிக்கை அவசியம்.

ஒருவர்மீது முழுநம்பிக்கை வைத்துவிட்டால் அவனது நாணயத்தையும் விசுவாசத்தையும் சந்தேகிப்பதில்லை. அவன் தனக்கு கேடு விளைவிப்பான் என்று எள்ளளவும் நினைப்பதில்லை. இந்நம்பிக்கைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நாணயமற்றதாக்கி நம்பியவனுக்கு கெடுதல் செய்வது நம்பிக்கைத் துரோகமே. நண்பன் உதவுவான் நல்லதையே தனக்குச் செய்வான் என்று நம்பியிருப்பவனை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் அல்ல- அது அவனுக்கு நாம் செய்யும் துரோகமே. இவ்வாறு துரோகம் செய்பவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே "நம்ப நட நம்பி நடவாதே" என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். ஒருவன்மீது நம்பிக்கை அதீதமாகி அவ்வாறு தன்னிடம் புகலிடம்பெற்ற, தஞ்சமடைந்த ஒருவனைக் கொல்வது மாபெரும் துரோகச்செயல் ஆகும். அது வீரம் அல்ல, கோழைத்தனமே.

ஒருவன் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்கும் எதிரியைக் கொல்வது அதர்மம் துரோகம் என்று அறம் கூறுகின்றது. அவ்வாறிருக்கையில் தன்னை நம்பி நாடியவனைக் கொல்வது அதர்மம். துரோகம் மட்டுமன்றி கொடிய சமூகவிரோதக் குற்றமுமாகும்.

"நம்பினவர்களை ஏமாற்றுவதில் சாமர்த்தியம் இல்லை. மடியில் படுத்து உறங்குபவர்களைக் கொல்வதில் வீரம் இல்லை. இவை இரண்டிலும் இருப்பவை துரோகமே" என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் இழைப்பவர்கள் மனிதர்களாகக் கணிக்கத் தகுதி இழந்தோராவர். இவ்வாறு அறம் வழுவுவோர் சமூகத்தில் இருந்து தூரத்தே ஒதுக்கப்பட வேண்டியவர்கள். ஆகையால் ஆறறிவு படைத்த மனிதர்களாகிய நாம் மனித நேயத்தோடு மற்றவர்மீது நம்பிக்கை வைத்து அடுத்தவருக்குத் துரோகம் இழைக்காது நட்புணர்வுடன் அனைவருடனும் உறவுகளைப் பேணி இவ்வுலகில் மனித வாழ்வை வாழ்வோமாக.

உ

# சந்நிதி, தமிழர் பெருமானே!

நீலக்கடல் போலே மயிலினில்
நிலைகொள் கதிர் போலே ஏறியே
பாலக் கும ராவடி வேலுடன்
வரவேணும் - எங்கள்
பதியாகிய சந்நிதிக் கோயில்நின்
கதியே பெற அன்பர்கள் கூட்டமே
பழகுந் தமிழ் பாடி வருவதை
அறியாயோ

காலைக்கடன் முடித்தே யவர்களும்
வேலைத் தலம் எதிலும் மேவினும்
கனகா முத்துக் குமரா வென்பதும்
காணாத தேனோ! இந்தக்
காசினிதொழும் திருப்பரங் குன்றிலும்
மேவும் செந்தூர் ஆவினன் குடியிலும்
கதிர் ஏரகம் குன்று தொறாடிடும்
கதிர்காமனே

மேலும் பழ முதிர்சோ லையிலும்
ஞால மெல்லாம் அர்ச்சித்து ஏத்திட
நின்றே யவர்க் கருளிட காட்சிசெய்
நிமல மூர்த்தியே! நின்னை
நினைப் போடென்றும் நெஞ்சே யுருகிட
வினைப் பேயெல்லாம் அன்றே யகலிட
நிறையத்தமிழ் பாடென் றடியேனை
நெறிப்படுத் தினாய்

கோல மெல்லாம் மாறிப் போயினும்
கால மெல்லாம் வெறிதே கழியின்உள
கோயில் செல்வச் சந்நிதி யுன்தனை
கோடி யன்பர்கள்
குவலய மெல்லாம் கும்பிட் டேத்திட
நலமிக வென்றும் அன்னம் பாலிக்கும்
கோடி யடியாரின் சுவாமி சந்நிதி
வரவேண்டினேனே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம், ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்.*

உ

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு P.T. பாலச்சந்திரன்**
(அவுஸ்திரேலியா)

**திரு V. விஜயசிவாஜி**
(அவுஸ்திரேலியா)

**திரு வடிவேலு கமலநாதன்**
(வெடியரசன்வீதி, காரைநகர் (டோகா, கட்டார்)

**திருமதி மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(தெஹிவளை) அச்சுவேலி தெற்கு)

**திரு ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திரு மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)

**திரு க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

**திரு இ. ஜெயக்குமார்**
(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

**திரு ஸ்ரீ கணேஸ்வரன்**
(சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி)

**திரு மா. சிவமூர்த்தி**
(வீடியோ கலாமினி, அச்சுவேலி)

**திரு கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)

**திரு சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**செல்வி இ. வல்லிபுரம்**
(ஆசிரியை, நவக்கிரி, அச்சுவேலி)

**திரு க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)

**திரு நா. சுந்தரம்**
(நுண்ணாய்வுப் பரிசோதகர், உரும்பராய்)

**திரு வெங்கடாசலம் திவாகர்**
(யாழ்ப்பாணம்)

**திரு P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)

**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)

**Dr V. பாலகிருஷ்ணன்**
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)
**திரு இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**திரு ச. தெட்சணாமூர்த்தி**
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில்)
**திரு S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நல்லூர்)
**திரு த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு அ. தனேஸ்வரன்**
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
**தலைவர்**
(கலையரசி படிப்பகம், 3ம்சந்தி, தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**திரு K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**திரு ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**திரு கு. ரவீந்திரன்**
(அதிபர், தொண்டைமானாறு)
**திரு ஐ.கோ. சந்திரசேகரம்**
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
**திரு S. கோவிந்தராஜன்**
(சைவப்புலவர், பறாளாய், சுழிபுரம்)
**செல்வி T. பெரியதம்பி**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**திரு D.M. வேதாரணியம்**
(ரதி மகால், கரணவாய்)
**செல்வி ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**திருமதி S. சரஸ்வதி**
(குட்டகம்புரை, புலோலி)
**திரு சி. குமரகுருநாதன்**
(தில்லையம்பலப் பிள்ளையார் வீதி, அல்வாய்)
**திரு மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)

**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**திரு க. பொன்னுச்சாமி**
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
**திரு பேரின்பபாலசுப்பிரமணியராசா சுபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**திரு V. சந்திரராஜா**
(நிற்சாமம், சங்கானை)
**திரு வே. கிருஷ்ணராஜா**
(C.T.B, மீசாலை)
**திரு நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
**திரு வ. இராசையா**
(கேணியடி, திருநெல்வேலி)
**திரு சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**செல்வி அ. வள்ளிநாயகி**
(உடுவில் தெற்கு, சுண்ணாகம்)
**உரிமையாளர்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
**திரு பொ. கந்தையா**
(புளூடிலேன், அரியாலை)
**திரு செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**திரு வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**திரு கு. பிரதீபன்**
(பிரியா சுப்ப மாக்கற், புன்னாலைக்கட்டுவன்)
**செல்வி P. சயிலஜா**
(மயிலங்காடு, ஏழாலை)
**திரு வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி சாரதாதேவி விஸ்வலிங்கம்**
(கெருடாவில், தொண்டைமானாறு)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**திரு சுப்பிரமணியம் கந்தையா**
(சிவன்வீதி, ஆவரங்கால்)

**திரு வ.த. இன்பராசா**
(வல்வெட்டி)
**திரு R. பிரணவன்**
(கிளுவானை லேன், கோப்பாய்)
**கலாதேவி பாலசுந்தரம்**
(சண்டிலிப்பாய் மேற்கு)
**திரு ச. செல்வவிநாயகம்**
(ஜெயபதிவாசா, உரும்பராய் தெற்கு)
**திரு வ. புவிநாதன்**
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
**திரு த. உருத்திரா**
(ஆதவன் மில், புலோலி)
**திரு K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**திரு க. செல்வராசா**
(கட்டைவேலி, கரவெட்டி)
**திரு க. சின்னராஜா**
(வல்வெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**திரு ஆ. வேலாயுதம்**
(உலக்கைஓடை, கம்பர்மலை)
**திரு க. சின்னராசா**
(சித்சாலயம், அல்வாய்)
**திரு செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**திரு சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**திரு ந. இராஜகோபால்**
(ஸ்ரீ நாகேந்திரா பவனம், கரவெட்டி)
**சி. சரஸ்வதி**
(போதராமடம், துன்னாலை)
**திரு ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**திரு அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**திரு கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)

உ

# இறைவனிடம் நம்பிக்கை

திரு ம.க. ஸ்ரீதரன் அவர்கள்

இறைவழிபாடு இன்று பெருமளவு அருகிவருவது கவலைக்குரிய விடயம். வீண் அரட்டை அடிப்பதிலும், தொலைக்காட்சி நாடகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும், வானொலி கேட்பதிலுமே ஒரு நாளின் பெரும்பகுதியை பெரும்பாலோர் செலவிடுகின்றனர். இன்று நமக்கும், நம் இனத்திற்கும் ஏற்பட்டிருக்கும் இந்த மனிதப்பேரவலங்கள் சொல்லில் அடங்கா. மனிதன் மிருகத்திலும் பார்க்க கேவலமாக நடாத்தப்படுகின்றான். மனித நேயம் மரத்துப்போய்விட்டது. மனித நேயத்தைப்பற்றி பேசுவதிலும் பார்க்க செயலில் காட்டியிருந்தால் இன்று எமக்கு இந்த துர்ப்பாக்கிய நிலைகள் ஏற்பட்டிருக்காது. இவை எல்லாவற்றிற்கும் ஆணிவேராய் இருப்பது இறைவனின் மீது நம்பிக்கை கொள்வதாகும். எமது மண்ணில் உள்ள புகழ்பெற்ற ஆலயத்தில் இரத்தக்கறை படிந்த கரங்களுடன் பூஜைகள் நடந்தேறின. அதுமட்டுமல்ல இறைவனின் சந்நிதியை சிலர் ஒரு கேளிக்கை இடமாகவும், வீண் அரட்டை அடிக்கும் இடமாகவும் பாவிக்கின்றனர். ஆலயங்களின் மூலஸ்தானத்தில் கொள்ளைகள் நடக்கின்றன. இப்படியே ஆலயங்களின் புனிதத் தன்மைக்கு பலவடிவங்களில் பங்கங்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இவை ஏன் நடைபெறுகின்றன? எவ்வாறு இவற்றைக் கட்டுப்படுத்தலாம்? என்பதைச் சைவப்பெரியார்கள் எனக் கூறித்திரிபவர்களும் கண்டும், காணாததும் மாதிரி நடந்துகொள்வது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

நாம் வணங்கும் இஷ்ட தெய்வத்தின்மீது மனப்பூர்வமான நம்பிக்கை வைத்து இப்படியான நிகழ்வுகள் இனி மேலாவது நடைபெறாமலிருக்க சைவ மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது எமது தலையாய கடமை ஆகும். எமக்கு வேண்டியவற்றை இறைவனிடம் வேண்டுதல் செய்தால் கட்டாயம் அது நமக்குக் கிட்டும். நாம் இறைவனிடம் பிரார்த்திக்கும்பொழுது எமக்குப் பக்தியையும், நம்பிக்கையையும் தாருங்கள் என்று அவரிடம் மனப்பூர்வமாக இறைஞ்ச வேண்டும். நமக்கு இறைவனிடம் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அது எமக்கு ஆன்மீக வாழ்க்கையில் எல்லாம் கிடைத்த மாதிரியே. ஆதலால் நம்பிக்கைக்கு அதிக வலிமை உண்டு. நாராயண சொரூபியாகிய ஸ்ரீராமருக்கு இலங்கை போவதற்கு அணைகட்டவேண்டியிருந்தது. ஆனால் அனுமாரோ ஸ்ரீராம நாமத்தில் வைத்த நம்பிக்கையால் ஒரே தாவலில் கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்றுவிட்டார். இதைவிட இறைநம்பிக்கைக்கு வேறு சான்றும் வேண்டுமோ? நாமஸ்மரணை பெரும் சக்திவாய்ந்ததாகும். இறைவனின் எந்த நாமங்களையாவது நாம் இறைபூர்வமாக சதா உச்சரித்து வந்தால் எமக்குக் கிடைக்கவேண்டியனவெல்லாம் கிடைக்கும். இறைவனிடம் எமக்கு அதைத்தா, இதைத்தா என்று குறிப்பிட்டு

அதிகமாக சபதம் செய்பவனிடம் நம்பிக்கை கொள்ளாதே.

கேட்கவேண்டுமென்றில்லை. யார் யாருக்கு என்னென்ன தேவையென்பது அவருக்குத் தெரியும். இறைவனிடம் நம்பிக்கை வைத்திருக்கும் ஒருவர் எவ்வித கொடிய பாவகாரியச் செயல்களைச் செய்திருந் தாலும் இறைவனிடமுள்ள நம்பிக்கையின் வலிமையால் அவன் அப்பாவங்களில் இருந்து விடுதலை அடையமுடியும். அத்துடன் அவன் எதற்கும் அஞ்சத்தேவை இல்லை. ஆதலால் நாம் இறைவனுடைய நாமத்தில் தீவிர நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். நாம் இறைவனிடம் வைக்கும் நம்பிக்கை உண்மையானதாகவும், இதய பூர்வமானதாகவும் இருத்தல்வேண்டும்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர் கூறுகிறார், இறைவனிடம் நம்பிக்கை கொள்வதற்கு குருவின் துணை அவசியமென்று. அதைவிட இன்றியமை யாதது குரு வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பது இறைவனிடம் காட்சியைப் பெற்றவர்களுக்கு "நான் ஒரு இயந்திரம் இறைவன் அதை இயக்கிக்கொண்டிருக் கிறான்" என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது. ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை மட்டும் இருக்குமானால் அதிக அளவில் ஆன்மீக சாதனை பழக வேண் டிய அவசியமில்லை. குருவின் சொற் களில் முழு நம்பிக்கை வைக்கவேண்டும். இறைவனை நாம் எந்த அளவுக்கு நெருங்குகின்றோமோ அந்த அளவுக்கு அவருக்குப் பெயரும், வடிவமும் இல்லை என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கை ஏற்படும். "நான் இறைவனின் குழந்தை" என்பது போன்ற நம்பிக்கை இருந்தால் நாம் ஆன்மீக வாழ்க்கையில் மிகவும் விரைவாக முன்னேறலாம். இறைவனிடம் நம்பிக்கை இன்றி பூஜை, ஜபம் என்ப வற்றை செய்வதால் எவ்வித பயனும் கிட்டாது. திட நம்பிக்கைமூலம் இறை வனைச் சுலபமாக அடையலாம்.

வைணவ சாஸ்திரம் கூறுகின்றது, "நம்பிக்கையால் இறைவனை அடைய லாம்; விவாதம் இறைவனை நம்மிடமிருந்து வெகுதூரம் பிரித்துவிடுகின்றது" ஆகவே இறை நம்பிக்கையை நாம் நாள்தோறும் வளர்த்துவரவேண்டும். ஆசைதான் நம்மை நம்பிக்கையின்மைக்கு இட்டுச்செல்கின்றது. பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா கூறுகின்றார்:- "இறைவனை மறவாதே. உலக பந்தத்தில் நம்பிக்கை வையாதே. இறப்பதற்கு அஞ்சாதே. நாம் இறைவனிடம் சரணாகதி அடைந்துவிட்டால் நமக்கு ஒன்றுமே ஏற்படாது" எனவே நாம் இறைவனிடம் எம்மைப் பரிபூரணமாக ஒப்படைக்க வேண் டும். கடவுளில் வைக்கும் நம்பிக்கை நம்மிலும், பிறரிலும் நம்பிக்கையை ஏற் படுத்தும். அதன் பயனாக உலகில் மகிழ்ச்சி பெருகும்.

இன்றைய மனிதன் காலையில் பக்தி சம்பந்தமான விஷயங்களில் ஈடுபட்டு நண்பகலில் புலன்களுக்கு இன்பமளிக்கும் விழாக்கள், ஆடம்பரங்கள் என்பவற்றில் களிப்படைந்து, இரவில் கோயில் உழல் கின்றான். இறைபக்தி என்பது நாளின் சில குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் செய் யப்பட்டு பின்னர் கவர்ச்சிகளினால் அமிழ்த் தப்படுவதற்குரியதொன்றல்ல. பக்தியானது தொடர்ச்சியான, இடையறாத மன நெகிழ்ச் சியும், சிந்தையின் பழக்கநெறியும், வாழ்க்கை முறையுமாகும். அவமானம், துன்பம், மகிழ்ச்சி, கஷ்டம், அதிகாரம், ஆடம்பரம் ஆகிய எவை நேரிடினும் விசு வாசத்துடன் பிடித்துக்கொள்ளப்படுவ தொன்றே இறைநம்பிக்கையாகும். இறை நம்பிக்கை கட்டப்படவேண்டியதற்குரிய பாதுகாப்பான அத்திபாரம் இறைவன்

உழைப்பு பிழைப்புக்காக மட்டுமில்லாமல் உண்மையாகவும் இருக்கவேண்டும்.

மீதுள்ள விசுவாசமாகும். அந்த விசுவாசம் நிலையானதாகவும், பலமானதாகவும் இருத்தல் வேண்டும். இறைவன் மீது பூரண நம்பிக்கை வைத்து அவருடைய சித்தத்துக்கு அடிபணிவதன் மூலமே சாந்தியைப்பெறமுடியும். இறைவன்மீது நம்பிக்கை வைத்து உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளுங் கள். அவர் உங்களுக்குள்ளேயும், உங் களுடனும் இருக்கிறார். உங்களுக்கு எவற்றை எப்போது கொடுக்கவேண்டு மென்பதை அவரே நன்கு அறிந்தவர். அவர் பிரேமை நிறைந்தவர். ஒவ்வொரு மனிதனும் ஆனந்தத்தைப்பெற ஆசைப் படுகிறான். எங்கேயிருந்து அதைப்பெற முடியும்? இறை நம்பிக்கை ஒன்றுதான் ஆனந்தத்தை வென்றெடுக்கும். ஆனந் தத்தின் ஊற்று நம்பிக்கையாகும். ஆனால் இப்பொழுது எங்கு பார்த்தாலும் துயரத் தையே காண்கிறோம். ஏன் இப்படியா யிற்று? காரணம் மனிதன் இறைவனிடம் நம்பிக்கையை இழந்து விட்டதுதான். அவனுக்குத் தன்னிலே நம்பிக்கை இல்லை. அப்படியிருக்கும்பொழுது எப்படி அவன் ஆனந்தத்தைப் பெறமுடியும். சில நாட்களுக்கு சந்தோஷமாக இருப்பதற்கு தேவையான நம்பிக்கைகூட இல்லாதவன் எப்படி இறைவனிடம் நம்பிக்கைகொள்ள முடியும். இறைவன் மீதுள்ள நம்பிக்கை மனிதன்மீது நம்பிக்கையை ஏற்படுத்தும். இறைநம்பிக்கையற்றவன் வேர் இல்லாத செடிபோன்றவன். விரைவில் காய்ந்து, சருகாகி விடுவான். இறைவனிடம் நம்பிக்கையில்லாத மனிதன் அந்தகனாய் இருப்பான் என குருநானக்கூறுகின்றார். இறைவன்மீது கொண்டுள்ள நம்பிக்கை அங்கலாய்ப்பை நீக்கிவிடும். என்ன நடந் தாலும் அது நன்மையின் பொருட்டே என்பதையும், என்றும் இறைவனின் சங்கல்பமே நிறைவேறும் என்பதையும் எடுத்துரைக்கும் நம்பிக்கையே அதுவாகும். சூரியன் உங்கள் உச்சிக்குமேல் நிற்கும் பொழுது நிழல் இருக்கமாட்டாது. அது போலவே இறைநம்பிக்கையானது உங்கள் சிரசில் உறுதியாக இருக்கும் பொழுது சந்தேகம் என்னும் நிழல் ஏற்படாது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கணப் பொழுதையும் உண்பதற்கும், உடுப்பதற் கும் உழைக்க வேண்டியிருக்கையில் இறைவழிபாட்டிற்கு எங்களுக்கு நேரம் எங்கேயிருக்கிறது? என்று நீங்கள் கேட்கக் கூடும் ஆனால் நீங்கள் பூரணமாக இறை வனிடம் நம்பிக்கை வைத்தால் இறைவன் இந்த உலகாயுதப் பொருட்களை மட்டுமல்ல நித்திய வாழ்வையே தந்தருளுவார் என்பதை மறந்துவிடுகின்றீர்கள். நீங்கள் எதைச்செய்யும் பொழுதும் முருகா, விநா யகா, ராமா, கிருஷ்ணா, சிவா, ஓம் ஸ்ரீசாய் ராம் என்ற நாமங்களில் ஒன்றை உங்கள் நாவில் உச்சரித்தபடி செய்யுங்கள். இப் படிச் சொல்வதற்குத் தனிப்பட்ட நேரமோ, சக்தியோ வேண்டியதில்லை, இரவில் நித்திரையாகும்பொழுது நாமத்தை நாவில் உச்சரித்தபடி உறங்குங்கள். அதேபோல் காலையில் நித்திரையால் எழும்போதும் நாமத்தைக்கூறியபடி எழும்புங்கள். இது இறைவனிடம் நம்பிக்கை ஏற்படுவதற்கு ஒரு சிறந்த வழிமுறையாகும்.

இறைவனை நம்புங்கள். அவர் ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டார். நீங்கள் வெற்றிபெறும்வரை உங்களைப் பாதுகாத்து வழிநடத்துவார். மனப்பூர்வமான பக்தியும், அசையாத நம்பிக்கையும் அவ ருடைய திருவருளை என்றும் பெற்றுத் தரும் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை.

"ஸமஸ்தா லோகா சுகினோ பவந்து"

கவலைகள் மறக்க கடமையைச் செய். மனம் நிம்மதி அடையும்.

உ

# கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி....

திருமதி கவிதா லலீசன் அவர்கள்

இன்றைய சராசரி மனிதன் தனது சிந்தனையையும் சக்தியையும் நேரத்தையும் பெருமளவிற்கு பொருள் சம்பந்தப்பட்ட வாழ்க்கையின் உயர்நிலையை அடைவதற்கே செலவிடுகிறான். அவ்வாறு வெற்றியை அடைந்த நிலையிலும் வாழ்வில் மிகுந்த துயரமும் துன்பமும் நிறைவற்ற தன்மையுமே குடிகொண்டிருக்கக் காணலாம். இது சமநிலையற்ற வாழ்வின் விளைவே.

பறவை ஒன்று சிரமமற்று சீராகப் பறப்பதற்கு இரு சிறகுகள் தேவைப் படுவதைப் போல ஒரு மனிதன் இயற்கையான இசைவானதொரு வாழ்க்கை வாழ லௌகீகம் ஆன்மீகம் ஆகிய இரண்டு அம்சங்களுமே அவனுக்குத் தேவைப் படுகின்றன. இவற்றில் ஒன்றுக்காக மற்றொன்றை உதாசீனப்படுத்தினால் அந்த வாழ்க்கை இயற்கைக்கு மாறான ஒன்றாகி விடுகின்றது. நவீன காலத்தில் நாம் ஆன்மீக வாழ்க்கையை கிட்டத்தட்ட முழுமையாகப் புறக்கணிக்க முயல்கிறோம். இதனால் முழுமை பெறாத உடைந்து போன வாழ்க்கையையே நடத்தி வருகிறோம்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்கள் ஆன்மீகத்தைப்பற்றி விளக்கம் அளிக்கையில் "தன்னிடம் உள்ள விலங்கு உணர்வை வென்று மனிதத் தன்மையினை தெய்வீகத்துடன் கூட்டுதலே ஆன்மீகமாகும்" என்கிறார். மனிதன் விலங்குணர்வை வெல்வதற்கு முதலில் பஞ்சமா பாதகங்கள் என எமது அறநூல்கள் குறிப்பிடும் கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் எனும் ஐந்து குற்றங்களையும் விலக்கி நடக்க முற்படல் அவசியமானது. "ஒழுக்கமே ஆன்மீக வாழ்வின் திறவுகோல்" என ஞானிகள் கூறுகின்றனர். ஆன்மீக வாழ்வில் தேர்ச்சிபெற பஞ்சமாபாதகங்களை விலக்கி வாழ்தல் முக்கியமானது.

எமது உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையில் தொடர்பு உள்ளது. உடலிலே உண்ணும் உணவால் உண்டான வன்மை உள்ள உணர்வுகளுடன் தொடர்புடையது. சாத்வீக உணவுகளை (தாவர உணவுகள்) உட்கொள்பவர் உள்ளத்தில் சாத்வீக குணங்கள் மேலோங்கும் மாமிச உணவு உண்ணல். மதுபானம் அருந்துதல் போன்றவை இராட்சத குணங்கள் தலையெடுக்க தூண்டவல்லது. பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் எனும் தீய குணங்களை வளர்க்க உதவுவது தெய்வீக உணர்வை செயலிழக்கச் செய்து மிருக உணர்வுகளைத் தூண்ட வல்லது ஆன்மீக உணர்வை அழிக்க வல்லது.

"ஜீவகாருண்யமே மோட்சவீட்டின் திறவுகோல் எமது சமயம் வலியுறுத்தும் உண்மைகளுள் ஒன்று" இதையே தாயுமானவர்.

எல்லாவற்றையும் தியாகம் செய்யும் துறவு நிலையால் இறவாநிலை எய்துகிறது.

**"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும்நின்**

**தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே"**

என்கிறார். குழந்தைகளிற்கு வாழும் முறைமையை விளக்கி மகாகவி பாரதியார் அவர்கள் பாப்பாப்பாட்டில்,

**உயிர்களிடத்திலன்பு வேண்டும் – தெய்வம்**

**உண்மையென்று தானறிதல் வேண்டும்.....** என்கிறார்.

ஈசாவாஸ்ய உபநிஷதத்தில் எல்லா உயிர்களையும் ஒருவன் தன் உடலில் உள்ளதாகவே காணவேண்டும். தன் உயிரை எல்லாப் பிராணிகளின் உடலிலும் காணவேண்டும். அத்தகைய அறிவை ஒருவன் அடைந்துவிட்டால் வெறுப்பு, பயம் என்பன அவனுக்கில்லை" எனக் கூறப்பட்டுள்ளது. இதையே பகவத்கீதையின் 35ஆம் சுலோகம் "பிற உயிர்கள் அனைத்தையும் உன் உயிரில் காண்பாய் உயிர்கள் அனைத்தும் என்னில் நிற்பதைக் காண்பாய்" என பகவான் அருளியதாக கூறுகின்றது. கொலைத் தொழில் செய்யாதவனும் பிற உயிர்களின் ஊன் உடலை புசிக்காத வனுமாகிய ஒருவனை எல்லா உயிர்களுமே வணங்கும் என்பது திருவள்ளுவரின் அறக்கருத்து.

'பசு' இந்து மதத்தில் மிக உயர்நிலையில் வைக்கப்படும். அப்பிராணியையே கொன்று பசுவதை புரிந்து உண்ணும் ஈனர்களும் நம் மத்தியில் உருவாகி உள்ளனர். இது கொடிய பாவச்செயலாகும்.

மாமிச உணவுகளை உட்கொள்ளுதல் எமக்கு பல்வேறு வழிகளிலும் தீமையையே தரவல்லது.

1. இவ் உணவால் குருதிக் குழாய்களில் கொழுப்புக்கள் படிதல் உயர்குருதியமுக்கம், இதயநோய்கள், புற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2. உப்பு, புளி, காரம் என்பன மிகுதியாக உள்ள இவ் உணவுகள் உடலுக்கு அதிக உஷ்ணத்தைத் தந்து உடலின் சமநிலையைக் கெடுக்கின்றன.

3. உணவுக்காக ஆடு, மாடு, கோழி என்பவற்றைக் கொல்லும்போது அம்மிருகங்களின் உடலில் பரவும் ஒருவகைப் பயம் காரணமாக தசைகளில் விஷப் பொருட்கள் உற்பத்தியாகின்றன.

4. உப்பு, புளி, காரங்கள் மிகுதியாக சேர்க்கப்படும் இவை சமிபாட்டு நொதியங்களையும் சடைமுளைகளையும் பாதிக்கின்றன.

5. சிறுநீரகங்களில் கற்கள் உருவாகவும் இரத்தக் குழாய்களில் கரையாத கொழுப்புப் படிந்து அடைப்பு ஏற்படவும் காரணமாகிறது.

6. மாமிச உணவில் நீர்ச்சத்து, நார்ச்சத்து இல்லாத காரணத்தால் குடலில் நகரும் தன்மை குறைவதனால் மலச்சிக்கல், குடல் பூச்சிகள் உருவாகின்றன.

7. உணவுக்காக கொல்லப்படும் பிராணிகளில் உள்ள நோய்கள் உண்போரையும் கொல்கின்றன. கோழிகளில் பறவைக் காய்ச்சல் நோய்.

எமது உடல் எமக்குத் தேவையான அமினோ அமிலங்கள் பலவற்றைத்தானே தொகுக்கக்கூடியது. ஏனையவற்றையே நாம் உணவில் இருந்து பெறவேண்டியுள்ளது.

**துன்பத்தால் ஏற்பட்ட துயரங்களைத் தன்னம்பிக்கையே போக்கவல்லது.**


ஒருசில அமினோஅமிலங்கள் தவிர பிற அனைத்தும் தாவர உணவுகளில் இருந்து பெறமுடியும். மேலும் நமது முன்னோர்கள் தாவரங்களின் நோய்தீர்க்கும் ஆற்றலை (மூலிகை) கண்டறிந்துள்ளனர். பச்சை மரக்கறிகள், பழங்கள், தானியங்களை உண்பது பல்வேறு நோய்களில் இருந்தும் எம்மை பாதுகாப்பதாக தற்கால மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

"ஒவ்வொரு உயிரிலும் கடவுள் இருக்கின்றார் ஜீவனே இறைவன், இறைவனே ஜீவன் எந்த விலங்கினையும் பலியிடுதல் தகாத செயல் உயிரினங்களிற்கு துன்பம் தருதல் தகாது உங்கள் அன்பை பறவைகள், விலங்குகள் சகமனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் அதுவே உண்மையான மோட்சத்திற்கு வழி" என உலகம் போற்றும் அவதார புருஷரான பகவான் சத்தியசாயி உபதேசிக்கின்றார்.

எனவே பழக்கப்பட்டவைகளை உடனே கைவிடுவது கடினம் எனினும் "தன்னுயிர் போல் மன்னுயிர் ஓம்பி" பல வியாதிகளையும் பெரும் பாவத்தையும் தரும் உயிர்வதையால் உணவு உட்கொள்ளலைத் தவிர்த்து எமது சமயம் கூறும் ஒழுக்கவிழுமியங்களின் படி நடந்து! முழுமைபெற்ற சமநிலை உள்ள வாழ்வு வாழ்வோமாக.

உசாவியவை:


1. கைவிளக்கு - ராஜாஜி
2. சத்தியம் சிவம் சுந்தரம் - ஸ்ரீ சத்தியசாயி நிறுவன வெளியீடு.

ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசு பெற்ற செல்வி கலையரசி சத்தியபாலன் அவர்களுக்கு மாசி மாத மலர் மதிப்புரைக்கு வருகை புரிந்த முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு.

பயத்தை வெல்லாதவன் வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன்.

உ

(தொடர்ச்சி...

# 'ராம' பிரம்மம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

இராமாயண காவியத்தில் அநுமன் ஒரு முக்கிய பாத்திரம். இன்னல்கள் தீர்க்கின்ற இனிய ஆஞ்சநேயர் ஸ்ரீ ராம பிரானின் பக்தராவர். சீதா பிராட்டியைத் தேடிப்புறப்பட்டதுமுதல் ராமர் பட்டாபிஷேகம் வரையில் இவரது அருஞ்செயல்கள் அருமையாகக் கூறப்பட்டுள்ளது. அவர் தனக்கென வாழாத் தகைமையாளர். பிறர்நலம் பேணும் பெரியோன். ஸ்ரீ ராமனின் துணைபெற்று சுக்ரீவனுக்கு இழந்த அரசையும், மனைவியையும் மீட்டுத் தந்தவர். பின்பு சுக்ரீவனின் வானரப் படைத் துணையுடன் சீதா பிராட்டியை மீட்க மூலகாரணமாய் அமைந்தவர். இரு இல்லங்களில் குடும்ப விளக்கு ஏற்றியவர். ஆனால் அவர் நைஷ்டிக பிரமச்சாரி. நீதியில் நின்றவர். வாய்மை சமைத்தவர். தன் பெருமையால் இறுமாப்புக் கொள்ளாதவர் சற்றும் ஆணவம் இல்லாத சான்றாண்மை அநுமனிடம் அமைந்திருந்தது. "பணியுமாம் என்றும் பெருமை" என்ற வள்ளுவர் கூற்றுக்கு மாருதியின் தத்துவ மிக்க வாழ்க்கையே ஒரு வரலாறு.

'ராம' பிரம்மத்தை முதல் முதலில் தரிசிக்கப்பெற்ற அநுமன் ரமித்து நின்றது இப்பாடல்.

**"துன்பினைத் துடைத்துமாயத்**
**தொல்வினை தன்னை நீக்கித்**
**தென்புலத் தன்றி மீளா**
**நெறி உய்க்கும் தேவரோதாம்!**
**என் பெனக் குரு கின்றது!**
**இவர்கின்றது அளவில் காதல்**
**அன்பினுக் அவதியில்லை**
**அடைவென்கொல்? அறிதல் தேற்றேன்!"**

"ராம" என்ற சொல்லுக்கு ரமிக்கச் செய்பவன் என்றும் அர்த்தம். ரமித்தல் என்றால் மயங்குதல்.

**"அளித்தருள் மெய்ப்பொருளுக்கே**
**இராமன் எனப் பெயர்"**

பரப்பிரம்மம் ராமன் எனப்பெயர் பெற்று வந்ததாம். அம்பாள் லலிதா பரமேஸ்வரிக்கும் "ராமா" என்ற திருநாமம் உண்டு. ரூபசௌந்தர்யம், குண சௌந்தர்யம் இரண்டாலும் அண்ட சராசரங்களனைத்தையும் தன்னிடம் ரமிக்கச் செய்தது ராம பிரம்மம். இராமன் கண்ணழகன், அவன் கண்ணழகுக்கு தாமரை மலரை உவமையாகக் கம்பர் சொல்வர்.

**"தயரதன் புதல்வன் என்பார் தாமரைக் கண்ணன் என்பார்"**

அழிவுக்குமுன் கர்வம் வரும் வீழ்ச்சிக்குமுன் திமிர் வரும்.

**"செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினொடும்**
**சந்தார் தடந் தோளொடும் தாழ் தடக்கை களொடும்**
**அந்தார் அகலத்தொடும் அஞ்சனக் குன்றம் என்ன**
**வந்தான் இவனாகும் அவ் வல் வில் இராமன்"**

சூரியனுக்குள் பொன்போன்று ஒளிரும் பரம புருஷன் காணப்படுகிறான் அவனுடைய கண்கள் இரண்டும் தாமரை மலர் போன்றவை என்பது உபநிஷத் சொன்ன உவமை.

ராமரின் அழகில் ரமித்து நின்ற ஆஞ்சநேயரை முதன்முறை சந்தித்தபோதே அவரைப்பற்றி முழுமையாக உணர்ந்து கொண்டவர் ராமர். எல்லா விதத்திலும் உயர்ந்தவரான ஆஞ்சநேயர் சுக்ரீவனின் மந்திரியாக இருந்தார். 'பரிதி மகன் வாசல் மந்திரி அநுமன்' என்கிறார் அருணகிரிநாதர். அத்துடன் கவசமந்திரி என்ற பட்டமும் தருகிறார். இந்தப்பட்டத்தை அருணகிரிநாதரைத்தவிர வேறு எவரும் ஆஞ்சநேயருக்குத் தரவில்லை. சுக்ரீவனுடன் ராமருக்குத் தோழமையை உண்டாக்கி அவனைக் காத்தது, சீதையிடம் மோதிரம் தந்து அவளின் உயிரைக் காத்தது, சுக்ரீவன் சீதையைத் தேடக்குறித்த கெடு தாண்டியதும் உயிரை விடத் தீர்மானித்த வானர வீரர்களுக்கு ஆறுதல்சொல்லி அவர்களின் உயிரைக் காத்தது. யுத்த களத்துக்கு மருத்துமலையைக் (சஞ்சீவிமலை) கொண்டுவந்து ராம இலட்சுமணர்கள் உயிரைக் காத்தது எனப் பலவகையிலும் "கவச"மாக இருந்து உயிர் காத்ததால், ஆஞ்சநேயரைக் 'கவச அநுமான்' என்கிறார் அருணகிரிநாதர்.

சீதையைத்தேடி வானர வீரர்கள் எல்லாத் திசைகளுக்கும் அனுப்பப்பட்டனர். தெற்குத் திசைக்கு ஆஞ்சநேயர் அனுப்பப்பட்டார். கவசஅநுமன், அறம் தழைத்த அநுமன் என்றெல்லாம் பலவிதமாக அநுமாரை அழைத்த அருணகிரிநாதர் இந்தக்கட்டத்தில் 'குறிப்பில் குறிகாணு மாருதி' என்று மற்றொரு திருநாமம் சூட்டுகிறார்.

**குறிப்பிற் குறிகாணு மாருதி**
**யினித் தெற் கொருதூது போவது**
**குறிப்பிற் குறி போன போதிலும் வரலாமோ.**

(உடுக்கத்துகில்)- திருப்புகழ்

ஆஞ்சநேயரைப்பற்றி முழுமையாக உணர்ந்துகொண்ட ராமர், சீதையைப்பற்றிய அடையாளங்கள், மற்றும் தகவல்களை ஆஞ்சநேயரிடம் மட்டும் சொன்ன ராமர், தனது மோதிரத்தையும் அவரிடம் கொடுத்து அனுப்பினார். மாருதி மனமகிழ்ச்சியுடன் தூது போனார். ஜடாயுவின் சகோதரர் சம்பாதி மூலம், சீதை இலங்கையில் இருக்கும் தகவல் கிடைத்தது. மாருதி இலங்கைக்குப் போய் ராவணனின் அரண்மனையில் அவன் மனைவி மண்டோதரியைப் பார்த்ததும் 'ஆகா சீதையைக் கண்டுவிட்டேன்' என்று தவறாக நினைத்து விட்டார். அதாவது குறிப்புத் தவறிவிட்டது. ஆனாலும் உடனே திரும்பிவிடவில்லை இதைத்தான் "குறிப்பில் குறி போனபோதிலும் வரலாமோ' என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

**நம்முடைய செயல்களே நாம் எப்படிப்பட்டவர் என்பதைப் பிறருக்கு உணர்த்தும்.**

அலைவீசும் கடல் கடந்து முழுவஞ்சகர்களான அரக்கர்களை வெல்லும் வீரரான ஆஞ்சநேயர், சீதாதேவி இருந்த அசோக வனத்துக்குச் சென்றார். பத்து மாதங்களாக சிறையிலிருந்து அரக்கர்களின் கொடுமைகளினால் துன்பம் தாங்கமுடியாது சீதாதேவி உயிரைவிடத் துணிந்த சமயம் 'ராம' நாமத்தைச் சொல்லியவண்ணம் ஆஞ்சநேயர், சீதையைத் துன்புறுத்திய அரக்கிகளை எல்லாம் தனது சக்தியால் நித்திரையில் ஆழ்த்திவிட்டு, பிராட்டியாரை வணங்கித் தான் ராம தூதுவன் என்று சொல்லி ராமர் தந்த தங்க மோதிரத்தையும் சீதாதேவியிடம் தந்தார். தேவியின் வியாகுலத்தைத் துடைத்தவர். "என்றும் சிரஞ்சீவியாய்இரு" என்று கருணை மிகுந்த அன்னையால் வெற்றிலையால் ஆசீர்வதிக்கப்பட்டார். அழிவற்ற சிரஞ்சீவி ஆஞ்சநேயர் எங்கெல்லாம் ராமாயணம் ஓதப்படுகிறதோ, எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் பிரசன்னமாயிருந்து தலையிலே கைகூப்பி ஆனந்தக்கண்ணீர் சொரிய தியானத்தில் இருப்பர்.

இராம சேவைக்கென்றே அவதரித்தவர் ஆஞ்சநேயர்

**அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி**
**அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க்காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலாளுரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக்காப்பான்**

சீதாதேவி தந்த சூடாமணியைப் பெற்றுப் பின்பு இலங்கையில் நெருப்பு வைத்து அருள் இல்லாத வீடுகளை மட்டும் தீ பற்றிக்கொள் என்று சொல்லி நெருப்பு வைத்தார்.

**இலங்கையிலங்கிய, இலங்களு ளிலங்கரு**
**ளி லெங்கனு மிலங்கென முறையோதி**
**இடுங் கனல் குரங்கு** (தலங்களில்) திருப்புகழ்

எனவேதான் அருள் உள்ளம் கொண்ட விபீஷணன் போன்றோரின் வீடுகள் தீக்கு இரையாகாமல் தப்பித்தன.

ஆஞ்சநேயர் திரும்பிவந்து ராமரிடம் சீதையைப் பார்த்த தகவல்களைச் சொல்லி, அவர் தந்த சூடாமணியையும் ராமரிடம் அளித்து ராமருக்கு மகிழ்ச்சியூட்டி, தானும் மகிழ்ந்தார்.

(தொடரும்...

## இறைவனை முப்போதும் நினை

காலையில் எழுந்தவுடன் இறைவனை ஒருகணமாவது நினை "இறைவனே! இன்று நான் நல்வழியில் நிற்க அருள்செய் என்று தொழு". உணவு உட்கொள்ளும்போது நினை "இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள்புரி என்று தொழு" படுக்கும்போது நினை "இறைவனே! இந்த உறக்கத்திலே உன்னுடைய எண்ணமே நிற்க அருள்புரி என்று தொழு

**குறை சொல்பவர்கள் தேவையில்லை. வழிகாட்டுபவர்களே தேவை.**

உ

# தாய்த் தெய்வ வழிபாடு

இரா. செல்வவடிவேல் அவர்கள்

உலகின் முதன்முதலில் கண்விழித்துப் பார்க்கும் குழந்தை தாயைத்தான் பார்க்கிறது. தாய் சொல்லிக்கொடுத்துத்தான் தந்தையை, தெய்வத்தை உலகத்தையே அறிகிறது.

**"தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி**
**ஏயுமதே நீட்டை"**

என்று பெரியோர்கள் இந்த உண்மையை ஆன்ம அனுபவத்தோடு இணைத்துப் பேசியிருக்கிறார்கள்.

சைவம், வைணவம் என்ற இரண்டு பெரும் பிரிவுகளிலும் தாய்த் தெய்வம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறாள்.

சைவம் தாய்த் தெய்வத்தை அம்பிகை என்கிறது. அந்தத் தாய் இறைவனுடைய கருணைதானே ஒழிய வேறு ஒன்று அல்ல என்கிறது சைவம்.

"அருளது சக்தி ஆகும் அரன் தனக்கு" என்கிறது சிவஞான சித்தியார். இந்தச் சக்தியோடு இணைந்துதான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் இறைவனால் செய்யமுடிகிறது.

இறைவன் உலக மக்களைக் கரையேற்றுவதற்காக என்னென்ன வேடம் போடுகிறானோ அவற்றிற்கேற்ற வேடத்தை சக்தியும் போட்டுக்கொள்கிறாள் என்கிறது சைவசித்தாந்தம்.

**பிரமனாக வேடம் போட்டால் வாணியாகவும்–**
**விஷ்ணுவாக வேடம் போட்டால் திருமகளாகவும்–**
**உருத்திரனாக உருவம் பூண்டால் ரௌத்திரியாகவும்–**
**மகேசுவரனாக உருவம் எடுக்கும்போது மாகேஸ்வரியாகவும்–**
**சதாசிவனாகத் திகழும்போது மனோன்மணியாகவும்**

அவள் வடிவம் எடுத்துக்கொள்கிறாள்.

அதாவது இறைவன் தன் திருவிளையாடல்களைச் செய்யும்போது அருளின் பலதிற வடிவங்கள் உடனின்று இணைகின்றன.

அம்பிகையின் பார்வைபட்டால்த்தான் இறைவன் அருள் நமக்குக் கிடைக்கும் என்கிறது சைவம்.

"மடவாள் தானோடும் அருள் காரணத்தின் வருவார்" என்கிறது தேவாரம். பெரியபுராணத்தில் அடியவர்களைச் சோதிக்கும் நேரத்தில் எல்லாம் தனியாக வருகிறார் கடவுள். அவர்களுக்கு அருள்செய்யும் போதெல்லாம் "இடபவாகன ரூடராய், இமயவரை பயந்த பச்சைக்கொடி போன்ற உமையவருடன் தோன்றினார் என்கிறார் சேக்கிழார்.

இறைவன் பார்வைபடுமுன் உமையவள் பார்வைபடுதல் வேண்டும். அதற்குச் சக்தி நி பாதம் என்று பெயர். திருவருள் பதிவு என்று பொருள்.

**உன்மீது நம்பிக்கை வை இந்த உலகம் உனக்குப் புரியும்.**

மனிதனுக்கு உள்ளதுபோல ஆண்டவனுக்கும் அறிவு, விருப்பம், செயல்கள் உண்டு. இவற்றையே இச்சை, கிரியை, ஞானம் என்று சொல்வார்கள். இவைகளையே தத்துவம் உணர்ந்த பெரியோர்கள் இறைவன் பக்கத்தில் அவன் துணைவியராகக் கண்டு மகிழ்கிறார்கள்.

இறைவன் சிருஷ்டி முதலிய தொழில்களைச் சக்தியோடு இணைந்து நின்றே செய்கிறான். அதனால் சக்தி உலகுக்குத் துணைக் காரணமாகிறாள்.

சக்தியோடு சேர்ந்தால்த்தான் படைப்பு முதலிய தொழில்கள் நடக்கின்றன. பக்தர்களுக்கு அருளும் "பாவனை" நடக்கிறது.

**"படைப்பாதி தொழிலும் பக்தர்க்கு அருளும் பாவனையும்**
**இடம்பாக மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்**
**அடைப்பான் ஆம் அதுவும் மூத்தி அளித்திடும் யோகும், பாசம்**
**துடைப்பான் ஆம் தொழிலும் மேனி தொடக்கானேல் சொல்லொணாதே"**

சிவாலயங்களில் தனியான அம்பிகை சந்நிதிகள் முற்காலத்தில் இல்லை. பிற்காலச் சோழர்கள் காலத்தில் தனி அம்மன் சந்நிதிகள் தோன்றின. வங்கம், லாடம் முதலிய பகுதிகளில் இருந்து சாக்தர்கள் தமிழகத்தில் சக்தி வணக்கத் தனிச்சமயத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போதெல்லாம் கோயில்களில் எந்த நியதியுமின்றி விரும்பிய தனி வடிவங்கள் உருவாகத் தொடங்கி விட்டது. ஐயப்பன், சனீஸ்வரன், விஸ்வகருமாவடிவம் என விரும்பிய வடிவங்கள் அமைக்கப்படுகின்றன.

சப்த கன்னிமார் வடிவச் சக்தி வழிபாடு மிகப்பழமையானது. குக்கிராமங்களில் கூட (தமிழகத்தில்) சப்த கன்னிகை கோயில்கள் ஆலமரத்தின் அடியிலும், அரசமரத்தின் அடிகளிலும் அமைந்திருப்பதைக் காணலாம். ஏழு கன்னிமார் (சப்த மாதர்களின்) முழுமைப் பிழம்பான அம்பிகை வடிவங்கள் ஒவ்வொரு கோயிலிலும் உருவானபின் வைஷ்ணவி, மாகேஸ்வரி, பிராமி முதலிய வடிவங்களில் தனிச்சந்நிதியில் கோயில் கொண்டார்கள்.

இந்திரபோகத்தை அருள்பவள் இந்திராணி. வீரத்தைத் தந்து பகைவர்களை அழிப்பவள் வராகி. இம்மை மறுமைப் பயன்களைத் தருபவள் மாகேஸ்வரி. காப்பவள் வைஷ்ணவி. ஒடுக்குபவள் காளி.

வீரத்தோடு ஞானத்தையருள்பவள் கௌமாரி. கல்வியைத் தருபவள் பிராமி இவர்கள்தான் பழைய சக்திவழிபாட்டு எச்சங்கள். தனி அம்பிகைச் சந்நிதி ஏற்பட்ட பின்னால் அங்கங்கு கேட்பாரற்றுக் கிடந்த சப்த மாதர்கள் சிவாலயங்களில் பரிவார தேவதைகளாக மாறிவிட்டார்கள். ஏழுபேரைத் தனியாகப் பிரிப்பது வழக்கம் இல்லை.

ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால் காவல்த் தெய்வமாகத் தாய்த் தெய்வமே இருப்பதைக் காணலாம். இந்தப் பழமையை நினைவு ஊட்டும் வகையில் எந்தச் சிவாலயத் திருவிழாவிலும் கிராமத் தெய்வமாகிய பிடாரிக்கோ, காளிக்கோ முதலில் காப்புக் கட்டிய பின் தான் திருவிழாத் தொடங்குகிறார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் பரிவாரக் கோயிலாக

உள்ள காளிகோவிலில் (தட்டாதெருவுக்கு அண்மையில் உள்ளது) காட்டுக்கட்டிய பின்னர் பெருந்திருவிழா நடைபெறும் முறை இன்றும் உள்ளது.

கிராமங்களில் தனிக்கோவில் களில் இருக்கும் தாய்த் தெய்வமாகிய சக்தியை வழிபடும் மக்கள் உதிரப்பலி கொடுப்பதுகூட சில இடங்களில் வழக் கத்திலிருக்கிறது. உதிரப்பலி கொடுக்கும் போது மூலவருக்குத் திரைபோட்டுவிடும் வழக்கமும் உண்டு. சில கோவில்களில் உதிரப்பலி கொடுக்கும் வழக்கம் இன்றும் உண்டு. அண்மைக்காலமாக பலிகள் நிறுத்தப்பட்டு வருகின்றது. இது சமய வளர்ச்சியில் ஜீவகாருண்யம் விளைவித்த மாற்றமாகும்.

உதிரப்பலியைப் பற்றிய வரலாற் றுச் செய்தியொன்றுண்டு. சிறுகுழந்தைப் பருவத்தில் அச்சத்தால் நடுங்கும் குழந்தை தாய்மையின் அரவணைப் பையே நாடுகிறது. இதனால்த்தானோ என்னவோ காக்கும் கடவுள் வடிவங்கள் பெண்வடிவங்களாகத் திகழ்கின்றன.

கையில் பாசம், அங்குசம், உலக்கை, வில், அம்பு, சூலம், கட்டாரி முதலிய வகைகளைத் தாங்கிக்கொண்டு நிற்கும் காவல்த் தெய்வமாகிய காளியைப் போருக்குச் செல்லும் மறவர்கள் வழிபட்டுச் செல்வார்கள். வெற்றிபெற்றுத் திரும்பிய வீரர்கள் சினமடங்கிய, மகிஷனை வென்று புன்னகை பூக்க நிற்கின்ற- துர்க்கையை வழிபடுவார்கள் இது பழங்காலத்தில் நடந்தது.

போரில் இரத்தம் வெள்ளமாகப் பாயும் யானையும், குதிரையும் மனிதர் களும் கொல்லப்படுவார்கள். குற்றுயிரும், குலை உயிருமாகத் துடிப்பார்கள். கை, கால்கள் துண்டிக்கப்பட்டுத் துன்பப்படு வார்கள். வீரர்கள் இந்த வேதனைக் காட்சியைக்கண்டு சோர்வு அடையலாகா தல்லவா? அதற்காகவே காளிகோவில் களில் எருமைகளைப் பலியிட்டு இரத்தத் தைச் சகித்துக்கொள்ளும் மன இறுக்க மும் துணிவும் பெறுவார்கள்.

போர்களுக்காகத் தொடங்கிய இந்த இரத்தப்பலி பிற்காலத்தில் சடங்கு அளவாக மாறிப்போயிற்று. இப்போது இரத்தம் சிந்தாமல் இறக்கும் போர் நடை பெறுவதனால் இரத்தப்பலி அவசியமில்லா மல் போய்விட்டதுபோலும்!

இலங்கையில் மாரிஅம்மன், கண்ணகிஅம்மன் வழிபாடு சிறப்பான தாய்த்தெய்வ வழிபாடாகும். சிலப்பதிகாரக் கதையில் வரும் கண்ணகியும் பத்தினித் தெய்வம் என்ற நிலையில் காலப்போக் கிலே அம்மன் ஆகிவிட்டாள். யாழ்ப்பாணத் தில் கண்ணகி வழிபாடு பல வடிவங்களில் உண்டு. பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, மானிப்பாய், புங்குடுதீவு, நயினாதீவு, சாவகச்சேரி ஆகிய பல இடங்களில் கண் ணகி கோவில்கள் இருந்தன. இவ் ஆலயங்கள் இடைக்காலத்தில் "கண்ணகி அம்மன்" கோவில்கள் என அழைக் கப்பட்டு, இப்போது கண்ணகி முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டது. பன்றித்தலைச்சி (கண்ணகி) அம்மன் கோவில் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

காவல்த்தெய்வ வழிபாடு எளிமை யான முறையில் எந்த விதிகளுக்கும் உட்படாமல் மக்களின் பக்தி உணர்வுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நடை பெற்றது. இந்தத் தாய்த்தெய்வக் கோவில் களுக்குள் "ஆகமம் புக ஆரம்பித்தது. இதனால் கோவில்கள் வடிவம், பெயர்,

வழிபடுமுறையில் மாற்றத்திற்குள்ளாகியது. கொடிமரம் வைத்து உற்சவம் நடைபெறும் நிலைக்கு வந்துவிட்டது. இம் மாற்றம் பக்தி உணர்வுக்கும்- சக்தி வழிபாட்டிற்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது எனக் கருதுகிறேன். "காளி ஆத்தா மாரி ஆத்தா" எனக் கூவும் போதுள்ள நெருக்கம் இன்றில்லை.

கேரளா மாநிலத்தில் (இந்தியா) கண்ணகி கோவில் உண்டு. சபரிமலை ஐயப்பன் கோவில் போன்றது. குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இவ்வாலயம் திறக்கப்பட்டு மக்கள் செல்கிறார்கள். பூசைகள் பக்தி உணர்வுக்கு ஏற்ப அருகில் சென்று நாமே அபிடேகப் பொருட்களைக் கொண்டு வழிபாடு செய்யும் முறையில் நடைபெற்று வருகிறது.

மாரியம்மன் கோவிலில் நடைபெறும் தீ மிதித்தலையும், மதுரையை எரித்த தீ நல்லவர்களைச் சுடாது என்ற கண்ணகி வரலாற்றை நினைவுபடுத்தும் செயல் என்றே கருதுகிறார்கள்.

சிலப்பதிகாரக் கண்ணகிக்கும் இலங்கைக்கும் தொடர்புண்டு என ஆய்வுகள் கூறுகின்றன. கட்டுரையில் குறிப்பிட்ட இடங்களில் கண்ணகி நின்று சென்றதாக செவிவழிச் செய்தி உள்ளது. நயினை அம்மன் கோவிலுக்கு கண்ணகி, கோவலனின் தந்தையர் வந்து வழிபட்டார்கள் என்று ஐதீகமுண்டு.

அம்மா அல்லது அம்மை என்பது தாயைக் குறிப்பதுடன் உலகிற்கு எல்லாம் தாயாகிய மகா சக்தியையும் குறிப்பிடுகிறது. அம்மை என்ற சொல் "அமைதி" என்றும் "அழகு" என்றும் பொருள் படுகிறது.

வீட்டிலே ஒரு பெண்ணை வாழச் செய்யும் போது "விளக்கேற்றி இரு" என்று கூறுவது தமிழ் மரபு.

மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறான். அழியக்கூடிய மனிதன் அழிவற்ற பரம்பொருளை அணுகும் முறையிலும் வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பே.

"பகை பகைத்தீயால் அவியாது, அன்பு நீரில் அவிந்துபோம்" என்பது பொன்மொழி. அன்பை நமக்கிடையில் ஏற்படுத்தும் ஆற்றல் தாய்த்தெய்வ வழிபாட்டின் மூலம் கிடைக்கும்.

வாழ்வு பெருக்கம், தாழ்வு தடுக்கும், வீழ்வுதடுக்கும், ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி! உள்ளத்து ஒளிரும் விளக்கே தாய்- மகா சக்தி!

## நின்னருள் நீள் நிலத்தில் வெல்லப்படும்

என்ன இந்த உலகம் ஒன்றுமே புரியவில்லை
எல்லாமே உன்செயலன்றோ என்செயலன்றே!
நின்னருள் நீள்நிலத்தில் வெல்லப்படு மென்பதை
நீயொருமுறை வலம் வந்து சொல்லு முருகா!
சந்நிதியில் மொழிபவை யாவுமே திருவாக்கு,
சாத்திரங்கள் எதுவுமே அதற்கிணையில்லை
எந்நிதிக்கும் அதிபதியே நீயென நீ நினைத்தால்
எல்லாமே சரணாகதி எதை நீ உன்னுடைய தென்பாய்?

*திரு கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்*

**பொருள் கிடைக்கிறது என்பதற்காக தவறான வழியில் வாழ்க்கை நடாத்தக்கூடாது.**

உ

# தானத்தின் சிறப்பு

**திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்**

தானம் பிறருக்குச் செய்தல் என்பது ஒரு உன்னதமான செயலாகும். தானம் செய்வதில் எத்தனை நியமங்கள் முற்றிலும் நமக்குத் தேவைப்படாத நிலையில் ஒரு பொருளை மற்றவருக்கு உபயோகமாக இருக்குமா என யோசிக்காமல் நமக்கு வேண்டியதில்லை என்பதற்காக தானம் செய்வது தேவையில்லாத போதும் நாமே வைத்துக்கொள்வதைவிடச் சிறந்ததே தவிர அது தானத்தில் மிகக் கீழ்ப் பட்டதாகும்.

நாம் தானம் செய்யும் பொருள் நமக்குத் தேவையாக இருந்தபோதிலும் நம்மைவிட வேறு ஒருவருக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றது என அறிந்து தானம் செய்தல் சிறப்பாகும். தானம் செய்யும்போது மனப்பூர்வமாக அளித்தல் வேண்டும். சமைப்பதற்கோ உணவிற்கோ வசதியின்றி ஒருவர் வந்து வீட்டுப் படலையில் நின்று அழைத்தால் ஒரு பிடி அரிசி போடலாம் என எண்ணி அதை வீட்டில் இருந்து எடுத்து வருவதற்குள் வந்தவரோ நம் வீட்டைத் தாண்டிச்சென்று விடுகிறார். போய்விட்டாரே நாளை வந்தால் போட்டுக்கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டு வீட்டிற்குள் சென்று அரிசியை வைக்கும் வாளிக்குள் போட்டுவிட்டால் இது சிந்தனையளவில் தான் தர்மம். மனதாரத் தர்மம் செய்யவேண்டும்.

ஒரு பொருளை தானம் செய்த பிறகு அதன்மீது நமக்கு எந்தவித சொந்தமும் இல்லை. ஒரு தனவந்தர் (பெரிய பணக்காரர்) ஏழைகளின் முன்னேற்றத்திற்கு உதவிபுரிபவர் பசுவைக்கூட தானமாகக் கொடுப்பாராம். நல்ல எண்ணத்துடன் ஒருசமயம் அவர் வண்டியில் சென்றுகொண்டிருக்கையில் திடீரென வண்டியை நிறுத்தச் சொன்னாராம். அப்பொழுது ஒருவன் இரு பசுமாடுகளுடன் வண்டியின் அருகில் வந்து நின்றான். அந்தப் பணக்காரர் அவனை அடையாளங் கண்டு என்ன முருகா மாட்டுக்கு இன்னும் கொஞ்சம் தீனிபோட வேண்டும். இது இரண்டும் என் மாடுகள்தானே? அந்த ஏழையும் ஆமாம் இது இரண்டும் உங்க மாடுகள்தான் இன்னும் தீனி போடுறேன் ஐயா என்று பதில் அளித்தான். நன்றி பொங்கும் கண்களுடன் வித்தியாசமான பேச்சைப் பாருங்கள். பணக்காரர் தானமாகக் கொடுத்த பின்பும் தன் மாடுகள் என்கிறார். அந்த ஏழையோ இப்போது அவை அவனுடையது ஆனபோதிலும் அவை அந்தப் பணக்காரருடைய மாடுகள் தான் என்கிறான்.

தானம் கொடுத்துவிட்ட பொருளை நம்முடையது என்று சொல்லவே கூடாது. அந்தப் பொருளின் நல்ல நிலையையோ அல்லது சீரான நிலையில் இல்லாததைப் பற்றியோ சிறிதும் கவனமோ கவலையோ சந்தோஷமோ இருக்கக்கூடாது.

சிலர் கோயிலுக்கு பாடசாலை போன்றவற்றிற்கு விளக்குகள், மின்விசிறி, கட்டிடத்திற்காகவோ பணம் கொடுத்து விட்டு அந்தப்பொருட்களின்மீது தங்கள் உபயம் என்று குறிப்பிடுவதை விரும்புவது உண்டு. இதுவும் கூடாது நாம் தானம்

செய்வது பெயர் புகழ் போன்றவற்றிற்காக இருக்கக்கூடாது.

பிச்சைக்காரன் பிச்சைகேட்கும் போது இல்லாளிடம் அவன் கூச்சலிடு கிறாரென்பார் ஏதேனும் கொடுத்து அவனை இங்கிருந்து போகச்சொல் என்று பலரும் சொல்வதுண்டு இதுவும் தானத் திலேயே சேராது.

ஒரு பணக்காரன் புதுமனைப் பிரவேசத்திற்கு தன்னுடைய குருவையும் அழைத்தான். அவரை மரியாதையுடன் வரவேற்று அவர் சிறிது இளைப்பாறியபின் அவரை வீட்டைச்சுற்றிப் பார்க்க அழைத் துச் சென்றான். அவனுடைய தோட்டத் தைப் பார்த்த குரு அதைத் தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகச் சொன்னார். "குருவே இது தங்கள் தோட்டமன்றோ" என்றான். அவனுடைய காரைப் பார்த்த குருவோ இது வெளிநாட்டு வண்டியோ? என வினாவினார். பணக்காரனும் பெரு மிதத்துடன் ஆம் வெளிநாட்டு வண்டி எல் லாம் தங்களுடையது என்றுதான் மறுபடி யும் சொன்னான் வீட்டைச் சுற்றிப்பார்த்து விட்டு அந்தப் பணக்காரரிடம் கிருஹப் பிரவேசம் வெகு சிறப்பாக நடந்தது என் றார். அந்தச் செல்வந்தரும் எல்லாம் தங் கள் ஆசீர்வாதம்தான் என்றான்.

மேலோட்டமாகப் பார்க்கையில் அந்தச் செல்வந்தர் யதார்த்தமாகத்தான் பேசினான் என்று தோன்றும். உண்மையில் அவனுக்கோ குரு அந்த வீட்டையோ காரையோ அந்தத் தோட்டத்தையோ தனது ஆச்சிரமத்துக்குக் கேட்டுவிடுவாரோ என்ற ஒருவித சந்தேகம் கலந்த பயத் துடன்தான் சொன்னான். குரு கேட்டிருந் தால் கொடுக்கக் கூடியவனாக இருக்க லாம். சிலருக்கு மற்றவர்கள் கேட்டால் கொடுக்கலாம் நாமாகக் கொடுப்பானேன் என்ற எண்ணமே உண்டு இதுவும் தவறு.

ஒருவிதமான அகங்காரம் தற் பெருமை போன்ற குறைகள் எதுவும் இல்லாமல் முழுமனதுடன் கொடுக்கும் தானம்தான் மிகச்சிறந்தது. அதுவே சாந்தியையும் ஆத்மார்த்த சுகத்தையும் அளிக்கும்.

சிலர் தானம் கொடுப்பதை ஒரு விழாவாகவே நடாத்தி விடுகிறார்கள். இது மிகவும் தவறு அன்றோ. தானம் பெற வருபவரும் எல்லோர் முன்னிலையில் பெறமாட்டான். அது சுயகௌரவபங்கம். நாம் நல்ல முறையில் சம்பாதிக்கும் செல் வத்தையோ பொருளையோதான் தான மாகக் கொடுக்கவேண்டும்.


காலத்திற்கேற்ப பொருளைத் தானமாகக் கொடுத்தால் அது விசேஷம். முதியோருக்கு மூக்குக் கண்ணாடி அளித் தல். மழைக்காலங்களில் ஏழை மக் களுக்கு குடைபோன்றவற்றை அளித்தல் (குடையில் நம்பெயர் எழுதாமல்) வைத் திய உதவிபுரிதல், ஊனமுற்றவர்கட்கு (கால்களை இழந்தவர்கட்கு) அவர்கள் பாவிக்கக்கூடிய முச்சக்கர வண்டிகளை வழங்குதல் சிறப்பாகும். ஏழை மக்களின் குழந்தைகட்கு கல்விக்காக உதவுவதும் தானங்களில் சிறந்த ஒன்றாகும். அவனுக்கு கர்ணன் என்ற நினைப்போ என்று கூறுவது உண்டு. கர்ணன் தான, தர்மம் செய்வதில் ஈடு இணையில்லாத வன் யார் அவனிடம் வந்து கேட்டாலும் கேட்பவர்களின் நிலை என்ன. உள் நோக்கம் என்ன என்பதெல்லாம் பாராமல் கொடுத்த வள்ளல். மகாபாரதப் போரில் தன் உயிருக்கு ஆபத்து நிலையிலும் தன் தர்ம கவசத்தை ஸ்ரீ கிருஷ்ண

மகிழ்ச்சி சுறுசுறுப்பில் இருக்கிறது. அது ஓடும் நதி. தேங்கிய குட்டையல்ல.

பகவானுக்கே அளித்தவனாயிற்றே. ஒரு கையால் கொடுப்பது மற்றொரு கைக்கு தெரியக்கூடாது என்று சொல்வதுண்டு. ஒரு கையிலிருந்து மற்றொன்றிற்கு மாறுவதற்குள் நம் மனமும் மாறிவிடலாம் என்பதால் நம்முடைய ஆத்மார்த்தமான தானதர்மம் தான் நம்மைக் காக்கும் என்பது உறுதி. இதனையே தர்மம் தலைகாக்கும் என்றும் கூறுவர்.



ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கியோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் கட்டுரையாளர் திரு ம.க. ஸ்ரீதரன் அவர்களுக்கு அதிபரும் சைவப் பிரசாரருமாகிய திரு ச. லவீசன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கும் நிகழ்வு.



ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அறப்பணிகள் வரிசையில் வைத்திய சிகிச்சைக்கென வழங்கப்பட்ட ஒரு தொகைப் பணத்தினை பயனாளி ஒருவருக்கு ஆச்சிரமத்தோடு இணைந்த திரு R. கார்த்திகேசு அவர்கள் கையளிக்கும் நிகழ்வு

நல்லவனுக்குத் தீங்கு செய்வதைப் போலவே தீயவனுக்கு நன்மை செய்வதும் ஆபத்தானதுதான்.

உ

# அமாவாசை பூரணைகளும் பிதிர்க்கடன்களும்

திரு சி.மு. தம்பிராசா ஆசிரியர் அவர்கள்

அண்டத்தில் மூன்று மண்டலங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை அக்கினி, சூரியன், சந்திரன் என்பன. சூரியன் தன்னைத்தான் சுற்றிக்கொண்டு அண்டவெளியின் மையமாக நிற்கச் சந்திரன் தன்னைத்தான் சுற்றிக்கொண்டு பூமியை வலம்வர பூமியும் தன்னைத்தான் சுற்றிக்கொண்டும் சந்திரனையும் சேர்த்துக் கொண்டும் சூரியனை வலம் வருகின்றது. இந்நிகழ்வுகளால் இராப்பகல், பருவ காலம், அமாவாசை, பூரணை, சூரிய ச[illegible], கிரகணங்கள் என்பன தோன்றுகி[illegible]ன. இந்நிகழ்வுகளை ஆகமங்கள் அறி[illegible]வுறுத்துகின்றன. நந்தியங்கடவுள் பெற்றுக்கொண்ட ஆகமங்களில், வீராகமம் சந்திரன் நிலைபற்றியும் காலோத்தராகமம் ஆதித்த நிலைபற்றியும் விளக்கிக் கூறுகின்றன. இவற்றைத் திருமூலர் திருமந்திரம் 3ஆம், 7ஆம் தந்திரங்களில் காணலாம். திருமந்திரம், ஆதித்த நிலையில் அண்ட ஆதித்தன், பிண்ட ஆதித்தன் எனவும் வகுத்து நோக்குவதும் காணமுடிகின்றது.

**எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டும் தீக்கதிர்**
**சுட்டிட்ட சோமனில் தோன்றும் கலையெனக்**
**கட்டப் படுந்தார கைக்கதிர் நாலுள**
**கட்டிட்ட தொண்ணூற்றோ டாறுங் கலாதியே**

என்னும் செய்யுளில் தீக்கு (அக்கினிக்கு) 64, கதிருக்கு (சூரியனுக்கு) 12, சோமனுக்கு (சந்திரனுக்கு) 6, தாரகை (நட்சத்திரம்- நாள்) 4 கலைகள் என மொத்தம் 96 கலைகள் உண்டு எனவும், அமாவாசையில் சந்திரனின் கலைகள் ஒடுங்கி இருத்தலால் அந்நாளில் சந்திரனில் நட்சத்திரம் போலக் காணப்படும் கதிர்களே மேற்குறித்த 4 கலைகள் எனவும் விளக்கிக் கூறுவதனைக் காணலாம். இக்கலைகள் மெய்கள் எனப்படும்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் (உடம்பில்) உண்டு. எனவே எமது உடம்பிலும் மூன்று மண்டலங்கள் உண்டு. அவை முறையே அக்கினி, சூரியன், சந்திரன் எனவும், அவையே மனித உடம்பின் சுழுமுனை, பிங்கலை, இடகலை என்றும், மனித உடம்பில் உள்ள 72000 நாடிகளும் இந்த மூன்று நாடிகளிலும் அடங்கும் என்றும், இந்த மூன்று நாடிகளைக் கொண்டும் மனித உடம்பில் எழும் 4448 வியாதிகளையும் இனங்காண முடியும் என்றும் சித்த மருத்துவம் விளக்கம் அளிக்கின்றது. எனவே அண்டவெளியில் உள்ள அக்கினி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்று மண்டலங்களுக்கும் எமது உடம்பிற்கும் தொடர்பு உண்டு. சூரியன், சந்திரன், பூமி ஆகியவற்றின் சுழற்சி, நகர்ச்சியினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மனித உடம்பிலும் ஏற்படும். இந்தப்

பாதிப்புக்களை மனித நல்வாழ்விற்கு இசைவாக்கம் செய்யவேண்டிய கட்டாயத் தேவை இருக்கின்றது. சித்த மருத்துவர் மருத்தியல் ரீதியான இசைவாக்கம் செய்யும் அதேவேளை சித்த மெய்யியலாளர் உளவியல் ரீதியான ஆன்ம ஈடேற்றத்திற்கான இசைவாக்கம் செய்யும் வழிவகைகளை அறிமுகம் செய்துள்ளனர். சித்த மருத்துவம் "நோயதனுக்கொப்பில் மருந்தாம் உபவாசம்" என ஏற்றுக்கொள்ளும் அதேவேளை சித்த மெய்யியலாளரும் இதனை ஏற்றுக்கொள்வதனைக் காணலாம். மேற்குறித்த இருமரபினரும் ஏதோ ஒரு வகையில் உபவாசத்திற்கு மதிப்பளிப்பதனைக் காணலாம்.

அமாவாசை, பூரணை, கிரகணம் என்பன இயற்கையின் தோற்றப்பாட்டோடு தொடர்புடையன. இதனை உணர்ந்த சித்த மெய்யியலாளர் இத்தினங்களில் பாதிப்புக்களிலிருந்து விலக்கிக்கொள்ள இத்தினங்களை இந்துசமய அனுட்டானங்களுக்கு உரிய தினங்களாக அமைத்துள்ளனர். சோதிடநூல் சூரியன் பிதாகாரகன் என்றும், சந்திரன் மாதாகாரகன் என்றும், சுட்டும்வகையில் இத்தினங்களை தந்தை, தாயார் இறந்த தினங்களுக்கு உரிய தினங்களாகக் கொண்டு தந்தை, தாயார் அற்றவர்கள் இத்தினங்களில் சமய அனுட்டானங்களுடன் உபவாசம் (விரதம்) அனுட்டிக்கும் இந்து சமய மரபினையும் காணமுடிகின்றது.

ஆதிகாலத்தில் எந்தத் தொழில் செய்கின்றவர்களும் பசு வளர்த்தார்கள். பெரும்பாலும் மண்வீடு வாசல்களில் வாழ்ந்தார்கள். தொற்று நோய்கள் மிக மலிந்த அக்காலத்தில் வீடு மெழுகவும், முற்றத்திற்கும், சுற்றுப்புறங்களுக்கும் தெளிக்கப் பசுவின் சாணம் பயன்படுத்தப்பட்டது. அமாவாசை, பூரணை தினங்களில் வீடு, அடுக்களை சாணத்தினால் மெழுகித் துப்பரவு செய்வர்.

இயன்றமட்டில் உடல் சுத்தம் செய்து சாதம் சமைத்துப் படைத்து தந்தை தாயாரை வழிபட்டு பசுவிற்கும், காகத்திற்கும் சாதம் கொடுத்து குடும்பத்தினர் கூடியிருந்து உண்டு விரதத்தினை நிறைவு செய்வார். இத்தினங்களில் பசித்து வரும் ஒருவருக்காவது பசியகலச்சாதம் கொடுக்கும் அளவிற்கு குறையாமற் சாதம் சமைப்பதும் அக்கால வழக்கம். அமாவாசை பூரணை தினங்களில் நாட்பயிர் செய்வதும், பூரணையிற் அறுவடை செய்வதும் அன்றும் இன்றும் வழக்கமாக இருந்து வருகிறது.

அமாவாசை பூரணை தினங்கள் தியானத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் உகந்த நாட்களாகவும் கொள்ளப்படுகின்றன. புத்தபெருமான் வைகாசி முழுமதித்தினத்தன்று (பூரணைத் தினத்தன்று) ஞானம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இந்துசமய மரபில் இந்து ஆலயங்களில் அமாவாசையிற் கொடியேற்றமும் (துவஜாரோகணமும்) செய்து, பூரணையிற் தீர்த்தோற்சவத்தோடு கொடியிறக்கமும் (அவரோகணமும்) செய்யும் மரபும் பெரு வழக்கமாக உண்டு. யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிற் தீர்த்தோற்சவம் கீரிமலைக் கடற்கரையில் ஆடி அமாவாசை அன்று சூரியோதயத்தில் இடம்பெறுவதும், வடமராட்சியில் வல்லிபுர ஆழ்வார் கோவிலில் புரட்டாதி பூரணை அன்று சந்திரோதயத்தில் வங்கக் கடலில் தீர்த்தோற்சவம் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத் திண்ணைப் பள்ளிக் கூடங்களைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் காலத்தில் எழுந்த சைவ வித்தியாலயங்களில் அமாவாசை பூரணைத் தினங்களுக்கு மதிப்பளித்து விடுமுறைகள் வழங்கப்பட்டு வந்தன. பின்னர் கல்வி நிறுவனங்கள் அரசுடமையாக ஆக்கப்பட்டதும் அமாவாசை, பூரணைக்கு வழங்கப்பட்ட விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. இன்று சில கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சலுகை அடிப்படையில் ஆடி அமாவாசைக்கு விடுமுறை வழங்கிவருவதும் காணலாம்.

இலங்கையிற் பௌத்த மதம் அமாவாசை, பூரணைக்கு முக்கியத்துவம் கொடுத்து பௌத்தமத வழிபாட்டுத் தினங்களாக கொள்கின்றன. இலங்கை அரசு இன்று பூரணை தினத்தைப் பொது விடுமுறைதினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. பௌத்தமதம் அமாவாசை, பூரணை தினங்களைத் தந்தை, தாயார் அற்றவர் களுக்குரிய பாகுபாடு இன்றி அனைவருக்கும் உரிய சமய வழிபாட்டுத் தினங்களாகக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. இந்துமதத்திற் பிதா, மாதா அற்றவர்களின் பிதிர்க்கடன்களுக்கான தினங்களாக அமாவாசை, பூரணைகளைக் கொள்வதும் சிந்தனைக்குரியதாகும்.

பிதா, மாதா உள்ளவர்கள் தனிக்குடும்பம் நடத்தும் வீடுகளில் அமாவாசை, பூரணைகளுக்கான சமய அனுட்டானங்கள் எதுவும் இன்றி இருப்பதும் காணமுடிகின்றது. அமாவாசை பூரணைகளைப் பிதிர்க்கடன்களுக்கான சிராத்த தினங்களுடன் இணைத்ததே இதற்கான காரணம் எனலாம். தந்தை, தாயார் இறந்த திதி மாதம் தெரியாதவர் களுக்கு அமாவாசை பூரணைகளில் தங்கள் பிதிர்க்கடன்களைச் செய்வது பொருத்தமானதாகும். இதேவேளை தந்தை, தாயார் இறந்த திகதி மாதம் தெரிந்த ஒரு சிலரும் சித்திரா பூரணையிலும் ஆடி அமாவாசையிலும் தங்கள் பிதிர்க்கடன்களைச் செய்தால் போதுமென்று செய்வதும் காணமுடிகிறது. பழைய மரபு வழிவாழும் ஒரு சிலர், உபவாசத்துடன் சமய அனுட்டானங் களைச் சரிவரச்செய்யமுடியாத வயோதிப நிலையிலும் உபவாசத்தினை தளர்த்தி அமாவாசை, பூரணைக்கான சமய அனுட் டானங்களை இயன்றமட்டிற் செய்வதையும் காணலாம்.

ஒருவன் இறந்த மாதத்தில் வரும் திதியும், மாதாமாதம் வரும் அத்திதியும் இறந்தவருக்கான பிதிர்க்கடன் செய்வதற்குப் போதுமானது. அமாவாசை, பூரணை அனைவருக்குமான சமய அனுட்டானத் திற்குரிய தினமாகக் கொள்வது பொருத்த மானதாகும்.

**குறிப்புக்கள்:**

1. திருமூலர் திருமந்திரம் 1933, சைவசித்தாந்த மகாசமாஜம் 3,4,7ஆம் தந்திரங்களின் சுருக்கம்.

2. மேற்படி திருமந்திரம் செய்யுள் 856

3. பதினெண் பெயர்கள் திருவாய் மலர்ந்தருளிய நாடி சாத்திரம், 1901, சிற்றம்பலம் விலாசம் பிறெஸ் சென்னையூகிமுனி தத்துவம் ப.169.

4. யாழ்ப்பாணம் ஜோதிஷர் வி. சபாபதி ஐயர் அவர்கள். ஜாதக பாஸ்கரன் 1955, இ.சி. இரகுநாதையர் சோதிடப் பிரகாச அச்சியந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம். பக். 8

உ

# அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவியான் கேடும் நினைக்கப்படும்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

உலக வாழ்விலே, பலர் துன்பப்பட்டு வாழ்கிறார்கள். சிலர் இன்பமாக வாழ்கிறார்கள். இதற்குக் காரணம் அவரவர் முற்பிறவியிலே செய்துகொண்ட வினையின் பயன்களே.

**இலர் பலராகிய காரணம் நோற்பார்**
**சிலர் பலர் நோலா தவர்**

என்கிறார் தெய்வப்புலவர். முற்பிறவியிலே நல்வினைகளைச் செய்தவர்கள் இப்பிறவியிலே நல்வாழ்வு பெறுவதும், நல்வினை செய்யாதவர்கள் துன்பவாழ்வு பெறுவதும் இயல்பானதே என்பது அன்னார் முடிபு ஆகும்.

பல்லக்கிலே அமர்ந்து இருப்பவனையும் அதனைச் சுமந்து செல்பவர்களையும் பார்த்தால் இது விளங்கும் என்று உதாரணமும் கூறுகின்றார்.

**அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை**
**பொறுத்தா னோடு ஊர்ந்தான் இடை** என்பது குறள்.

இஃது இவ்வாறாக, வாழ்க்கையில் இன்னொரு பாகுபாடும் இருக்கிறது என்பதையும் நமக்குக் காட்டுகின்றார்: அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன உடைய ஒருவன் தவவலிமைபெற்று முன்னேறுவதையும் செம்மையான வாழ்வு உடைய ஒருவன் வறுமையுற்றுத் துன்பப்படுவதையுங் காணமுடிகிறது. ஆயினும் இப்படியானவர்களை அறிவுடையோர் இனங்கண்டு கொள்வார்கள்; நினைத்துப் பார்ப்பார்கள் என்கிறார் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்.

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப்படும்.** என்பது குறள்.

அழுக்காறு நிறைந்த மனத்தினன் (அவ்விய நெஞ்சத்தான்) பெறுகின்ற செல்வநிலையையும், நன்னெஞ்சத்தவன் அடையும் துன்பநிலையினையும் பெரியோர் சீர்தூக்கிப் பார்ப்பார்கள். இந்த மாறுபாடான ஆக்கத்துக்கும் கேட்டுக்கும் 'விதி' காரணமாயிருப்பதனை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம்:

பொறாமைக் குணம் படைத்த தக்கன் என்பவன், தவவலிமையால் தாட்சாயினியை மகளாகப் பெற்று, சிவபெருமானை மருமகனாகவும் ஆக்கி பெருமை காட்டுகிறான்! அப்படி ஒரு விதிப்பயன் இருந்திருக்கிறது. ஆனால் அவனது இயல்பான பொறாமையால் இறைவனை மதிக்காமலத் தானே கடவுள் என்று ஆணவ முனைப்புப்பெற்றுச் சிறுமை அடைகிறான்.

**தக்கனார் வேள்வித் தவத்தை மேற்கொண்டிருந்தும்**
**தொக்க அறமாயிற்றோ சோமேசா – மிக்க**
**அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.**

நல்லறத்தை ஒருவன் செய்வதனால், அவனிடம் அழுக்காறு முதலிய தீய குணங்கள் இருக்கக்கூடாது. ஆயினும், தக்கன் என்பவன் வேள்வித் தவத்தை மேற்கொள்ளுகிறான். அவனது தவம் நற்பயனை அளிக்கவில்லை. காரணம், தக்கனிடம் காணப்பட்ட அழுக்காறு முதலிய தீயகுணங்களே என்பதை உணர முடிகிறது. அவனது தீயகுணங்களேஅவனது முடிவுக்கு விதியாக அமைந்து விடுகின்றன!

## செவ்வியான் கேடு:

மதுரைமாநகரிலே, தன் மனைவி காற்சிலம்பை விற்கச் செல்கிறான் கோவலன். செல்வச் செழிப்போடு, செம்மையாக வாழ்ந்த கோவலன், கைப்பொருளை இழந்து இலம்பாடு (வறுமை) உற்றதனால், தனது மனைவி கண்ணகியின் சிலம்பொன்றை விற்கும் நிலைக்குத் தள்ளப்பெறுகிறான். அதனால்த் தனது சோழநாட்டிலே சிலம்பு விலைகூற வெட்கப்பட்டு, இரவோடிரவாக மனைவியோடு மதுரைக்குப் போகிறான்.

வழியிலே சமணத்துறவியான கவுந்தியடிகளைச் சந்திக்கிறான். இந்தச் செம்மனச் செம்மல்களுக்கு இப்படி ஒரு அவலம் வந்ததா? கோவலன், கண்ணகி இருவரோடும் உரையாடிய கவுந்தியடிகளார் சொல்கிறார்;

கோவலனே, தந்தைதாய் சொற்படி மனைவியோடு கானகம் போன இராமன், நான்முகனைப் பெற்ற திருமாலின் அவதாரமல்லவா? இருந்தும் இராமன் சீதையைப் பிரிந்து துயரப்படுகிறான் என்பது நீ அறியாயோ?

சூதாடி, நாடு நகரை இழந்து, தன் மனைவி தமயந்தியுடன் கானகம் சென்ற நளமகராசன், நல்லவன்; நல்ல முறையில் ஆட்சிசெய்தவன் அல்லவா? தமயந்தி பெண்மைக்கு இலக்கணமாக வாழ்ந்தவள்! அப்படியிருந்தும், அவளை நடுக்காட்டிலே நள்ளிரவிலே அவன் பிரிந்து போகின்றானே!

ஆனால் நீ, அவர்களைப்போன்று உன் மனைவியைப் பிரியவில்லை! வருந்தாதே. கண்ணகியைக் காப்பாற்றித் தருவது என்கடன் என்று ஆறுதல் கூறுகின்றார்.

பின்னர், கோவலனை நன்கு தெரிந்த மாடலமறையோன் வந்து சேருகின்றான். கோவலனது பழைய செயல்களை நினைவுபடுத்துகிறான்.

ஒருமுறை எமது மரக்கலம் கடலில் தத்தளித்தபோது, மணிமேகலா தெய்வம் எங்களைக் காப்பாற்றியது. அதனால், மாதவியின் மகளுக்கு 'மணிமேகலை' என்று பெயர் சூட்டுவோம் என்று சொல்லி, அவ்வாறே செய்தாய்! ஆனபடியால் அத்தெய்வம் இனிமேலும் உன்னைக் காப்பாற்றும் அல்லவா?

இன்னொருநாள், மதம் பொருந்திய ஒரு யானையை அடக்கி ஒரு வயோதிபரைக் காப்பாற்றிய கருணை மறவன் அல்லவா நீ!

மற்றும், தன் பிள்ளைக்குக் காவலாக இருந்த கீரிப்பிள்ளையைக் கொன்றுவிட்டாள் என்பதால், தன் மனைவியை விட்டுப்பிரிந்து ஒரு மறையோன்

அகம்பாவத்தை அடக்குவதுபோன்று கடினமான வேறு எதுவுமில்லை.

வடதிசை சென்று விடுகிறான். அதனால் அந்த மங்கை நல்லாள் பட்ட துயரத்தைப் போக்கி, அவளை அவளது கணவனோடு சேர்த்து வைத்தாய் அல்லவா!

மேலும், பொய்ச்சாட்சி சொன்னான் என்று பூதம் ஒருவனைக் கொன்று விட்டபோது, பசிப்பிணி போக்கி அக்குடும்பத்தை நீ காப்பாற்றினாய் அல்லவா?

ஆகவே கோவலனே நீ,

**"இம்மைச் செய்தன யானறி நல்வினை**
**உம்மைப் பயன்கொல் ஒரு தனி உழந்து, இத்**
**திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"**

"நான் அறிந்தவரையில், நீ இப்பிறவியில் நல்வினைகளையே செய்திருக்கின்றாய். கற்புநலம் வாய்ந்த இப்பெண்ணுடன் தனிவழி நடந்து இவ்வாறு இங்கு வந்தது முற்பிறவியின் பயனாக இருக்கலாமல்லவா?" என்று தேற்றுகின்றான் மாடலமறையோன்.

அதுகேட்ட கோவலன், தான் தீய கனவு கண்டதாகவும், தனக்கும் மனைவிக்கும் வெகுசீக்கிரம் தீங்கு வந்துசேரும் என்றும் தனது அச்சத்தை வெளிப்படுத்துகின்றான்.

அவ்வாறே கோவலன் இறப்பதும், கண்ணகி துயரடைந்து தெய்வமாவதும் அரசியல் பிழைத்ததே என்று பாண்டியன் இறக்க, அதுகண்டு தேவி இறப்பதும் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் அமைத்துப் பெருமை பெறுவதும் விதியின் பயனே என்பது நாம் உணரத்தக்கது.

ஆகவே, தீவினையாளர் ஆக்கம் பெறுவதும் நல்வினையாளர் கேடு அடைவதும் விதிப்பயன் என்று உணர்வோமாக.

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்** (குறள்)

---

**"கோயில் வழிபாடு முடிந்தபின்னர் சற்றுநேரம் உட்கார்ந்து செல்லவேண்டும் என்கிறார்களே" அது எதற்காக?**

மூலஸ்தானம் இருளாகத்தான் இருக்கும். அங்கு திரிவிளக்கு மட்டும்தான் ஒளிதரும். மூலவருக்கு அபிஷேகம் செய்யும்போது பல இயற்கைச் சத்துக்களான சந்தனம், பால், தேன் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம். இவையும் இங்கு கூறப்படும் மந்திர ஒலிகளும் உண்டாக்கும் அதிர்வுகள் மூலஸ்தானத்திற்குள் நிறைந்திருக்கும். இது வெளியிலும் பரவினால்த்தான் பக்தர்களுக்கும் நல்லது. கற்பூர ஆராத்தி காட்டப்படும்போது, அந்த உஷ்ணத்தால் உள்ளே இருக்கும் காற்று விரிவடைந்து வெளிப்பக்கமும் வரத்தொடங்குகிறது.

கற்பூர ஆராத்தி காட்டும்போது பலரும் கண்களை மூடிக்கொள்கிறார்கள். அது தவறு. அந்தவேளையில்த்தான் இறைவனின் திருவுருவத்தை முழுமையாக மனத்தில் வாங்கிக்கொள்ள வேண்டும். வழிபாடு முடிந்து நமஸ்காரம் செய்தபின் சில நிமிடங்கள் உட்காரும்போது கண்களைமூடி, ஆராத்தியின்போது நாம் கண்ட இறைவனின் திருவுருவத்தை மனதில்க் கொண்டு வந்து தியானம் செய்தல் வேண்டும். இது நம் ஆன்மாவுக்கு நல்லது.

---

**துன்பத்தைப் பொறுத்துக்கொண்டாலும் வெறுப்பை பொறுத்துக்கொள்ள முடியாது.**

உ

# திருமுருகாற்றுப்படை பிறந்த கதை

திரு வில்லைச் செல்வம் அவர்கள்

"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே....." எனச் சிவபெருமானுடன் வாதிட்டு, அவரது கோபத்துக்கு ஆளான வர் பாண்டி நாட்டின் கடைச் சங்ககாலத் துப் புலவரான நக்கீரர்.

ஒரு சமயம் சாப விமோசனத்தின் பொருட்டு இமயமலைச் சாரலுக்குச் சென் றார். பசுமையான சோலைகளுக்கு நடுவே உள்ள நீர்த்தடாகம் ஒன்றின் அருகே நிழல்தரும் ஆலமரம் இருப்பதைக் கண் டார்.

அந்தத் தடாகத்தில் குளித்து விட்டு ஆலமரத்தின் அடியில் மணலால் லிங்கம் வடித்து, பிரதிஷ்டை செய்து, பூஜையைத் தொடங்கலானார். அப்போது ஆலமரத்தில் இருந்து பழுத்த இலை ஒன்று பாதி தண்ணீரிலும் மற்றொரு பாதி மண்ணிலும் படும்படியாக விழுந்தது. தண்ணீரிலும் தரையிலுமாக விழுந்த அந்த இலையானது அடுத்த விநாடியே ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

தண்ணீரில் விழுந்த இலையின் பகுதி மீனாகவும், தரையில் விழுந்த பகுதி பறவையாகவும் மாறியது. மீன் தண்ணீருக் குள் பறவையை இழுக்க, பறவை மீனைத் தரைக்கு இழுக்க.... ஒரு வித்தியாசமான போராட்டமே நடந்துகொண்டிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட நக்கீரர், சிவசக்தி மந்திரம் ஒலிப்பதை நிறுத்திவிட்டார். அந்த வினாடியே ஆகாயத் துக்கும் பூமிக்குமாக ஓங்கி வளர்ந்த பயங் கரமான பூதம் ஒன்று, தனது நீண்டு வளர்ந்த பற்களைக் காட்டிச் சிரித்தபடி நக்கீரர் முன்னால் தோன்றியது.

நக்கீரருக்கு அப்போதுதான் உண்மை புலப்பட்டது. மனதை அலைய விட்டு, கணப்பொழுதில் சிவசக்தி பூஜையிலிருந்து தான் நழுவிவிட்டதை உணர்ந்தார். பிரமாண்டமாக நின்றிருந்த பூதத்தைப் பார்த்து, "நீ யார்? இங்கு எதற்கு வந்தாய்" என்று கேட்டார்.

உடனே பூதம், "மானிடப் பிற வியே! நான்தான் "கற்கிமுகி" என்ற பூதம் எதிரே உள்ள மலைக்குகையில் வசிக் கிறேன். சற்று நேரத்துக்கு முன்னால் நீ ஒரு அதிசயத்தைப் பார்த்து, சிவபூஜையை நிறுத்திவிட்டாய். உனது அலைபாயும் மனம் எனக்குச் சிரிப்பை உண்டாக்கு கிறது. இந்த இடத்தில் தவம் செய்த எல்லா முனிவர்களுமே இதே தவறைத் தொடர்ந்து செய்திருக்கிறார்கள். அவர் களையெல்லாம் தூக்கிக்கொண்டுபோய், அருகில் உள்ள குகையில் அடைத்து வைத்திருக்கிறேன். இதுவரை தொள்ளா யிரத்துத் தொண்ணூற்று ஒன்பது பேரைச் சேர்த்துவிட்டேன். உன்னையும் சேர்த்தால் ஆயிரமாகிறது..." என்று சொல்லிக் கொண்டே, தன் நீண்ட கைகளினால் நக்கீரரை அலட்சியமாகத் தூக்கியது.

பறந்துசென்று போய்க் குகையில் அவரை அடைத்து, பாறாங்கல்லால் குகையை நன்றாக மூடிவிட்டுச் சென்றது. ஏற்கனவே குகையின் உள்ளே அடை பட்டிருந்த பிற முனிவர்கள், நக்கீரரை ஒருவித பதற்றத்துடன் சூழ்ந்துகொண்டனர்.

"முனிபுங்கவரே! நீங்களும் அகப் பட்டுக்கொண்டீர்களா? இன்றுவரை குகை யில் உள்ளிருந்தாலும், பூதத்தைக்

ஒரு மனிதனுக்கு ஆகாயத்தைவிட உயர்ந்தவர் அவனது தந்தை ஆவார்.

கொண்டே உணவுவகைகளைச் சேகரித்துச் சாப்பிட்டு வந்தோம். இப்போது தாங்களும் எங்களுடன் சேர்ந்துவிட்டதால், நாம் ஆயிரம் பேரும் ஒரே சமயத்தில் பூதத்துக்கு இரையாகப் போகிறோம். பூதத்தின் கோர விரதம் நிறைவேறப் போகிறது" என்று புலம்பினர்.

சோகமான குரலில் முனிவர்கள் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நக்கீரர், "விரதமா.... என்ன அது" என்றார். "இது தெரியாதா உங்களுக்கு? சிவபூஜையில் தவறு செய்யும் ஆயிரம்பேரை ஒரே வேளையில் உண்பதாக அந்தப் பூதம் விரதம் பூண்டுள்ளது! உங்களுடன் ஆயிரம் பேர் பூர்த்தியாகிறது" என்றனர்.

நக்கீரருக்கு நிலைமை தெளிவாகப் புரிந்துவிட்டது. "தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதுபேரின் சாவுக்கு நானே காரணமாவதுடன், நானும் மடியப் போகிறேனா? கேவலம், ஒரு பூதத்துக்கு உணவாவதா? தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது பேரையும் எப்படியாவது காப்பாற்ற வேண்டும். எப்படிக் காப்பாற்றுவது?

தனிமையில் ஒரு ஓரமாக அமர்ந்து சிந்திக்கலானார். "எல்லாம் வல்ல கலியுகக் கடவுளாகிய முருகனை நினைந்து மனம் ஒன்றிப் பாடினால் நிச்சயம் காத்தருள்வான்" என்ற முடிவுக்கு நக்கீரர் வந்தார்.

தந்தைக்கே உபதேசம் செய்த தரணி காக்கும் திருமுருகனை நெஞ்சில் நிறுத்தி, பாக்களால் மாலைசூடி மன முருகி வழிபாடு செய்தார்.

தன் விரதம் முடிக்க மிக்க பசியுடன் ஆவலோடு குகையைத் திறந்த பூதம், முக்கண்ணன் மைந்தன் முருகன் திருவருளால் அழிந்து போனது. நக்கீரர் சாபத்துக்கும் விமோசனம் கிடைத்தது. ஆயிரம் முனிவர்களும் காப்பாற்றப்பட்டனர்.

நக்கீரர் அன்று குகையில் பாடிய பாடல்களின் தொகுப்புத்தான் "திருமுருகாற்றுப்படை!" அல்லல் நீக்கி, ஆபத்தைக் களையும் தமிழ்வேதம் என்னும் சிறப்புக்குரிய திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்பவர்களின் துயர்நீங்கி, வளம் பெருகும் என்பது உறுதி.



ஞானச்சுடர் மலரின் கட்டுரையாளரைக் கௌரவிக்கும் நிகழ்வில் ஆக்கம் எழுதிய செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்களை மாசிமாத வெளியீட்டுரை நிகழ்த்த வருகைபுரிந்த இளை. ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் பாராட்டிக் கௌரவிப்பதைக் காணலாம்.

நல்லொழுக்கத்தைவிடச் சிறந்த வேதம் இல்லை.

உ

# தெய்வீகத் தொண்டின் மகிமை

திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள்

இப்பூவுலகில் தோன்றிய பல்வகை உயிரினங்களில், மிக உன்னதமாகக் கருதப்படுவது மனிதப்பிறவியே. இறைவன் படைப்பில் ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு உயிரினங்கள் உள. மற்றைய உயிரினங்களை விட மனிதன் மேன்மையடைவதற்கு காரணம் அவனிடமுள்ள பகுத்தறியும் இயல்பே. சமுதாயத்தில் பிறந்த மனிதன் மனிதநேயப் பண்புகளோடு பிற உயிரினங்களுக்குத் தொண்டு செய்து மேன்மை அடைய வேண்டும்.

சைவ நாற்பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் மூலம் தொண்டு ஆற்றி நாயன்மார்கள் முத்தியடைந்தனர். சரியைத் தொண்டில் கோயிலைக் கூட்டுதல், மெழுகிடல், நந்தவனம் அமைத்தல், பூமாலை கட்டுதல், சிவனைப் பாடுதல், சிவனடியாரைப் பேணுதல் என்பன அடங்கும். அப்பர் பெருமான் எப்போதும் உழவாரப்படை வைத்திருந்து சரியைத் தொண்டாற்றினார்.

கிரியைத் தொண்டில் தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய பூசைப் பொருட்களைச் சேகரித்தல், மூர்த்தியை எழுந்தருளப்பண்ணுவது, அர்ச்சனை செய்தல், அக்கினி வளர்த்து ஓமம் செய்தல், அன்னதானம் செய்தல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக வைத்தல் ஆகியவை அடங்கும். இவ்வழிபாட்டை திருஞான சம்பந்தர், சண்டேசுர நாயனார் ஆற்றினர். சண்டேசுரர் சிவபூசையில் ஒன்றித்து இருந்தபடியால் தன் பூசைக்கு இடையூறு செய்தவர் தந்தையென்று தெரியாது காலை வெட்டினார். அவர் சிவநிஷ்டையில் ஆழ்ந்திருப்பதால் எமது வணக்கத்தை தெரிவிப்பதற்கு மிக மெதுவாகக் கைதட்ட வேண்டும். அவருடைய பூசைக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பதற்கு அவர் உடைய சந்நிதிக்கும், இறைவனின் சந்நிதிக்குமிடையில் அடியார்கள் போவதில்லை.

யோகம் என்பது ஆன்மா இறைவனோடு சேர்தலாகும். எட்டுவகையான யோகங்கள் முறையே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியன. சுந்தரர் யோகநெறியில் நின்று இறைவனுடன் ஐக்கியமானார்.

ஞான நெறியில் குருவைக் காணல், வணங்குதல் குருவின் புகழ்பாடுதல், திருவடிகளுக்கு சேவை செய்தல், தலையில் சூடுதல் ஆகியன அடங்கும்.

**தெரிசிக்கப் பூசிக்க சிந்தனை செய்யப்**
**பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகம் சூடக்**
**குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்குத்**
**தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கந்தானே.**

மாணிக்க சுவாமிகளுக்கு இறைவன் குருந்தமர நிழலில் எழுந்தருளி ஆட்கொண்டார். தனது அனுபவத்தை "முத்தி நெறி அறியாத" அச்சோப்பதிகத்தில் வரும் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" எனப் பாடினார்.

சங்கம வழிபாடு காட்டும் சங்கமம் என்பது சிவனடியார் கூட்டத்தைக் குறிக்கும். பெரியபுராணத்தில் சேக்கிழார் சிவனடியார்களின் பெருமையையும், புகழையும் பாடியுள்ளார். சங்கம வழிபாட்டில் உன்னதநிலையை அடைந்தவர் விறன்மிண்ட நாயனார். இவர் ஒவ்வொரு தலத்திற்கும் சென்று சிவபெருமானை வணங்குமுன்பு அங்குள்ள சிவனடியார்களை வணங்கிய பின்பே சிவனை வணங்குவார். ஒருநாள் திருவாரூரிலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் அடியார்களுடன் கூட இருந்தார் விறன்மிண்ட நாயனார். அப்பொழுது அங்கு வந்த சுந்தரர் தான் பரவையார் வீட்டில் வாழ்வதை எண்ணி மனம் கூசி, அடியார்களை வணங்காமல் உள் சென்றார். விறன்மிண்டர் அவரைக் கண்டித்து "சுந்தரரும், தோழனுமாகிய சிவனும் தனக்குப் புறம்பானவர்கள்" என்று கூறிச் சினந்தார். மனம் நொந்த சுந்தரர் கோயிலிலுள்ளே இறைவனைக் காணாது நிற்க இறைவன் அவர்முன் தோன்றி அடியார்களின் பெருமைகளையும், தொண்டின் மகிமையையும் உணர்த்தி "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடக்கிக் கொடுத்தார். அதுவே அவரால் பாடப்பெற்ற திருத்தொண்டத்தொகை என்னும் முதநூல் ஆகும். விறன்மிண்டரும் அகமகிழ்ந்து சுந்தரரைப் போற்றினார்.

இவ்வாறே அப்பூதியடிகளும் திருநாவுக்கரசரைப் பெயரளவில் கேள்விப்பட்டு தன் பிள்ளைகளுக்கும் நாவுக்கரசர் என்று பெயர்சூட்டித் தான் செய்த அறப்பணிகளான தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், அன்னதானம் செய்தல், இளைப்பாற மடம் கட்டுதல் போன்றவற்றுக்குத் திருநாவுக்கரசரின் பெயரைப் பொறித்து அடியார்களை மகிமைப்படுத்தினார்.

ஸ்ரீ இராமபிரானுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற ஆஞ்சநேயரை வைணவக் கோயில்களில் சிறிய திருவடி எனப்போற்றி வழிபடுகிறோம். ஆஞ்சநேயர் இராம நாமத்தை உச்சரித்தபடி தனது இதயத்தில் பூட்டி வைத்திருந்தார்.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் வில்லிபுத்தூரிலுள்ள எம்பெருமான் கண்ணனுக்குப் பூமாலை சூட்டும் தொண்டை ஆற்றி வைகுந்தப் பதவி அடைந்தார்.

பெரியபுராணத்தில் வரும் அறுபத்திமூன்று நாயன்மார்களும் பல்வேறு விதமான தொண்டுகள் ஆற்றி இறைவனுடன் இரண்டறக் கலந்தனர். அன்னார் மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கருதிச் செயற்பட்டனர்.

**"மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்**
**கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்த்தல்**
**உண்மை யாமெனில் உலகர் முன் வருக"**

துன்பத்தால்பட்ட காயத்தை மறந்துவிடு ஆனால் அது விட்டுச்சென்ற பாடத்தை மறந்துவிடாதே.

இளையான்குடிமாற நாயனார் செல்வம் உள்ளபோது அடியார்க்கு உணவு அளித்தார். வறுமையுற்றபோதும் அத்தொண்டினைக் கைவிடவில்லை. சிவபெருமானே அடியார் வேடமேற்று அமுதளிக்கக் கேட்டபோதும் கொல்லையில் முளைக்கப் போட்ட நெல்லுடன் கீரையும் ஆய்ந்து உணவு பரிமாறியபோது சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்தார்.

சிறுத்தொண்ட நாயனாரும் சிவனடியாருக்கு உணவு பரிமாறிய பின்பே தான் உண்பார். அவரும் இறைவனால் சோதிக்கப்பட்டு தனது குமாரனையே கறியாகச் சமைத்துப் பரிமாறினார். என்ன ஆச்சரியம் "சீராளா இங்கே வா" என்று கூப்பிட்டதும் குமாரன் ஓடிவந்தான்.

கண்ணப்ப நாயனாரும் தன் கண்ணையே சிவனுக்கு அப்பி ஆறு நாட்களில் அவர் அருள் பெற்றுய்ந்தார்.

பகவான் சத்திய சாயிபாபாவின் கொள்கைகளைப் பின்பற்றும் ஒவ்வொரு சமித்தியிலும் தொண்டிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஒவ்வொருவரும் தமது சேவையைத் திறம்படச் செய்கின்றனர்.

காலம்சென்ற கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த துர்க்கையம்மன் ஆலயத்தில் பல விதமான பணிகள் நடைபெற்றன. அம்மையாரால் சமயப்பணி, அறப்பணி, சமுதாயப் பணி, ஆன்மீகப்பணி, கல்விப்பணி போன்ற பல்வேறு பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

தொண்டைமானாற்றிலுள்ள செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் செய்யப்படும் தொண்டுகள் பலவுண்டு. நலிவுற்றோருக்கான பணவசதி, இலவச மருத்துவ சிகிச்சை, தையல் இயந்திரம், துவிச்சக்கரவண்டி வழங்கல், கௌரவிப்பு விழா, திருவாசக விழா, சேக்கிழார் விழா முதலியன ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கும் அன்னதானம் ஒவ்வொருநாளும் திருமோகனதாஸ் சுவாமிகளின் வழிகாட்டுதலில் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

முருகப்பெருமான் ஔவையாரிடம் பெரியது எது எனக்கேட்டபோது புவனம், நான்முகன், திருமால், சிவபெருமான் முதலியன பெரியதென்றார். ஆனால் இறுதியில் "தொண்டரோ இறைவனுள்ளத் தொடுக்கம் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதோ" என்றார்.

மிகவும் உன்னதமான மனிதப் பிறவியைப் பெற்ற நாமும் எம்மாலியன்ற தொண்டுகளை, ஏழைகள், நலிவுற்றோர், அநாதைகள் போன்றோருக்குச் செய்து நாம் பெற்ற பிறவியின் பயனை அடைவோமாக.

**"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினள்**
**தென் கடம்பை திருக்கரக் கோயிலான்**
**தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே"**

மதிக்காத இடத்தில் புத்திகூறக்கூடாது.

உ

# வேண்டுதல்கள்

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

அபிராமிப்பட்டர் தனது வேண்டுதல்கள் பலவற்றை ஒரே பாடலில் நிரல் இட்டு வேண்டுவதைப்போன்று வேறு பலரும் வேண்டுதல் செய்துள்ளனர். பட்டரின் பாடலைப் பாடும்போது இராமலிங்க சுவாமிகளது பாடலும் நினைவில் வந்து நிற்கும், இம்முறை சுவாமிகளின் ஓரிரு பாடல்களில் அவர்வேண்டுவதைப் பார்ப்போம்.

ஒருவரிடம் எதையாவது கேட்கப் போவோர் முதலிலே அவரைப் புகழ்ந்து விட்டுத்தான் தேவையானதைக் கேட்பது வழமை. இறைவனிடம் வரங் கேட்கும் போதும் பெரும்பாலோர் அவனது வரமருளும் தன்மையையும் அவனையும் புகழ்ந்துவிட்டு வேண்டுதல் செய்திருக்கிறார்கள். இராமலிங்க சுவாமிகளும் கந்த வேளைப் பலவாறு புகழ்ந்துள்ளார்.

**வளம்மருவும் உனதுதிரு அருள்குறைவ தில்லைமேல்**
**மற்றொரு வழக்கும் இல்லை**
**வந்திரப் போர்களுக் கிலைஎன்ப தில்லைநீ**
**வன்மனத் தவனும் இல்லை**

என அவர் பாடியுள்ளதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். "நீ வன்மையான மனமுடையவனல்ல. வந்து இரந்து கேட்பவர்களுக்கு இல்லையென்றும் கூறமாட்டாய். உனது திருவருள் குறைவதில்லை எனப் புகழ்ந்தால் அப்படிப்பட்டவன் கேட்டதைக் கொடுப்பது திண்ணமல்லவா? அதற்கும் 'வளம் மருவும்' என்னுமோர் அடைமொழியையும் சேர்த்துப்பாடியுள்ளதால் அவரது அருள்மேலும் பெருகுமென்பதையும் உணர்த்திவிட்டார். எனவே அந்தக் கந்தவேள் அவர் வேண்டியதைக் கொடுப்பது உறுதி. பட்டர்கூட 'சகல செல்வங்களும் தரும் இமயகிரிராச தனயை' எனப் புகழ்வதைப் பார்த்தோமல்லவா?

பட்டரின் அந்தப் பாடலிலே தொனித்து நின்ற வேண்டுதல் போன்றதொரு வேண்டுதல் அமைந்ததாக இராமலிங்க சுவாமிகளின் பின்வரும் பாடலும் உள்ளது.

**நீர் உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற**
**நிலன் உண்டு பலனும் உண்டு**
**நிதி உண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட**
**நெறிஉண்டு நிலையும் உண்டு**
**ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு**
**உடைஉண்டு கொடையும்உண்டு**
**உண்டுஉண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்**
**உளம்உண்டு வளமும்உண்டு**
**தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள**
**செல்வங்கள் யாவும்உண்டு**

காலத்தைத் தவிர நமக்கு எதுவும் சொந்தமில்லை.

**தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்**

**தியானம்உண் டாகில் அரசே**

**தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**

**தலம் ஓங்கு கந்தவேளே**

**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**

**சண்முகத் தெய்வமணியே**

என்ற இப்பாடலில் "கந்தவேளே, நின்பதத்தியானமுண்டானால் செல்வங்கள் யாவும் உண்டு" எனக்கூறுவதன்மூலம் "உன்னைத் தியானிக்கும் எனக்கும் இவையனைத்தும் கிடைக்கும்" என்னும் கருத்தும் இதனுள் அடங்கிக்கிடக்கிறது.

"உனது திருவருளைப்பெற்ற எனக்குப் பிறப்புமில்லை இறப்புமில்லை. "வினைகளும் அணுகாது" எனும் பொருள்பட மற்றொரு பாடலிலே பாடியுள்ளார்.

"ஏற்கனவே குட்டுவாங்கி, சிறைப்பட்டவன் பிரமன். அந்தத் துயரை மறந்திருக்கமாட்டான். எனவே உனது அருள் பெற்ற என்னைப் பிறப்பிக்கமாட்டான். சிவபக்தனான மார்க்கண்டேயரை மரணிக்க வைக்கச் சென்றதால் சிவபிரானால் உதையுண்டு அழிந்த இயமன் என்னை இறப்பிக்கக் கனவிலும் கருதமாட்டான். எனப் புராணக் கதைகளை எடுத்தியம்பி மேற்கூறிய கருத்தை அவற்றினூடாகப் புலப்படக்கூடியதாக அழகுற இராமலிங்க அடிகளார் பாடிய பாடல் வருமாறு.

**பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனோ**

**பெய்சிறையில் இன்னும் ஒருகால்**

**பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்**

**பெறுந்துயர் மறந்துவிடுமோ**

**இரவுநிறம் உடை இயமன் இனிஎன்னைக் கனவினும்**

**இறப்பிக்க எண்ணம் உறுமோ**

**எண்ணுறான் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்**

**இருந்தவடு எண்ணுறானோ**

**கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு**

**காசுக்கும் மதியேன்எலாம்**

**கற்றவர்கள் பற்றும்நின் திருவருளை யானும்**

**கலந்திடப் பெற்றுநின்றேன்**

**தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**

**தலம்ஓங்கு கந்தவேளே**

**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**

**சண்முகத் தெய்வமணியே**

மேற்கூறிய பாடல்கள் அவரது வேண்டுதல்களை உட்கிடையாகவே கேட்டுநிற்கின்றன. பின்வரும் பாடலில் அவர் தமக்கு வேண்டியவற்றை "வேண்டும் வேண்டும்" என நேரிடையாகவே வேண்டிக் கேட்டுள்ளார். இப்பாடல் "கலையாத கல்வியும்" என்னும் பட்டரின் பாடலைப்போன்று பலவற்றைக் கோவையாகக் கூறி

வேண்டினாலும் இருவரும் தேவையெனக் கேட்ட வரங்கள் அனைத்தும் ஒத்தவையெனக் கூறமுடியாது. அதேசமயம் எல்லாம் வேறுபட்டவை எனவும் சொல்லவியலாது. "கபடுவாராத நட்பு" எனப் பட்டர் கேட்டதை "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும்" என இராமலிங்க சுவாமிகள் கோருவார். "பிணியிலாத உடலை" அபிராமிப்பட்டர் வேண்ட "நோயற்ற வாழ்வை" சுவாமிகள் கேட்பார். இவ்வாறு ஒரே வகையான வரங்களைக் கேட்டவர்கள் மாறுபட்டும் வேண்டியுள்ளனர். "அன்பகலாத மனைவியை" பட்டர் கேட்க, "மருவுபெண்ணாசையை மறக்கவேண்டும்" என்பார் இராமலிங்க அடிகளார். இவற்றைவிட இவர் வேண்டிய சிலவற்றை அவர் வேண்டவில்லை. அவர் கேட்ட வரங்களை இவர் கேட்கவில்லை. ஒவ்வொருவரது வேண்டுதல்களும் வேறுபடுவது இயல்புதானே. இனி இராமலிங்க சுவாமிகளின் பாடலைப் பார்ப்போம்.

**ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவுவேண்டும்**
**உள்ஒன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்**
**உறவுகல வாமை வேண்டும்**
**பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை**
**பேசாதிருக்க வேண்டும்**
**பெருநெறிபி டித்தொழுக வேண்டும்மத மானபேய்**
**பிடியா திருக்கவேண்டும்**
**மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை**
**மறவா திருக்கவேண்டும்**
**மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற**
**வாழ்வுநான் வாழவேண்டும்**
**தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
**தலம்ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே**

இப்பாடலில் வரும் அவரது வேண்டுதல்களில் ஆழ்ந்த கருத்துக்கள் உள்ளதையும் நாம் கவனிக்கவேண்டும். "பிரான்தன்னை வாயே வாழ்த்துகண்டாய்" என வாயிடம் நாவுக்கரசர் கூறினார். எமது வாய் இந்த உலகையே சீரழிக்க வல்லது. அதனை நெறிப்படுத்துவதற்கு அருளாளர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சுவாமிகளும் இறைவன் புகழ் பேசவேண்டும்" என வரங்கேட்டுவிட்டு 'பொய்மை பேசாதிருக்க வேண்டும்" என வேண்டியுள்ளார். மெய்யான இறைவன் ஒருவனைத் தவிர்த்து ஏனையவை அவருக்குப் பொய்யாகத் தோன்றியிருக்க வேண்டும். பெண்ணாசை வேண்டாமென்றவர் பொன்னுக்கும் ஆசைப்பட்டாரில்லை. அவர் கேட்டு நின்ற செல்வம் இறைவனது கருணையாகிய நிதி.

இவ்வாறு கந்தவேளிடம் பல வேண்டுதல்களை முன்வைக்கும் இராமலிங்க அடிகளது பாடல்கள் பாடப்பாட எம் மனங்களையும் பண்படுத்தவல்லன.

பொறுமை குறையக்குறைய இறுக்கமான மனநிலை வாழ்நாள்முழுவதும் தொடரும்.

உ

# மாறிவரும் மனநிலை மாறுமா?

**திரு இ. சாந்தகுமார் அவர்கள்**

மனித மனங்களில் எத்தனையோ எண்ண அலைகள் உருவாகி உயர்ந்து செல்லும் தருணத்தில் உள்ளங்கள் உருக்குலைந்திருக்கின்றது. இத்தகைய மாற்றங்களுக்கான காரணம் என்ன? இதற்குரிய சந்தர்ப்பங்கள் என்ன? என்னென்ன காரணிகள் இதற்கு பக்கத் துணையாக உள்ளது? என்று சிந்திக்கவேண்டிய சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

மனித மனங்கள் என்றைக்குமே நல்லதையே சிந்திக்கவேண்டும். நல்லதையே சொல்ல வேண்டும், நல்லதையே செய்யவேண்டும் என்ற சிந்தனைகள், எண்ணங்கள் உருவாக்கப்பட்டு விதைக்கப்பட்டவை. அவை முளைவிட்டு வெளிவரும் பருவத்தில் முளைகளைக் கிள்ளியும், நசுக்கியும், மிதித்தும் அழிக்கும்நிலை உருவாகி வருகின்றது. இந்நிலை மாற வேண்டும், மாற்றப்படவேண்டும். அவ்வாறு இல்லாத நிலையில் இயற்கைச் சீற்றங்கள், அதர்மச் செயல்கள் தலைவிரித்தாடும் நிலை மேலும் மேலும் உருவாகி உலக நியதி மாற்றமடையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

அன்று இலகுவில் பாதிப்புறுவோர் என்ற வகுப்பிற்குள் சிறியவர்கள், முதியவர்கள், அங்கவீனர்கள் போன்றோர்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைய காலம் அனைவருமே இலகுவில் பாதிப்புறும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றோம். இவைகள் எல்லாம் மனிதனை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் விரக்தி நிலைக்கு ஆளாக்குகின்றது.

முன்னைய காலங்களில் ஓரிடத்தில் நிகழும் இறப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு மாதங்களோ, வருடங்களோ எடுக்கும். இறைவன் மீதுகொண்ட பற்றுதல், கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்க விழுமியங்கள் போன்றவற்றிற்கு கட்டுப்பட்டுத் தம்மைத் தாமே நெறிப்படுத்தி ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்ததனால் சிறப்பான ஒரு வாழ்வியலுக்குள் வாழ்ந்து வந்தார் கள். இந்நிலை தற்காலத்தில் மாற்றம் அடைந்து அனைவரும் அன்றாடம் இறப்புக்களையும், இன்னல்களையும், இயற்கையின் கொடூரங்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் தர்மபயம், மரணபயம் இன்றிப் பண்பாடு, கலாச்சார விழுமியங்களை இனியும் கடைப்பிடிக்கத்தான் வேண்டுமா? அவ்வாறு கடைப்பிடித்தாலும் நீண்டகாலம் இவ்வுலகில் வாழத்தான் முடியுமா? என்ற சந்தேகங்கள் தோன்றியுள்ளது. அத்துடன் இன்று இருப்பவர்களை நாளை காண முடியுமா? என்ற ஏக்கமும் இருக்கத்தான் செய்கிறது. வாழும் காலத்தில் ஏதோ வாழ்ந்துவிட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் தமது வாழ்க்கையினை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த மனநிலை மாறுமா? மாறும் சூழ்நிலை உருவாகுமா? என்ற கேள்விக்கு ஒவ்வொரு சமூக, கலாச்சார, நாகரீக, பற்றாளர்களும் தமது உருக்கமான உன்னதமான கருத்துக்களை முன்வைப்பதன் ஊடாக மக்களின் துயர்களுக்கு ஒளிகொடுத்து அவர்களின் மனதில் ஒரு நல்ல மாற்றத்தினை

கொண்டுவர முயற்சிக்கவேண்டும்.

ஒவ்வொரு மனங்களிலும் எரிந்து கொண்டிருக்கின்ற தீ நாளடைவில் வெளிப்படத் தொடங்கும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் விளைவு மிகவும் விபரீதமாக அமைந்துவிடும். ஒவ்வொருவரும் தமது உள்ளங்களிலே இருக்கும் பாரங்களை இறைவன் திருவடிகளிலே சமர்ப்பித்து செய்வதறியாது வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய மன நிம்மதிக்கும், ஓய்வுக்கும் ஆறுதல் அளிக்கும் இடமாக ஆலயங்கள், தியான மண்டபங்கள், சொற்பொழிவுகள், அறிஞர்களின் அறிவுரைகள் ஆச்சிரமங்களின் அர்ப்பணிப்புச் செயல்கள் போன்றன அவர்களை மனிதராக வாழ வழிவகுத்துக் கொண்டிருக்கிறது. மக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணிப்புச் செய்வதன்மூலம் அவை.

'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதனை நாமும் உணர்ந்து மற்றவர்களையும் உணரவைக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக பல உத்தம புருஷர்கள் தம்மை முழுமையாக ஆச்சிரம சேவைக்கு அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக "முயற்சி செய்துபார் அது உனக்கு வெற்றியைத் தரும்" என்ற கூற்றிற்கு அமைவாக நாம் எம்மிடையே இருக்கின்ற உடல், உள ரீதியான மாற்றத்தினை மாற்றிவிட வேண்டுமாயின் இறைவன்மீது நம்பிக்கை கொண்டு உயர்வான பாதையில் முன்னேற வேண்டும் அவ்வாறு நாம் செல்லும்போது பல தடைகள், தடங்கல்கள் தோன்ற நேரிடலாம் அவ்வாறான சந்தர்ப்பத்தில் எல்லாம் வல்ல இறைவன் மீது பாரத்தினைப் போட்டு முழு முயற்சியோடு நாம் சாதகமான மாற்றத்தினை நோக்கி நகர வேண்டும். அவ்வாறு செல்லும்போதுதான் நாம் இறைவனிடத்தில் பூரண சரணாகதி அடையமுடியும்.

மகாபாரதத்தில் பாஞ்சாலியின் துகில் உரியும் சந்தர்ப்பத்தில் அவள் இரண்டு கைகளையும் மேலே தூக்கி கண்ணா..... கண்ணா.... என்று கதறும் போது அவளுடைய துகில் நீண்டு கொண்டே இருந்ததாக நாம் வரலாற்றின் மூலம் அறிந்து கொண்ட பாடம் அதற்கமைய

"இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என்ற நாவலர் வாக்கிற்கிணங்க எங்கள் மனங்களில் இருக்கின்ற பாரத்தினை இறைவனுடைய பாதங்களில் சமர்ப்பித்து பூரணமாக நாம் சரணாகதி அடைவோமானால் மாறிவரும் உலகில் நாம் முழுமையான மனநிலை மாற்றத்தினையும் இறைவனின் அருளையும் ஆசியையும் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

## எப்படி வேண்டுவது?

என் வயலுக்கு மழை பொழியவேண்டும் என்று வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழை பொழியவேண்டும் என்று வேண்டுவது நல்லது. உலகமெல்லாம் மழை பொழிந்தால் அது நம் வயலையும் வந்து சேரும். அதுபோல "ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற வேண்டும் என்று வேண்டுவதுதான் நல்லது. உலகத்திலுள்ள உயிர்களில் நாமும் ஒருவர் தானே?

நல்லபடியாக ஆரம்பி முடிவைப்பற்றி அஞ்சாதே.

நாவலர் பக்கம் உ (தொடர்ச்சி...

# திருவிளையாடற்புராண வசனரூபம்

-ஆறுமுகநாவலர்-

படலம்~ 6

## வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைத் திருக்கல்யாணம் செய்தபின் தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் அனைவரையும் நோக்கி, "போசனஞ் செய்ய வாருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் விரைந்து சென்று தங்கள் தங்கள் நியமங்களை முடித்து பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் செய்து வந்தார்கள். வியாக்கிரபாத மகா முனிவரும், பதஞ்சலி மகா முனிவரும் எம்பெருமானை வணங்கிநின்று, "பரம கருணாநிதியே! கனகசபையிலே தங்கள் திருநடனத்தைத் தரிசனஞ்செய்து உண்பது எங்களுக்கு நியமம்" என்று விண்ணப்பித்தனர்.

சிவபெருமான் அவர்களை அன்பு உருக நோக்கி, "உலகமே வடிவமாகிய விராட்புருடனுக்கு சிதம்பரமே இருதயஸ்தானம்; இம் மதுரை துவாதசாந்தத்தானம்; ஆதலால் சிதம்பரத்திலும் மதுரையே மிக மேலாயது. இங்கே நாம் செய்யும் நடனம் அதி அற்புதமாய் இருக்கும். இந்தத் துவாதசாந்தத்திலுள்ள தாண்டவமூர்த்தி மிக மேலாயது. இத்தகைய சிறப்புக் கொண்ட இந்தத் தலத்திலே நம்முடைய நடனத்தை உங்களுக்குக் காண்பிப்போம்" என்று அருளிச்செய்து முனிவர்களோடு திருக்கோயிலினுள்ளே எழுந்தருளினார். அங்கே அவரது அருட்பார்வையினால் ஒரு வெள்ளியம்பலமும் அதனிடத்தே ஒரு மாணிக்க வேதிகையும் தோன்றின.

சிவபெருமான் அவ்வேதிகையின் மேல் ஞானப்பேரொளி வடிவாகத் தோன்றி முயலகன்மேலே வலப்பாதத்தை வைத்து, இடப்பாதத்தைத் தூக்கி சற்று வளைத்து, திருவெண்ணீறு அணிந்த திருமேனியுடன் திருநடனஞ் செய்தருளினார். வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலியும் ஏனையோரும் நடன தரிசனம் செய்து வணங்கி அன்புருவாகி நின்றனர். திருமணங் காண வந்த மனிதர்களும் இந் நடனத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக நின்றனர்.

படலம்: 7

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

தடாதகைப் பிராட்டியார், திருக்கல்யாணம் தரிசிக்க வந்த முனிவர்கள், தேவர்கள், அரசர்கள் யாவரையும் அமுது செய்வித்து அனுப்பிவைத்தபின் உணவு தயாரிக்கும் பணியிலிருந்தோர் பிராட்டியாரை வணங்கி, "அடியேம் சமைத்த உணவில் ஆயிரத்தில் ஒரு பகுதிகூட முடிந்திலது. மிகுதி அவ்வளவையும் என் செய்வோம்" என வினவி நின்றனர். தடாதகைப் பிராட்டி தன் கணவராகிய சௌந்தரபாண்டியர் திருமுன் சென்று பணிந்து வணங்கி ஒதுங்கி நின்றபடி, "சமைத்த அன்னத்தில் இமயமலையளவு இன்னமும் குவிந்துகிடக்கிறது. கறிவர்க்கமும் அப்படியே. என் செய்யலாம்?" என்று விண்ணப்பித்தார்.

இறைவன் சிரித்துக்கொண்டே, "எல்லோரும் வயிறார உண்டு போயினர்.

ஆர்வத்துடன் செயல்ப்படாதவனுடைய உள்ளத்தில் மாபெரும் புதுமைகள் பிறப்பதில்லை.

என்ன செய்யலாம்?" என்றபடி யோசித்து, அருகிலே நின்ற குண்டோதரர் வயிற்றில் கடும்பசி தோன்றும் வண்ணம் திருவுளம் கொண்டார். குண்டோதரரும் நஞ்சுண்டாற் போல உடல் சோர்ந்து, வேர்த்து, ஆவி ஒடுங்கி, "சுவாமி! கடும்பசியினால் வருந்துகின்றேன்" என்றார். தடாதகைப் பிராட்டியின் ஏவல் மகளிர்கள் குண்டோதர ரைக் கொண்டுபோய் அன்னத்தின் முன் விடுத்தார்கள். குண்டோதரர் அங்கிருந்த அன்னத்தையும் பலவகைக் கறிகளையும், பால், தயிர், நெய், தேன் வகைகளையும், பழவகைகளையும் தேங்காய்களையும் வேகாத அன்னத்தையும் எடுத்தெடுத்து உண்டும் பசி நீங்காமல் வருத்தமுற்றார்.

இது கண்ட சேடியர்கள் சிலர் அதிசயம் அடைந்தார்கள். சிலர் தடாதகைப் பிராட்டி யாரிடம் ஓடிச்சென்று நடந்ததைக் கூற, பிராட்டியார் சிவபெருமான் முன்புபோய் நின்றார். சிவபெருமான் எதுவும் அறியாத வர்போல, "குண்டோதரர் உண்டதுபோக மிகுதி ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார். இதுகேட்ட பிராட்டியார், "குண்டோதரருடைய பசி அடங்கவில்லை. என் செய்யலாம்?" என்றார். அருகே வந்த குண்டோதரரும், "சுவாமீ! எம்பிராட்டி சமைப்பித்து மலைபோலக் கிடந்த அனைத்தையும் உண்டும் எம்பசி தணி யாது வயிறு காந்துகிறது" என்றுகூறி ஆவி சோர்ந்து அயர்ந்தார்.

படலம்: 8

## அன்னக் குழியும் வைகையுமழைத்த படலம்

கிருபா சமுத்திரமாகிய சோமசுந் தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியாரைப் பார்த்து உள்ளூர சிரித்துக்கொண்டே பசியினால் வருந்துகின்ற குண்டோதரன் பொருட்டு **அன்னபூரணியை** நினைந் தருளினார். உடனே, நான்கு குழியிலே தயிர்கலந்த அன்னம் தோன்றியது. சோம சுந்தரர் அத்தயிரன்னத்தைப் புசிக்கும்படி குண்டோதரரைப் பணித்தருளினார். குண்டோதரரும் அத்தயிர் அன்னத்தைத் தம் கைகளினால் எடுத்துப்புசிக்க பசி நோய் நீங்கியது. சற்று நேரத்தில் உடல் வீங்கி, தாகத்தினால் வருத்தமுற்று, நிலத்தின்மீது விழுந்து புரண்டான். ஒரு வாறு எழுந்து வாவிகள், ஓடைகள், குளங் கள் முதலிய நீர்நிலைகளில் உள்ள நீரையெல்லாம் குடித்தான். குடித்தும் தாகம் நீங்காமையால் சோமசுந்தரக் கடவுள் திருவடியிலே வீழ்ந்து விண்ணப்பம் செய்தான்.

சிவபெருமான் தன் திருமுடியின் மேல் இருக்கும் கங்கையைப் பார்த்து, "நீ இம் மதுரையின் புறத்தே ஒரு நதியாய் விரைந்து வருவாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார். கங்கையும் சிவபெரு மானை வணங்கிப் புறப்பட்டு, அளவில்லா வேகத்துடன் மதுரையின் புறத்தே ஒரு நதியாய் ஓடிவந்தது. சோமசுந்தரர் குண்டோதரரை அந்நதியிடத்தே விடுத்தார். குண்டோதரர் நதி நடுவே புகுந்து இருந்து கொண்டு, இரு கைகளாலும் நதியை மறித்து, வாயை அகலத் திறந்து நீரைக் குடித்து பின்னர், எம்பெருமான் திருமுன் சென்று திருவடிகளை வணங்கி ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்திருந்தார். சோமசுந்தர பாண்டியர் திருவுளம் மகிழ்ந்து குண்டோ தரரைக் கணங்களின் தலைவராக்கி, தடாதகைப் பிராட்டியாரோடு பூமியை அரசு செய்துகொண்டிருந்தார்..

இவ் வைகை நதியானது சிவ கங்கைநதி, சிவஞானநதி, வேகநதி, கிருதமாலை எனப் பல பெயர் பெறும்.

ஒழுக்கம் போர்க்களம் போன்றது. அதில் நிலைபெற்றிட ஓயாமல் மனதுடன் போராட வேண்டும்.

உ

# ஔவையார் அருளிச்செய்த

# கொன்றைவேந்தன்

## மூலமும் உரையும்

### காப்பு

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

பதவுரை: கொன்றை- கொன்றைப் பூமாலையைச் சூடிய, வேந்தன்- சிவபெருமானுக்கு, செல்வன்- குமாரராகிய விநாயகக் கடவுளுடைய, அடிஇணை- பாதங்களிரண்டையும், என்றும்- எந்நாளும், ஏத்தி- துதிசெய்து, தொழுவோம்- வணங்குவோம், யாம்- நாங்கள் என்றவாறு.

ஏகாரம் ஈற்றசை.

### சூத்திரம்

*1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.*

ப-ரை. அன்னையும்- தாயும், பிதாவும்- தகப்பனும், முன்- முன்னே, அறி- காணப்பட்ட, தெய்வம்- தெய்வங்களாவார்.

*2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.*

ப-ரை. ஆலயம்- கோயிலுக்குப்போய், தொழுவது- கடவுளை வணங்குவது, சாலவும்- மிகவும், நன்று- நல்லது.

*3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று*

ப-ரை. இல்லறம்- (மனையாளோடு கூடிச்செய்யும்) இல்லறமானது, நல்அறம்- எளிதிற் செய்யத்தகும் அறமாகும், அல்லது- இல்லறமல்லாத துறவறமானது, அன்று- எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும்.

*4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.*

ப-ரை. ஈயார்- கொடாதவருடைய, தேட்டை- சம்பாத்தியத்தை, தீயார்- (கள்ளர் முதலாகிய) தீயவர், கொள்வர்- அபகரிப்பர்.

*5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.*

ப-ரை. உண்டி- போசனம், சுருங்குதல்- (அளவிற்) குறைதல், பெண்டிர்க்கு- பெண்களுக்கு, அழகு- அழகாகும்.

*6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.*

ப-ரை. ஊருடன்- (தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின்- (ஒருவன்) விரோதித்தால், வேருடன்- (தன்) வமிசத்துடன், கெடும்- (அவன்) கெடுவான்.

(தொடரும்...

உ

# அவதாரபுருஷர்கள்

திரு ஆ. மகேசு அவர்கள்

இந்தப் பரந்த உலகத்திலே கோடிக் கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. இந்த உயிர்கள் அனைத்தையும் படைத்தவன் இறைவன். படைத்த உயிர்களைக் காப்பவனுமவனே. இந்த உயிர்கள்மீது வைத்துள்ள அளவிறந்த கருணையினாலே இறைவன் காலத்திற்குக் காலம் தன்னுடைய பிரதிநிதிகளை (அருளாளர்களை) இந்த மண்ணுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றார். அந்த வகையில் தாம் பெற்ற இன்பத்தைப் பெறாதவர்க்கு இடித்துக்கூறிப் பெறவைக்கும் பெருங் கருணைப் பேராளர்கள் அவதார புருஷர்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.

பந்தத்தினின்றும் விடுபட்டு முத்தி நிலையெய்திப் பேரானந்தப் பெருவெள்ளத்தை அள்ளிப்பருகி, அதனைப் பருகாத மற்றைய மாந்தர்களும் பருக வேண்டும் என்ற பரம கருணையால்த் தமது நிலையினின்றும் இறங்கி வந்தவர்கள் அவதார புருஷர்கள்.

இந்த வகையில் அப்பர் முதலிய சமயகுரவர்கள், ஆழ்வாராதிகள், பட்டினத்தார், அருணகிரிநாதர், திருமூலர், தாயுமானவர் முதலானவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் எல்லோரும் இறைவனுடைய சிவானந்தப்போகமென்னும் பேரின்ப வெள்ளத்திலே திளைத்தவர்கள். இவர்கள் தாம் அனுபவித்த பேரின்பத்தை மற்றைய மாந்தர்களுக்கும் வழங்க வேண்டும் என்று நினைப்பவர்கள். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் குறிக்கோளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட அவதார புருஷர்களுள் ஒரு சிலருடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வது சிறப்புடையதாகும் என எண்ணுகின்றோம்.

**"ஒன்று கண்டீர் உல குக்குஒரு தெய்வமும்**
**ஒன்றுகண் டீர்உல குக்குஉயி ராவது**
**நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழம்**
**தின்றுகண் டேற்குஇது தித்திக்க வாறே"**

என்பது திருமூலர் திருமந்திரம். ஒன்றுமறியாத ஏழைமக்களே! இங்கே வாருங்கள், உள்ளே வந்து பாருங்கள், ஏன் கஷ்டப்படுகின்றீர்கள்? உள்ளே வெள்ளமாக ஓடுகின்றது. என்ன வெள்ளம்? இஃதுவெள்ளம். எத்தனையோ காலமாகக் கங்குகரையின்றிப் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கிடக்கின்றது. உங்கள் அறியாமைதான் என்னே? மதிமயங்கிய மனிதர்களே வாருங்கள் நாளைக்கு வருகின்றேன். அடுத்த ஆண்டில் வருகின்றேன். அறுபது வயதிற்கு மேல் வருகின்றேன். பேரன் பேர்த்திகள் பிறந்தபின் குடும்பச் சுமையை மகன் தலையில் இறக்கிவிட்டு வருகின்றேன். இப்போது எனக்கென்ன வயதாகிவிட்டதா? வயது முதிர்ந்தபின் வருகின்றேன் என்று கூறாதீர்கள். இந்தத்தேகம் எந்தக் கணத்தில் கீழே

விழுமோ? இது நிலையில்லாதது. இப்பவோ? பின்னையோ? சற்று நேரத்திலோ? ஆகவே இத்தேகம் விழுமுன் நீங்கள் எல்லோரும் வந்து சிவயோக அமுதத்தைப் புசியுங்கள் என அழைக்கின்றார்.

**"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ**
**போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்**
**ஏக உருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனி எடுத்த**
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"**

என அழைக்கின்றார் தாயுமான சுவாமிகளாகிய அவதாரபுருஷர்.

ஆறறிவு படைத்த மனிதர்களைப் பறவைகளுக்கும் விலங்குகட்கும் உதாரணங்காட்டி உபதேசிப்பது வழக்கம். இங்கே மனிதர்கட்கு காக்கையை உதாரணங்காட்டி விளக்குகின்றார். நான் உங்களை ஏன் அழைக்கின்றேன் தெரியுமா? இந்தச் சிவயோக இன்பவெள்ளத்தை நான் தனித்து உண்ண விரும்பவில்லை. காக்கை தனக்குக் கிடைத்த உணவைத் தனியே உண்பதில்லை. கா, கா என்று கரைந்து தனது இனத்தவர்களை அழைத்து ஒன்றுகூடி உண்பதை நாம் தினமும் காண்கின்றோம் அல்லவா? இதனையே வள்ளுவப் பெருந்தகையும்

**"காக்கை கரவா கரைந்துண்ணும், ஆக்கமும்**
**அன்னநீரார்க்கே உள"**

என்று கூறியிருப்பதை நாம் எமது அகத்திலெடுத்தோமா? அந்தக் காக்கைக்கு இருக்கின்ற நல்லறிவு கூட ஆறறிவு படைத்த மனித இனமாகிய எமக்கு இருக்கவேண்டாமா? கிடைத்ததைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு தனியே உண்ணலாமா? எல்லோரும் வாருங்கள் சேர்ந்து புசிக்கலாம் என்று கருணையுடன் அழைக்கின்றார் அவதார புருஷராகிய தாயுமானவர்.

கற்ற வித்தைகளினால் முத்திவராது வித்தையினை விடுங்கள். மயிலையும், அவன் திருக்கை அயிலையும், அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே என மற்றோர் அவதாரபுருஷராகிய அருணகிரியார் அழைக்கின்றார்.

**"........ உங்கள் வித்தை**
**யிளையினி விடும் பெருத்த பாருளீர்**
**மயிலையும் அவன் திருக்கை**
**அயிலையும் அவன் கடைக்கண்**
**இயலையும் நினைந்திருக்க வாருமே"**

என்று கடுமையாக நம்மை வைது அழைக்கின்றார். எம்மீது வைத்துள்ள கருணையின் மிகுதியால்த்தான் அப்படி எம்மை வைகின்றார் என்பதை நாம் உணரவில்லை. வேட்டியை அடித்தடித்து வெண்மையாக்குவதுபோல, பொன்னைத்தட்டி அணிகலன்கள் செய்வதுபோல, ஆன்றோர்கள் நம்மைச் சில சமயங்களில் இடித்துக் கூறியிருக்கின்றார்களென்றால், முழுக்க முழுக்க நம்மைத் திருத்துவதற்காகவே என்பதை நாம் மறந்துவிடுகின்றோம்.

அடுத்து இருப்போரை இகழ்தல் மதிகெட்டோரின் செயல்.

**"நகுதற் பொருட்டன்று நட்டல்மிகுதிக்கண்**
**மேற்சென் றிடித்தற் பொருட்டு"**

என்பது மேற்கூறிய கருத்துக்கு வலுச்சேர்க்கின்றது அல்லவா? நட்பு என்பது என்ன? ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்வது தாம் கூடிப்பேசி மகிழ்வதற்காக மட்டுமல்ல. இருவருள் ஒருவர் தர்மநெறி கடந்து, அநீதியான முறையிலே நடந்து செல்லும்போது அவரைக் கடிந்துரைத்துத் திருத்துவதற்கே நட்பு பயன்படவேண்டும் என்று, என்றோ கூறியிருக்கின்றார் வள்ளுவர்.

ஆகவே காலத்துக்குக் காலம் இறைவனால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த அவதாரபுருஷர்களது வாழ்வியல் முறைகள் அவர்களால் எமக்குத் தரப்பட்டுள்ள கருத்துக் கருவூலங்கள், எமது இக்கால வாழ்க்கை முறைக்கு எவ்வாறு பொருந்தும் என்கின்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் காலத்தை அவமே போக்காமல், சமயநெறிகள்தான் எமது வாழ்க்கையைச் சீராக, நேராக அமைக்க உதவும் என்பதற்கு அவதார புருஷர்களது கருத்துக் கருவூலங்கள் வழிசமைக்கின்றன என்பதை உள்வாங்கி எமது பிறவிப்பயனை இறுதிசெய்ய திட சங்கர்ப்பம் பூணுவோமாக.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்**
**இறைவனடி சேரா தார்"**

---

## செல்வச்சந்நிதி ஆலய விஷேட உற்சவ தினங்கள்

### ஆனி

**05.06.2009 வைகாசி 22 வெள்ளி**
வைகாசி விசாகம் விஷேட உற்சவம்

**20.06.2009 ஆனி 06 சனி**
கார்த்திகை உற்சவம்

**29.06.2009 ஆனி 15 திங்கள்**
ஆனி உத்தரம் விஷேட உற்சவம்
இரவு தீர்த்தமெடுப்பு

---

## ஆனிமாத குருபூசை தினங்கள்

**09.06.2009 வைகாசி 26 செவ்வாய்**
திருஞானசம்பந்தர் குருபூசை
திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை

**27.06.2009 ஆனி 13 சனி**
மாணிக்கவாசகர் குருபூசை

---

வயிற்றுக்கு மட்டுமே உணவளிப்பதைச் சிந்திப்பவன் தன் அறிவைப் பட்டினி போடுகிறான்.

உ

(தொடர்ச்சி...

# 2009ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| கு. கங்கைவேணியன் வேணி ஸ்ரோர்ஸ் | | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| வே. கணேசமூர்த்தி (திக்கம்) | | மாத்தளை | 5000. 00 |
| சி. சோமகுலசேகரம் குமரன் | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| த. சுதாகர் | இடைக்காடு | அச்சுவேலி | 1000. 00 |
| வே. வில்வராசா | | சுதுமலை | 2000. 00 |
| இ. யோகானந்தன் | | அச்சுவேலி | 5000. 00 |
| சி. முருகேசம்பிள்ளை குடும்பம் | சிவன்வீதி | பருத்தித்துறை | 3000. 00 |
| சி. சந்திரலிங்கம் | நீதி. மன். பதிவாளர் | அச்சுவேலி | 20k அரிசி 500. 00 |
| சி. வேலும்மயிலும் | | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| செல்வி நேசமலர் ஆசிரியை | | கனடா (உடுப்பிட்டி) | 26400. 00 |
| Dr N. நகுலேந்திரன் | | அமெரிக்கா | 249 டொலர் |
| M. சதாசிவமூர்த்தி | | கனடா | 25000. 00 |
| திருமதி தேம்பாமலர் இந்துசேகரம் | | அவுஸ்திரேலியா | 65684. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை | | கைதடி | 1000. 00 |
| ச. இரத்தினம் | கிருஸ்ணாமில் சாரையடி | புலோலி | 1மூடை அரிசி |
| K. திருநாவுக்கரசு | | மானிப்பாய் | 2000. 00 |
| செ. சரஸ்வதி | மகாத்மாலேன் | நெல்லியடி | 5000. 00 |
| வ. குமாரசாமிஐயர் | மயிலணி | சுண்ணாகம் | 1000. 00 |
| சி. சிவசுப்பிரமணியம் | ஆனந்தநிலையம் | கரவெட்டி | 2000. 00 |
| P. மாணிக்கவாசகர் | | நியூசிலாந்து | 3000. 00 |
| S. கேசவன் ஆசிரியர் | | கொழும்பு | 1000. 00 |
| சி. அச்சுதன் | மகாத்மா வீதி | நெல்லியடி | 5000. 00 |
| S. ஸ்ரீஸ்கந்தராசா | நவிண்டில் | கரணவாய்மத்தி | 5000. 00 |
| விஜயசிவாஜி மூலம். V. பார்த்தீபன் அஞ்சனா குடும்பம் | | அவுஸ்திரேலியா | 75000. 00 |
| வினோதா சற்குணராசா | | அவுஸ்திரேலியா | 10800. 00 |
| V. மாணிக்கராசா | வறாத்துப்பளை | பருத்தித்துறை | 1200. 00 |
| M. சிவகுமாரன் | | திருநெல்வேலி கிழக்கு | 1000. 00 |
| S. திலகரெட்ணம் | டச்சுறோட் | மூளாய் | 500. 00 |
| ந. சிவசுப்பிரமணியம் | மாதனை | பருத்தித்துறை | 1000. 00 |
| ம. விசாகரெத்தினம் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சுந்தரராஜன் ரமணன் | | நவாலி வடக்கு | 10000. 00 |
| குலசேகரம் ஞானேந்திரன் | (வருணன்) | அவுஸ்திரேலியா | 40000. 00 |
| தியாகராசா அன்னலெட்சுமி | | சங்கானை | 10000. 00 |
| ஞானேஸ்வரி சுதா | | கொழும்பு | 4500. 00 |

பொய் சொல்லி வாழ்ந்தவனும் இல்லை மெய் சொல்லிக் கெட்டவனும் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| Dr K. சிவஞானசூரியர் | | கொழும்பு | 1500. 00 |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | கொழும்பு | 5000. 00 |
| திரு கதிர்வேல் | சுழிபுரம் | கொழும்பு | 1000. 00 |
| நா. சிவசிதம்பரலிங்கம் | இளை. அதிபர் | குப்பிளான் | 5000. 00 |
| முருகேசு மகேஸ்வரி | | நெல்லியடி | 1000. 00 |
| திரு கீர்த்தி குடும்பம் | | இளவாலை | 1000. 00 |
| T.G. ராஜா | | அல்வாய் | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் இளை. வை. பொறுப்பதிகாரி | | தோப்பு அச்சுவேலி | 1000. 00 |
| பேராசிரியர் சிவநாதன் | பல்கலைக்கழகம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு ஜெயா | | ஜேர்மன் | 50யூரோ |
| திரு மகாலிங்கம் | | ஜேர்மன் | 10யூரோ |
| திருமதி கி. கனகசிங்கம் | | உரும்பராய் | 500. 00 |
| தி. சந்திரமோகன் | | கனடா | 20000. 00 |
| தி. இந்திராணி | இராமலிங்கம்வீதி | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| S. தர்மலிங்கம் ஊடாக சித்தங்கேணி திருமதி | | யமுனா வர்ணன் பிரான்ஸ் | 10000. 00 |
| வே. ஆழ்வாப்பிள்ளை | குரும்பகட்டி | புலோலி | 2000. 00 |
| K. சதுசன் | | மானிப்பாய் | 5000. 00 |
| M. மைதிலி | | உரும்பராய் | 2000. 00 |
| S.K. குருபரன் | கைதடி | கொழும்பு | 2000. 00 |
| S. சுப்பிரமணியம் | T.V. நகர் | சென்னை | 1000. 00 |
| தி. சோமாஸ்கந்தமூர்த்தி | | கொழும்பு | 450. 00 |
| தாஸ் குடும்பம் மலர் | | தொண்டைமானாறு | 5000. 00 |
| ஆ. இராசரெத்தினம் | | கொழும்பு | 1000. 00 |
| தில்லைநாயகம் ஞான்சிராணி | | ஏழாலை | 2000. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு கார்த்திகேசு ஆசிரியர் | | முறிகண்டி | 10000. 00 |
| கந்தசாமி சிவயோகநாயகி | | உடுப்பிட்டி | 1500. 00 |
| மோ. விபீசணன் | | சரசாலை | 5000. 00 |
| சு. விக்னேஸ்வரன் | மந்திகை | புலோலி | 2000. 00 |
| திரு பாலசாந்தன் | | கோப்பாய் தெற்கு | 3000. 00 |
| தயாசாகரி | சரஸ்வதி இல்லம் | கோப்பாய் | 1000. 00 |
| ஆ. சிவநாதன் அதிபர் | | நெல்லியடி | 1000. 00 |
| ஆ. ஜெகநாதன் | இளை. அதிபர் | பருத்தித்துறை | 1000. 00 |
| ஐ. இராமச்சந்திரா | லவ்லேன் | உடுவில் | 2500. 00 |
| கந்தையா யோகேஸ்வரன் | | கொழும்பு | 1000. 00 |
| தியாகராசா லோகேஸ்வரி | புறூடிலேன் | அரியாலை | 1000. 00 |
| கந்தையா வதனி | புறூடிலேன் | அரியாலை | 1000. 00 |

(தொடரும்...

பிறர் தவறுகளைக் கண்டு தன்னுடைய தவறுகளை திருத்திக் கொள்பவன் அறிவாளி.

உ

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்.....

செல்வி தி. வரதவாணி அவர்கள்

சென்ற சித்திரை ஞானச்சுடர் மலரினைப் பார்த்துவிட்ட அதிபர் குக தாசன் தனக்கு நேர்ந்த ஐயாவின் அருட் கடாட்ச சம்பவமும் கிட்டத்தட்ட இதே மாதிரித்தான் என்று கூறித்தாமும் சென்ற மலரில் குறிப்பிட்டது போன்று தனது மகனின் வேண்டுதலுக்காகவே இன்று ஐயாவின் சமாதிக்கு வந்துள்ளேன் என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் தமக்கும் ஐயா வுக்குமான தொடர்பும் அவர் அருளினைப் பார்த்து தாம்பெற்ற அனுபவத்தினையும் பற்றிக் கூறலானார். அப்பொழுது நான் ஆசிரியராக பணிபுரிந்து கொண்டிருந்தேன். ஏதோ எல்லாவிதமான கஷ்டங்களும் ஒன்று சேர்ந்து சரியாகக் கஷ்டப்பட்டேன். இறைநம்பிக்கை ஒன்றுடன் வாழ்ந்து வரலானேன். அப்பொழுது அயலில் இருப் பவர் ஒருவர் அளவெட்டி அருட்கவி ஐயா பேசும் தெய்வம் அவரிடம் சென்று முறை யிடும் துன்பம் அகலும் என்றார். ஆனால் சரியாகப் பேசுவார் என்றும் கூறினார். இலே சான மனப்பயத்துடன் அவர் பேச்சுக்குப் பயந்தவாறு ஐயாவிடம் வந்தேன். அவரும் சாதாரணமாக கதைத்து ஆசியும் வழங் கினார். அதன் பின்னர் பீடித்திருந்த துன் பங்கள் சற்று விலகுவதை உணர்ந்தேன். ஆயினும் ஐயா அவர்கள் முன்பு பெரி தாகத் தன்னுடன் கதைப்பது இல்லை. என்றும் நாளாக நாளாக ஐயாவிற்கும் தனக்கும் இடையே ஓர் இறுக்கமான அன்பு வளரலாயிற்று என்றார்.

இப்படியே இருக்கையில் மகளுக் குத் திருமணம் பேசுவதில் பல தடங்கல் கள் சம்பவித்தன. ஐயாவிடம் மகளைக் கூட்டி வந்தபொழுது அவர் நல்லாசி வழங் கினார். ஓரிரு மாதங்களில் அதுவும் நடந் தேறியது. ஒருவாரத்தில் இருமுறை ஐயா வைத் தரிசிப்பேன்.

பின்னர் மகளுக்குக் குழந்தை கிடைக்கவில்லை. அன்று ஆலயப் பூசையை முடித்து வந்த ஐயா மகளை ஆசீர்வதித்து விட்டு அடுத்த வருடம் உன் கணவருடன் மூன்றாவது ஒருவரையும் கூட்டி வருவாய் என்றார். அவ்வாறே மறு வருடம் மகளுக்கு ஓர் மகள் பிறந்தாள். முதன்முதலில் தன் பேத்திக்கு ஐயா விடம் ஆசீர்வாதம் பெறப்பட்டது. மகள் குடும்பமும் அவர்களது தொழில்வாய்ப்புக் கருதி திருகோணமலையில் வசித்து வரு கிறார்கள். பாடசாலை அதிபராக தான் கடமை ஏற்றதுடன் ஐயா அவர்கள் ஆசி யுடன் ஓர் தனியார் கல்வி நிறுவனத்தையும் ஆரம்பித்தேன் எனக் கூறினார். இவ்வாறு இருக்கையிலே கால கணக்குக்கேற்ப மனி தத் தெய்வமாகிய அருட்கவி ஐயா தெய்வமாக சமாதிநிலை பெற்று விட் டார். அதன் பின்னர் ஏற்பட்ட வேலைப்பளு காரணமாக ஐயாவின் சமாதி தரிசனத்தை வெகுவாக குறைக்க வேண்டியதாயிற்று.

நாட்கள் கடந்தன. மகள் ஒருநாள் தனது மகளுக்கு அகோரமான காய்ச்சல் அயலில் ஒரு குழந்தை இக்காய்ச்சலால் இறந்துள்ளது. பயமாக இருக்கிறது. அருட்கவி ஐயாவின் சமாதிசென்று வழி படுங்கள் என்றார். அவ்வாறே செய்தபின் இன்று தன் பேர்த்தி எதுவித குறையும் இன்றி இருப்பதாகவும் அவரின் பேரில்

பூஜை செய்யவே இன்று வந்துள்ளேன் எனவும் கூறினார்.

என்றும் எமக்கு ஐயா அவர்கள் ஓர் தெய்வம் அவர் இன்றும் எம்மை வழிநடத்திச் செல்கிறார் என்பது உண்மை என்றுகூறி ஆனந்தக்கண்ணீர் மல்கினார் அப்பெரியவர்.

இவ்வாறு இடைக்காட்டில் வசிக்கும் அதிபர் குகதாசன் அவர்கள் கூறிய இக்கருத்தானது சாதாரண நிகழ்வுடன் ஒன்றிணைக்கப்பட்டாலும் ஒரு நோக்குடன் நாம் செல்லுகையில் எத்தனை இடைத்தடங்கல் வந்துசேரும். அப்பொழுது தான் எமக்குக் கை கொடுப்பது இறை பலமும் ஆன்மீக வாதிகள் அருளாசியும் அதைத்தான் அருட்கவி ஐயாவிடம் பெற்றுக்கொண்டதாகவும் இன்றும் ஓர் தெய்வமாகவும் தமக்கு அருளாசி வழங்கு வதாகவும் குறிப்பிடும் கருத்துக்கள் எம்மை அருட்கவி ஐயாவின் அருட்திறத்தை எண்ணி மெய்சிலிர்க்க வைக்கிறது.

## வருடாந்த வைகாசிப் பெருவிழா – 2009

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடந் தோறும் நடாத்தப்பட்டுவரும் வருடாந்த வைகாசிப் பெருவிழா எதிர்வரும் 05.06.2009 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

வழமைபோன்று அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்வுகளின் வரிசையில் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களின் சொற்பொழிவும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

இறுதியாக அறுபத்துமூவர் குருபூசையுடன் விழா இனிது நிறைவுறும்.

### பாடி மகிழ்ந்து கொண்டேன்

உண்டுஅவனரு லென்ற அறிவுக்கெட்டா
அற்புத உண்மைகளின் வாயிலாக்
கண்டதைக் கண்டவன் நானன்று
அதற்குண்டான உயர் அறிவு என்னிடமில்லை
கண்டேன் அவனருளை யென் அடிப்படை
அறிவுகளைக் கொண்டே - அதனால்
கண்டவர் பெருமைகளை யெலாம்
கண்டு கொண்டேன் - பயனாய்
தொண்டருள் தொண்டராயாகிவிட
முடியாவிட்டாலும் - உணர்வுபூர்வமாய்
தொண்டர் தம் பெருமைகளைக் கண்டு
கொண்டேன் - அன்னதானக் கந்தனாய்
தொண்டை மானாறு மேவும் செல்வச்
சந்நிதியான் புகழை பாடி மகிழ்ந்து கொண்டேன்.

*திரு இராம ஜெயபாலன் அவர்கள்*

சத்தியத்தை விரும்புங்கள் தவறை மன்னித்து விடுங்கள்.

உ

(தொடர்ச்சி...

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவை

## 5. தீண்டத் தகாதவை

**எச்சிலார் தீண்டார் பசு பார்ப்பார் தீ தேவர்**
**உச்சந் தலையோடு இவை என்ப யாவரும்**
**திட்பத்தால் தீண்டாப் பொருள்.**

எச்சிலுடன் தீண்டப்படக் கூடாதவை, பசு, பார்ப்பனர், தீ, தேவர், உச்சந்தலை என்று கூறுவர். உறுதியாக இவை எவரும் தீண்டக் கூடாத பொருள்கள்

திட்பம்- உறுதி.

## 6. எச்சிலுடன் காணக் கூடாதது

**எச்சிலார் நோக்கார் புலை திங்கள் ஞாயிறு நாய்**
**நக்கவீழ் மீனோடே இவ்வைந்தும் நெற்றென**
**நன்கறிவார் நாளும் விரைந்து.**

எச்சிலுடன் காணக்கூடாதவை புலையர் சந்திரன், சூரியன், நாய், எரி நட்சத்திரம் என்னும் ஐந்தும் என்று; நன்மை தீமைகளை நன்குணர்ந்தோர் நாளும் அறிந்து கூறியவை.

புலை- புலையர்; நக்க- விரும்பு, வீழ்மின்- எரிந்து வீழ்கின்ற நட்சத்திரம்.

## 7. எச்சில் எவை எவை

**எச்சில் பலவும் உள மற்றவற்றுள்**
**இயக்கம் இரண்டும் இணைவிழைச்சு வாயில்**
**விழைச்சு இவை எச்சில் இந்நான்கு.**

எச்சில்கள் என்று எத்தனையோ இருக்கின்றன. என்றாலும் அவற்றுள் சிறுநீர், இயக்கம் இரண்டுடன், இரண்டுடல் சேர்க்கை, வாயூறும் உமிழ்நீர் என்னும் இவை நான்குமே எச்சில்களாகும்.

இணை- ஆண்- பெண்; விழைச்சு- கூடல்

## 8. எச்சிலுடன் படிப்பதும் படுப்பதும் கூடாது

**நால்வகை எச்சிலும் நன்கு கடைப்பிடித்து**
**ஓதார் உரையார் வளராரே எஞ்ஞான்றும்**
**மேதைகள் ஆகுறு வார்.**

முன்பாடலில் கூறப்பட்ட நான்கு வகை எச்சில்களையும் நன்கு அறிந்த, அறிவாளியாக விளங்க விரும்புபவர்கள் எவரும்; எச்சிலுடன் நூலைப்படிக்க மாட்டார். உரையாடவும் மாட்டார். கண்ணுறக்கமும் கொள்ளார்.

வளரார்- கண்ணுறங்கார்; எஞ்ஞான்றும்- எப்போதும்; ஆகுறுவார்- விரும்புபவர்.

அயராமல் உழைப்பவனே உண்மையான மேதை.

## 9. கடவுளைத் தொழுவது எப்படி?

**நாளந்தி கோல்தின்று கண்கழீஇத் தெய்வத்தைத்**
**தானறியும் ஆற்றால் தொழுது எழுக அல்அந்தி**
**நின்று தொழுதல் பழி.**

விடியற்காலையில் எழுந்து, பல்குச்சியால் பல் விளக்கி, கண், முகம், கழுவித் தூய்மை செய்துகொண்டு; அவரவர் முறைப்படியும், வழிப்படியும் இறைவனைத் தொழுது வணங்கவேண்டும். மாலைப்பொழுதில் நின்றபடியே தெய்வம் தொழுதல் குற்றமாகும்.

நாளந்தி- விடியற்காலை; கோல்- பல்குச்சி; அல்அந்தி- மாலைப்பொழுது.

## 10. நீராட வேண்டிய நேரம் பத்து

**தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை**
**உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது**
**வைகு துயிலோடு இணை விழைச்சு கீழ்மக்கள்**
**மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்**
**ஐயுறாது ஆடுக நீர்.**

கடவுளை வணங்கி, வழிபடத் துவங்கும் முன்பும், கெட்ட கனா கண்ட பின்பும், தூய்மை கெட்டபோதும், உண்ட உணவு விக்கி வெளிவந்தபோதும், முடி கழித்து வந்தபோதும், உண்ணும் முன்பும், நீண்டநேரம் துயில் கிடந்து விழித்தபோதும், கூடிப்புணர்ந்த பின்பும், கீழ் மக்களைத் தீண்டிய காலத்திலும், மற்றும் மலம், சிறுநீர் கழித்த போதும்- என்னும் இப்பத்து சமயங்களிலும் தவறாமல் நீராடி உடல் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

வாலாமை- தூய்மை; கான்றல்- விக்கல்; மயலுறல்- மலம், சிறுநீர் கழித்தல்.

## 11. மேலோர் பண்பு

**உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத்து உண்ணார்**
**உடுத்த ஆடை நீருள் பிழியார் விழுத்தக்கார்**
**ஒன்றுடுத்து என்றும் அவை புகார் என்பதே**
**முந்தையோர் கண்ட முறை.**

உடை சுற்றிக்கொண்டு அல்லால் நீராட மாட்டார்கள். ஒற்றை ஆடையோடு உணவு உட்கொள்ளமாட்டார்கள். இடுப்பில் கட்டிய ஆடையைக் குளிக்கும் நீரிலேயே பிழியமாட்டார்கள். ஓர் ஆடையுடன் பெருமைக்குரிய சான்றோர், கற்றவர் கூடிய சபைக்குள் நுழையமாட்டார்கள். நம் முன்னோர்கள் கண்ட மேலான முறைகள் இவையாகும். இடுப்பில் துணியின்றி நீராடல், இடுப்பிலும், மேலும் ஆடையில்லாமல் உணவு உண்ணல், உடுத்திய ஆடையை அவிழ்த்துக் குளிக்கும் நீரில் கசக்கிப் பிழிதல், மேலாடை இல்லாமல் மேலோர் அவை புகுதல் தீது என்பது கருத்து.

விழுத்தக்கார்- பெருமைக்குரியவர்.

(தொடரும்...

உ

# அருள்திறன்

வாரியார் சுவாமிகள்

**இகலிய பிரம கபால பாத்திரம்:**

சிவமூர்த்தி செய்த அருள்த் திறங்களை உபதேசப் பொருளாக உபதேசிக்கும் படி அருணகிரிநாதர் முருகனிடம் வரம் கேட்கிறார்.

1. "பிரம கபாலம் ஏந்திய காரணம் யாது?"
2. "திருநீறு பூசிய திறம் ஏன்?"
3. "சடையில் கொன்றை அணிந்தது எதற்கு?"
4. "மானையும் மழுவையும் ஏந்திய காரணம் என்ன?"
5. "இசைபட ஆதியில் தோன்றிய தோற்றம் என்ன?"

இவைகளைப்பற்றித் திருஞானசம்பந்தர் சிவபெருமானையும் அடியார்களையும் வினாவுவதாக அவர் அருளிச் செய்துள்ள அப்பாடல்கள் அடியில் வருமாறு காண்க.

**1. பிரம கபாலம்:**

**"இயலுமாறெனக் கியம்புமின்..... வீரட்டன்......**
**அயன் பொய்ச்சிரம் .........**
**அரிந்து மற்றதில் ஊண் உகந்த அருத்தியே"**
**"சொலீர்**
**சிரமெனும்கல னிற்பலி வேண்டிய செல்வமே"**

**2. நீறடைந்த மேனி:**

**"நீறடைந்த மேனியன்கண் நேரிழை யாள் ஒருபால்**
**கூறடைந்த கொள்கை ............ யென்ன?"**

**3. கொன்றை சூடியது:**

**"பொன்னைவென்ற கொன்றைமாலை சூடும் –**
**(பொற்பென்னை கொலாம்"**

**4. மலர்க்கரங்களில் மான் மழு ஏந்தியது:**

**"கையடைந்த மானினோடு காரரவு ...... வைத்தல் என்னே?"**
**"கையினில் வெண்மழுவும் ......, பாம்பும் வைத்தல் என்னே"**

**5. இசைதரு ஆதி தோற்றம்:**

**"நாற்றிசைக்கும் மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே?"**

**பிரம கபாலம் ஏந்திய காரணம்:**

"நான் படைப்புக் கர்த்தா என்று பிரம்மன் செருக்குற்றான். ஆதலால் அவன்

சிரத்தை நகத்தால் கிள்ளியெடுத்து, மற்றவர் செருக்குறாவண்ணம், எத்துணைப் பெரும் பதவியில் இருந்தோரும் செருக்கின் காரணமாய் இழிவடைவர் என்று உலகம் உணர்ந்து உய்யும் பொருட்டு அக்கபாலத்தை ஐயன் ஏந்தி உலகுக்கு உணர்த்தி அருளினார்.

**நீறணிந்த காரணம்:**

நீறு- வினைகளை நீறு செய்வதால் நீறு எனப்பட்டது. சிவமூர்த்திக்கு வினை கிடையாது. தம் திருவடியை நினைக்கும் அடியார்களின் வினை நீறாகும் பொருட்டு அப்பரம கருணாநிதி தாம் நீறு தரித்துக்கொண்டு அருள்புரிகின்றார்.

**“நினைவொடு பணிபவர் வினைதுகள் படஎதிர்**
**நினைந்து திருநீறணிந்த தொருபால்**

-கொலுவகுப்பு

பாலுண் குழவியின் பசுங்குடல் தாங்காது என்று தாய் மருந்துண்ணும் கருணைத்திறம் இது என உணர்க. நம் வினை நீறுபட வினையில்லாத விமலன் திருநீறு தரித்துக் கொள்ளுகின்றான்.

**கொன்றை சூடிய காரணம்:**

கொன்றைமலர் ஐந்து இதழ்களை உடையது. ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெரும் தொழில்களுக்குத் தாமே காரணர் என்று விளக்கும் பொருட்டும், வேத இருதயமாக விளங்கும் பஞ்சாட்சரத்துக்குத் தாமே தலைவர் என்று உலகுக்கு உணர்த்துவான் வேண்டியும் பரமன் கொன்றை மலரை முடிமிசை சூடுகின்றான் என உணர்க.

**மான்மழு ஏந்திய காரணம்:**

துள்ளிக் குதிக்கின்ற நமது மனமாகிய மானைப்பற்றி நமது பாவங்களாகிய பஞ்சை அவன் கையில் உள்ள மழுவால் எரித்துவிடுகின்றான்.

**இசைதரு ஆதி தோற்றம்:**

அப் பரமபதி ஒருவரே வானோர்க்கும் ஏனோர்க்கும் தலைவர். அந்த அருட்பெரும் ஜோதியே ஆதி ஜோதியாம்.

பிரம்மன் சிரத்தைக் கொய்த திறத்தை மணிவாசகரும் கூறுகின்றார்.

**“நல்ல மலரின் நான்முக னார்தலை**
**ஒல்லை யரிந்ததென் றுந்தீபற**
**உகிரா லரிந்ததென் றுந்தீபற”**

-திருவாசகம்.

**“அயனை முழத்தலை யரியு மழுக்கையன்”**

-திருப்புகழ்.

# மோகனதாஸ் சுவாமிகளின்

# வட இந்திய ஸ்தல யாத்திரை



அடுத்ததாக நாம் தரிசித்த இடம் கோணாரக் சூரியனார் கோயிலாகும். சூரிய தேவனுக்குத் தனியாக அமைக்கப்பட்டு உள்ள இவ்வாலயம் பரந்த மணல் வெளி யில் உறுதியாக, கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. ஒரிஷா மாநிலத்தில் அமைந்து உள்ள ஐந்து புண்ணிய ஸ்தலங்களுள் கோணாரக் என்ற இடத்தில் இந்தச் சூரிய னார் கோயில் உள்ளது.

ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சூரியதேவன் நின்று பயணம் செய்பவராக இங்கே சித்தரித்துள்ளார்கள். பெரிய தேரினை இழுத்துச் செல்லும் ஏழு குதிரைகளும் வாரத்தின் ஏழு நாட்களை யும் குறிக்கும். ஒவ்வொரு மாதத்தையும் இரண்டாகப் பிரித்து வரும் 24 பாகங்களை யும் 24 சக்கரங்கள் குறிக்கிறது. முற் காலத்தில் ஒவ்வொரு நாளையும் எட்டுப் பாகங்களாகப் பிரித்துப் பார்த்தனர். அந்த எட்டுப் பாகங்களும் சக்கரத்தில் எட்டுக் கம்பிகள் போன்ற அமைப்புக் குறித்து நிற்கிறது. சில்லில் செதுக்கப்பட்டுள்ள மேடு பள்ளங்களையும், ஏற்ற இறக்கங் களையும் கொண்டு நேரம் கணிக்கப்பட்ட தாகக் கூறுகிறார்கள்.

நூறுசதுர அடி அளவுகொண்ட மேடையில் கற்பக்கிரகம் காணப்படுகிறது. சூரியதேவன் கோயிலில் செதுக்கப்பட்டு இருக்கும் ஒவ்வொரு உருவமும் தனித் தனி கம்பீரமும், களை ததும்பும் பொலி வும், உயிரோட்டம் உள்ளவையாகவும் கல்லில் வடித்துள்ளார்கள். விநாயகர், லக்சுமி, பைரவர், கங்கை முதலான தெய்வங்களையும் இங்கே பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

இரவு 9.00 மணிக்கு "புருஷோத்தம்" எக்ஸ்பிரஸ் மூலம் "கயா" நோக்கி எமது பயணம் தொடர்ந்தது.

அமையும் வாய்ப்புக்களைத் திறம்பட பயன்படுத்துகிறவனே உண்மையான பெருமைக்குரியவன்.

**காலம்: 24.07.2008. வியாழன். பகற்பொழுது**

**இடம்: புருஷோத்தம் எக்ஸ்பிரஸ் ரயிலில்**

புதன்கிழமை இரவு 9.00 மணிக்கு புவனேஸ்வரிலிருந்து ஆரம்பமாகிய காயா நோக்கிய எமது ரயில் பயணம் இரவும் பகலுமாகத் தொடர்ந்தது. தினசரி எமது நிகழ்ச்சி நிரல் மிக நெருக்கமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தமையால் எமது யாத் திரைக் குழுவினர் அனைவரும் களைப் புடனேயே காணப்பட்டனர். நீண்ட ரயில்ப் பயணம் உடலுக்கு நல்ல ஓய்வினைத் தந்தது. கூடுதலான நேரம் தூக்கத் திலேயே கழிந்தது. விழித்திருந்த வேளை எல்லாம், ஏற்கனவே தயாரித்துக் கொண்டு வந்திருந்த புளியோதரையும், ரயிலில் கிடைத்த பழங்களும் "சாயா"வும் களைப் பைப் போக்கித் தெம்பைத் தந்தன.

இரவு 1.30 மணியளவில் கயா (காயா) வந்து சேர்ந்து, செட்டிமாரால் அந்நாளில் கட்டப்பட்ட தர்மசாலையில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டோம்.

**காலம்: 25.07.2008. வெள்ளி. காலை 7.00 மணி**

**இடம்: கயா (காயா)**

காசியில் கங்கை விசேடம்போல இங்கே கயாவில் பல்குனிநதி சிறப்புடன் விளங்குகிறது. இந்த நதியை ஸ்ரீமத் நாராயண மூர்த்தியின் சொரூபம் என்கிறார் கள். இராமபிரான் தந்தையாகிய தச ரதனுக்கு இங்கேதான் சிரார்த்தம் செய்ததாகக் கூறுகிறார் கள். இத்தகைய சிறப்புமிக்க பல்குனிநதி அருகிலேயே கயா அமைந்துள்ளது. கயா ரயில் நிலை யத்துக்கும் பல்குனி நதிக்கும் இடையே உள்ள 3மைல் தூரத்தை நாம் குதிரை வண்டியில் கடந்தோம்.

கயா பிதிர்க்கடன் செய்யவரும் இந்துக்களின் வருகையினாலும், புத்த பகவான் போதி மரத்தடியில் அறிவொளி பெற்ற "புத்தகாயா"வைத் தரிசிக்க வரும் பல்வேறு நாடுகளின் பிரஜைகளாலும் எப் போதும் அவ்விடம் நிரம்பி வழிந்தபடியே இருக்கும்.

கயாசுரன் என்பான் அரக்கர் குலத்தவன். இறைவனை நோக்கிக் கடும் தவம் புரிந்தான். தவத்தின் பயனாக, கயாசுரன் இறைவனிடம் ஒரே ஒரு வரம் கேட்டான். இங்கே சிரார்த்தம் செய்யப் படுபவர்கள் நற்கதி பெறவேண்டும் என்பதே அவனது வேண்டுகோளாகும். அதனால் கயாசுரன் பேரிலேயே "கயா" என்றும் "கயை" என்றும் இந்த இடம் அழைக்கப்படுகிறது.

"சிரத்தையோடு செய்வதே சிரார்த் தம்" என்றதன்படி இங்கே கூடும் இந்துக் களை வரவேற்கத் தமிழ் தெரிந்த- புரிந்த பிராமணர்கள் பலர் இருக்கின்றார்கள். சிரார்த்தம் செய்து பிண்டம் போட்டு அதை எடுத்துப்போய் விஷ்ணு பாதத்தில் சமர்ப் பிக்கிறார்கள். கற்பாறையில் சுமார் 1 அடி நீளத்துக்கு அந்த விஷ்ணுபாதம் இருக்கிறது. அந்தப் பாறையைச் சுற்றிக் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. "கதாதரர்" என்ற உருவில் மகாவிஷ்ணு கதையுடன் காணப்படுகிறார்.

வணங்கிய பின் "அக்ஷயவடம்" என்று சொல்லப்படுகின்ற ஆலமரத்து அடி யில் உள்ள விக்கிரகங்களைத் தரிசிக்

கிறோம். கயாவில் புண்ணிய காரியங்களைச் செய்த ஒருவர், இங்கே வந்து காமம், குரோதம், மோகம் ஆகிய மூன்று பற்றுக்களையும் விட்டுவிடவேண்டும். இதற்கு அடையாளமாக நமக்குப் பிடித்த ஒரு பூ, ஒரு காய், ஒரு பழம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இங்கே துறந்துவிட வேண்டும். அதன் பின் நமது வாழ்க்கையில் அவற்றை நாம் தொடவே கூடாது.

புத்தபகவான் கயாவுக்கு வந்து அருகே உள்ள "உருபேலா" என்கிற இடத்தில் 6 ஆண்டுகள் தவம் செய்து "ஞானோதயம்" பெற்றார். அவர் ஞானம் பெற்ற அரச மரத்தடியிலே இப்போது ஒரு மேடை அமைத்துள்ளார்கள். அங்கே இரு பெரிய காலடிச்சுவடுகள் காணப்படுகின்றன. புத்தர் தவம் மேற்கொண்டு ஒரு வைகாசி மாதப் பௌர்ணமி நாளில்த்தான் அறிவொளி பெற்றார். அவர் மறைந்த நாளும் ஒரு வைகாசிப் பௌர்ணமி "புத்த பூர்ணிமா" எனப்படுகிறது.

அசோகச் சக்கரவர்த்தி போதி மரத்தை வழிபட்டு புத்தருக்கு ஆலயம் அமைத்த இடம் "மகாபோதி கோயில்" என அழைக்கப்படுகிறது. 170அடி உயரம் கொண்ட இக்கோயில் கோபுரத்தின் அடியில் அமைதியே வடிவாகப் பகவான் அமர்ந்திருக்கிறார். உலகம் தழுவிய மதமாக பௌத்தம் பரவியுள்ளதால் திபேத்தியர்கள், ஜப்பானியர்கள், தாய்லாந்துக்காரர்கள், இலங்கையர்கள், இந்தோனேசியர்கள் எனப் பல நாட்டவரும் தத்தம் நாட்டுச் சிற்பக்கலையைப் பிரதிபலிக்கும் வண்ணம் இங்கே தனித்தனி ஆலயங்கள் அமைத்துள்ளார்கள். அந்தந்த ஆலயங்களில், அந்தந்த நாட்டவர்கள், அவரவர் தேசிய உடையில் நடமாடுவதைப் பார்க்க முடிந்தது. இலங்கை பௌத்த ஆலயம் உட்பட அனைத்து பௌத்த ஆலயங்களையும் தரிசித்தோம்.

இரவு 9.30 மணியளவில் "ஜம்மு தாவி விரைவு ரயில்" மூலம் எமது பயணம் காசி (வாரணாசி) நோக்கித் தொடர்ந்தது. (தொடரும்...

## கிரகண நேரம் சூரியனைப் பார்க்கலாமா?

கிரகண நேரம் சூரியனைப் பார்க்கக்கூடாது என்று பெரியோர் கூறும்போது அதை மூடநம்பிக்கை என்று இளைய தலைமுறை கூறிவந்தது. ஆனால் இது கண்ணுக்குக் கெடுதல் உண்டாக்கும் என்று நவீன சாஸ்திரம் கூறுகின்றது.

கிரகணநேரம் மட்டுமல்ல எப்போது சூரியனை நேரடியாகப் பார்த்தாலும் கண்ணில் பதியும் சூரியப்பிரதி பிம்பத்துக்கு கண்ணின் கருமணியை சுடுமளவுக்கு வெப்பமுண்டு. சாதாரண நேரத்தில் சூரியனை நேரடியாகப் பார்க்கும்போது ஒளியின் தீவிரம் காரணமாக கண் இமைகள் அடைந்துவிடும். ஆனால் கிரகண நேரம் சூரியனின் பெரும்பாகம் சந்திரன் மறைக்கின்றது. அதனால் ஒளியின் தீவிரம் குறையும். கண் இமைகளும் ஏறத்தாழ முழுமையாகத் திறந்திருக்கும். சூரிய ஒளியின் ஓர் சிறு அம்சமாவது கண்ணில்ப் படியும்போது பிரகாசம் கண்ணுக்குள் புகுந்து கருமணியைச் சுட்டுவிட வாய்ப்புண்டு. சூரியனின் சிறிய ஓர் அம்சத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கூட பூரண சூரிய பிரதிபிம்பத்தின் அளவு வெப்பத்துடன் வருகின்றது என்று கண்டறிந்துள்ளனர். கிரகண நேரம் சூரியனைப் பார்க்கலாகாதென்பது இதனால்த்தான்.

**இல்லாதவனுக்கு ஒரு கவலை இருப்பவனுக்கு நூற்றியொரு கவலை.**

உ

# செய்திச் சிதறல்கள்

- **திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் ஆன்மார்த்தமூர்த்தி அருள்மிகு மாநடராசப்பெருமான் சித்திரைத் திருவோணம் திருநீராட்டுவிழா 19.04.2009 அன்று நடைபெற்றது.**

- யாழ் ஸ்ரீ இராமகிருஷ்ணா சேவாச்சிரம சங்கத்தினால் குருமூர்த்திகளுக்கான கட்டட அடிக்கல்நாட்டும் வைபவம் 27.04.2009 காந்தி கலைவளர்ச்சி மன்றத்தில் இடம்பெற்றது.

- சைவ சமய பரிபாலன சபையினரால் வெளியிடப்பெற்ற வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர், வைரவிழா மலர்களும் இந்துசாதனம் மலர்களும் நூலகத்தில் காணாமல் போய்விட்டன. இந்நூல்கள் வைத்திருக்கும் சைவ அன்பர்கள் அவற்றைத் தந்துதவுமாறும் அவற்றைப் பிரதிசெய்து தங்களுக்குத் திருப்பி ஒப்படைப்பதாகவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் திருவாவடுதுறை ஆதீனம் சபாபதி நாவலர் அம்பலவாணர் நாவலர் ஆகியோரின் நூல்களையும் பதிப்பித்து வெளியிடுவதற்கு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறார்கள்.

- இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபை வடமாகாணத்தின் சிறந்த நூலகருக்கான விருதினை யாழ் பொதுசன நூலகத்தை சிறப்பான முறையில் நிர்வகித்துவரும் தனபாலசிங்கம் என்பவருக்கு வழங்கியுள்ளது. அத்துடன் சுன்னாகம் பொதுசன நூலகம், கொக்குவில் பொதுசன நூலகம் என்பன குடாநாட்டின் சிறந்த நூலகங்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

- அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் வட இலங்கை சங்கீத சபையினரின் பாட விதானத்திற்கமைய ஆலயங்கள் பாடசாலைகள் தோறும் இலவச தேவார பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

- திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் அருள்மிகு சிவசூரியப் பெருமான் திருக்கோயிலில் 04.05.2009 அன்று நவக்கிரக மகாயாகம் நடைபெற்றது.

- இலங்கை இலக்கியப் பேரவையின் வெள்ளிவிழாவும் 2006- 2007 ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் 17.05.2009 அன்று இடம்பெற்றது.

முடிவே இல்லாத வியாதி பேராசை.

- சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் நடைபெறவுள்ளது.

- சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியத்தின் மாதாந்த கருத்தரங்கு 17.05.2009 அன்று ஆனைப்பந்தியில் தலைமைச் செயலக குருகுலத்தில் நடைபெற்றது.

- வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்வின் நிறைவுநாள் கருத்தரங்கும் நூல் கண்காட்சியும் 18.05.2009 அன்று சுழிபுரம் விக்டோறியா கல்லூரியில் இடம்பெற்றது.

- சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளிலே ஒன்றான இலவச வைத்தியசேவை 14.10.2001 தொடக்கம் புதன், ஞாயிறு தினங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றதோடு அவற்றுக்குரிய மருந்து வகைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் குடாநாட்டில் வெளிவந்த நமது ஈழநாடு பத்திரிகையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் “சிநேகிதியே” என்னும் பகுதியில் “அன்புள்ள சித்திக்கு” என்னும் தலைப்பில் வெளிவந்த சில எண்ணங்களை கடிதமாக எழுதியவற்றைத் தொகுத்து “உனக்கொன்றுரைப்பேன்” என்னும் நூலினை வெளியிட்டுள்ளார்.

- இலங்கை இலக்கியப் பேரவையால் 2008ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதால் குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக யூலை 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் கேட்டுள்ளார்.

- சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் மாதகல் விநாயகர் ஆலய மஹோற்சவ காலங்களில் நடாத்தப்பட்டுவரும் சிறப்புச் சொற்பொழிவு 23ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 7ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

- ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய அற நிதிய சபை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 6 மாணவர்களுக்கு மாதாந்தம் உதவிப்பணம் வழங்கி வருகிறது.

ஒருவர் படித்த நூல்களின் தரத்திற்கு ஏற்பவே நுண்ணறிவு அமையும்.

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலின் அமைதி, எளிமை இத்தகைய சூழலில் வேலவனாக வீற்றிருந்து சந்நிதி முருகன் அடியவர்கள் மேல் பொழிகின்ற கருணைமழை இதேபோல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் காருண்ய சேவைகள் இவையெல்லாம் இலண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற கைதடி அன்பர் வேலாயுதம் அவர்களின் உணர்வலைகளில் தினம் தினம் வந்து செல்கின்ற காட்சிகளாக மாறிவிட்டன. இதேபோன்று தனது சொந்த ஊரான கைதடி கயிற்ற சிற்றிமுருகன் ஆலயம் அதனைப் புனர் அமைத்து சிறப்படையச் செய்யவேண்டும் என்ற ஆதங்கம் இவையெல்லாம் வேலாயுதம் அவர்களின் அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

ஆம்! புலம்பெயர்ந்து சென்ற நாட்டில் அவரது உடல் மட்டுமே இருந்தது. அவரது உள்ளமும், உள்ளத்தில் எழுகின்ற சிந்தனைகளும் தான் பிறந்து வளர்ந்த மண்ணையே திரும்பத் திரும்ப மீட்டுக்கொண்டிருந்தது. இதனால் வேலாயுதம் அவர்கள் இலண்டனிலிருந்து அடிக்

கடி தனது சொந்த மண்ணுக்கு வந்து ஒருசில மாதங்கள் இங்கேயே தங்கிச் செல்கின்ற வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இலண்டனில் அந்நாட்டுக்குரிய பண்பாட்டு உடையணிந்து ஒரு கனவான் போலச் செயற்படுகின்ற வேலாயுதம் அவர்கள் இலங்கை வந்து இறங்கியவுடன் இலங்கையில் வசிக்கின்ற ஒரு சராசரி மனிதன்போல மாறிவிடுவார். தனது வெளி நாட்டுப் பிரயாணம் தொடர்பான கடவுச் சீட்டுப் போன்ற ஆவணங்களை கொழும் பிலேயே வைத்துவிட்டு யாழ்ப்பாணவாசி என்பதை வெளிப்படுத்துகின்ற எளிமை யான உடை அணிந்து பார்ப்பதற்கு ஒரு எளிய மனிதராகவே அவர் சந்நிதியில் காட்சியளிப்பார்.

வேலாயுதம் அவர்கள் இலண் டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பே ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் தொடர்பு கொண்டு தனது வருகையை வெளிப் படுத்தி விடுவார். சாமியாரும் வேலாயுதம் அவர்களுக்கென ஒரு சிறிய அறையை ஆச்சிரமத்தில் ஒதுக்கிவிடுவார்கள்.

இவ்வாறு தனது சொந்த மண் ணுக்கு வருகை தருகின்ற வேலாயுதம் அவர்கள் தான் செல்லவேண்டிய பல் வேறு இடங்களுக்குச் சென்றுவந்தாலும் சந்நிதி ஆலயத்தையே தனது பிரதான இருப்பிடமாகக் கொண்டிருப்பார்கள். அது மட்டுமல்ல ஆலயத்தில் தங்கியிருக்கின்ற பல்வகைப்பட்ட அன்பர்களுடனும் மற்றும் ஆலயமே தஞ்சமெனத் தங்கியிருக்கின்ற ஏதிலிகளுடனும் தானும் ஒருவர்போல தங்கியிருப்பார்கள். இரவு ஆலய வாசலி லேயே இவர்களுடன் ஒருவராகப் படுத்து உறங்குவார்கள்.

இவ்வாறு சந்நிதி ஆலயச் சூழ லில் எளிமையான நடையுடை பாவனை யுடன் எளிமையான வாழ்க்கை வாழ்கின்ற வேலாயுதம் அவர்களின் சிந்தனையும் செயற்பாடும் இவற்றிலிருந்து முற்றிலும் வித்தியாசமான ஒன்றாக அமைந்திருந்தது. ஆம் அவை மிகவும் பரந்துபட்டவையாக மட்டுமின்றி பக்குவப்பட்ட அருளாளர்கள் சிந்திக்கின்ற சிந்தனைகள் போலவே காணப்பட்டன.

இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற மக்கள், இந்த மக்களின் சீரிய வாழ்க்கை, எமது மூதாதையர்கள் உரு வாக்கிய இந்த ஆலயங்கள், அருள் பாலித்துக்கொண்டிருக்கின்ற மூல மூர்த்தி கள் பற்றியதாகவே இவரது சிந்தனைகள் செயற்பட்டன.

மேலோட்டமாகப் பார்த்தால் இவையெல்லாம் சாதாரண விடயங் களாகத் தெரியலாம். ஆனால் உண்மை யில் இந்த ஆலயங்கள்தான் எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஆலயங்களைப் பேணிக்காப்பதும் அவற் றினைச் சிறப்படையச் செய்வதும் தான் மிக உன்னதமான உண்மையான பணி என்ற உண்மையை வேலாயுதம் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அது மட்டுமல்ல இந்த மண்ணில் இவை மட்டுமே எமது நிலையான சொத்துக்கள் எனவும் அவர் உணர்ந்துகொண்டார்.

இவ்வாறு உணர்ந்து கொண்ட தனால் இந்த ஆலயங்களினுடைய திருப் பணிகள் தொடர்பாக தன்னால் என்ன என்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் உளத்தூய்மையுடன் செய்யமுன்வந்தார் கள். கைதடி கயிற்றசிற்றி முருகன் ஆல யம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

ஆலயம், ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் எனப் பல ஆலயங்களின் திருப் பணிகளுக்கு மிகவும் காத்திரமான பங்களிப்புக்களை வேலாயுதம் அவர்கள் செய்யமுன்வந்தார்கள்.

கைதடி கயிற்றசிற்றி ஆலய திருப்பணிகளுக்கு மட்டும் வேலாயுதம் அவர்கள் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளார்கள். அதுபோல ஸ்ரீ செல் வச்சந்நிதி முருகன் ஆலய மூலஸ்தான செயற்பாடுகளுக்காக 20 இலட்சம் ரூபா என ஒட்டுமொத்தமாக ஒன்றரைக்கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தினை இந்த ஆலயத்திருப்பணிகளுக்காக செலவு செய்துள்ளார்கள். இந்தப்பணம் முழுவதும் வேலாயுதம் அவர்கள் புலம் பெயர்ந்து சென்ற நாட்டில் உடலாலும் உள்ளத் தாலும் கஷ்டப்பட்டு உழைத்த பண மாகும்.

வேலாயுதம் அவர்களது குடும்பத் தினர் குலதெய்வமாக வழிபாடு செய்த கைதடி கயிற்றசிற்றி முருகன் ஆலயத்தின் திருப்பணிச் செயற்பாட்டில் ஆலயத்தின் கோபுரவேலை, எம்பெருமான் வீதி உலா வருகின்ற வாகனங்கள் என ஏறத்தாழ முழுமையான செயற்பாடுகளும் வேலா யுதம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டவை ஆகும். அதேபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனின் மூலஸ்தான செயற்பாட்டை வேலாயுதம் அவர்கள் சந்நிதியான் ஆச்சிர மத்தினூடாகச் செய்ய ஆரம்பித்ததைத் தொடர்ந்து அங்கே இடம்பெற இருந்த ஏனைய திருப்பணி வேலைகளும் ஏனைய பல அன்பர்கள் ஆலயத் திருப்பணிச் சபை யினரிடம் கையளித்த நிதியிதின்மூலம் படிப்படியாகச் செய்யப்பட்டன. இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் புதுப்பொலி வுடன் இன்று இருக்கின்ற சிறப்புநிலைக்கு மாற்றமடைந்தது. மேலும் 17.05.2008 அன்று மிகவும் விமரிசையாக எம்பெரு மானுடைய கும்பாபிஷேக செயற்பாடு களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒரு சராசரி மனிதனை விட மிகவும் விசாலமான சிந்தனையுள்ள வராக வேலாயுதம் அவர்கள் காணப்பட்டா லும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மிகச் சாதாரணமாக ஒரு அடியவர்போலவே நடமாடுவார்கள். ஆலயத்தில் தங்கியிருக் கின்ற பாமர மக்களுடன் தானும் ஒருவர் போல ஒட்டி உறவாடி தனது பொழுதைப் போக்குவதில் மகிழ்ச்சி அடைவார்கள். இவ்வாறு வித்தியாசமான பல நற்பண்பு களை வேலாயுதம் அவர்கள் தன்னகத்தே கொண்டிருந்தார்கள்.

இதேபோன்று இந்தப் பூவுலகில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ஒரு தனித்துவமான இடத்தைத் தனது உள் ளத்தில் வேலாயுதம் அவர்கள் வழங்கி இருந்தார்கள். மேலும் சந்நிதி ஆலயம் அவரின் ஆன்மாவில் இரண்டறக் கலந்து விட்ட ஒரு இடமாகவே அவர் கருதிக் கொண்டார்கள்.

இவையெல்லாவற்றிற்கும் மேலா கத் தனது இறுதி மூச்சின்பொழுதும் தனது உள்ளமும் உதடும் சந்நிதி யானையே சிந்திக்கவேண்டும் சந்நிதி யானது நாமத்தையே உச்சரிக்க வேண் டும் என்று அந்த வினோதமான முடிவை யும் தனக்குள் எடுத்துக்கொண்டார்கள் என்றே கூறவேண்டும்.

இதேபோன்று வேலாயுதம் அவர் கள் தொடர்பான கல்வியியலில் நாம் அறியவேண்டிய வேறுசில பக்கங்களை யும் அடுத்த இதழில் அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

(தொடரும்...

உ

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூகப்பணிகள் (27.02.2009 - 20.05.2009)

✍ திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த செல்வன் சிறீகாந்தன் திலக்ஷன் என்பவருக்கு கொழும்பு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவிருந்த மேலதிக சத்திர சிகிச்சைக்காக ஒருதொகைப் பணம் 27.02.2009 வெள்ளிக்கிழமை அன்று ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.

✍ குடத்தனை பிரதேச செயலரினால் முன்வைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான ஒருதொகைப் பணத்தை அப்பிரதேச செயலக பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் த. கணேசமூர்த்தியிடம் 03.04.2009 அன்று கையளிக்கப்பட்டது.

✍ தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளி விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு 24.04.2009 அன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உடு புடவைகளை முன்பள்ளி நிர்வாகத் தலைவரிடம் ஆச்சிரமத்தினால் கையளிக்கப்பட்டது.

✍ வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த 3வயதுடைய செல்வன் சிந்தூரன் சாருஜன் என்பவருக்கு கொழும்பில் மேற்கொள்ளப்படவிருந்த இதய சம்பந்தமான சத்திர சிகிச்சைக்காக அவரது தாயாரிடம் 01.05.2009 அன்று ஒருதொகைப் பணம் கையளிக்கப்பட்டது.

✍ யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த உறவினர்களின் தொடர்புகள் அற்ற 15 மாணவர்களின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு அவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாக மாதாமாதம் உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

<u>தமிழகத் திருக்கோயில் வரிசை:</u> வ

# வட திருமுல்லைவாயில்

திரு வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்

சென்னை ஆலடிச்சாலையில், பூந்தமல்லியிலிருந்து அம்பத்தூர் செல்லும் பேருந்தில் ஆலடியைத் தாண்டியதும் வட திருமுல்லைவாயில் வருகிறது.

திருமுல்லைவாயில் காட்டுப்பகுதியில் வாழ்ந்த வாணன், ஓணன் என்னும் இரு குறும்பர்கள் மக்களைப் பெரிதும் துன்புறுத்தி வந்தனர். மன்னன் தொண்டமான் அவர்கள் கொட்டத்தை அடக்க எண்ணிச் சிறு படையோடு வந்து போரிட்டான். குறும்பர்களின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் மன்னன் பின்வாங்கி ஓடினான். ஒரு குறித்த இடத்தில் மன்னன் வந்த யானை நகரமுடியாமல் கால்கள் முல்லைக் கொடிகளில் சிக்குண்ட நிலையில்த் தத்தளித்தது. மன்னன் யானையில் இருந்தபடியே தன் உடைவாளால் தாறுமாறாக முல்லைக் கொடிகளை வெட்டினான். ஒரு இடத்தில் இரத்தம் பீறிட்டுப் பாய, யானையில் இருந்து கீழே குதித்த மன்னன் முல்லைக் கொடிகளை நீக்கிப் பார்த்தபோது, ஒரு சிவலிங்கத்திலிருந்து இரத்தம் பீறிடுவதுகண்டு "அபசாரம் செய்து விட்டேனே" என்று கலங்கி செய்வதறியாது நின்றான். "மன்னவா! கலங்காதே! நான் என்றும் மாசிலாமணியாகவே இருப்பேன். நந்தியை அனுப்புகிறேன். போரில் வென்றுவா" என்று அசரீரி வாக்குக் கேட்டது. நந்தியின் துணையுடன் மன்னன் போரில் வென்றான். வெற்றியின் ஞாபகார்த்தமாக வாணன்- ஓணன் இருவரதும் இடத்திலிருந்த இரண்டு பெரிய வெள்ளெருக்கம் தூண்களைக் கொண்டு வந்து மாசிலாமணி நாதருக்கு தொண்டமான் கோயில் கட்டினான். இந்த விபரம் கோயில் வரலாற்றுப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

தெற்குப் பார்த்த ராஜகோபுரத்தினூடாக உள்ளே போனால் கிழக்குப் பார்த்தபடி உள்ள கருவறையில் மூலவர் மாசிலாமணீஸ்வரர். உயரமான லிங்கம். சதுரமான ஆவுடையார்பகுதி. லிங்கத்தின் மேற்பகுதி வெட்டுண்ட நிலையில் இருப்பதால், குளிர்விப்பதற்காக எப்போதும் சந்தனக்காப்பில் காணப்படுகிறார். தினமும் மேலும் மேலும் சந்தனம் சாத்தப்படுமே தவிர களையப்படுவதில்லை. அதனால் லிங்க பாணத்துக்கு அபிஷேகம் இல்லை. ஆவுடையார் பகுதிக்கு மட்டுமே அபிஷேகம். வருடத்தில் ஒருமுறை சித்திரை மாதத்துச் சதயத் திருநாளில் சந்தனக் காப்பு நீக்கப்பட்டு, அபிஷேகம் நடைபெற்று, மீண்டும் காப்பிடப்படும்.

அம்பிகை கொடியிடை அம்மைக்கும் பரிவார மூர்த்தங்களுக்கும் தனித்தனி சந்நிதிகள் உண்டு.

கருவறைக்கு முன்பாக மரங்களாலான மேல் விதானத்தை (மேலே வரலாற்றில் கூறிய) இரண்டு வெள்ளெருக்கம் தூண்களும் தாங்கி நிற்கின்றன. சுந்தரர் மாசிலாமணீஸ்வரர் மேல் ஒரு பதிகம் பாடியுள்ளமையால் கோயிலும் - வெள்ளெருக்குத் தூண்களும் சுந்தரர் காலத்துக்கு முற்பட்டவையாக இருக்க வேண்டும்.

மன்னனுக்கு உதவியாகப்போன

நந்தீஸ்வரர், "இன்னமும் எதிரிகள் வருகிறார்களா?" என்று (மூலவருக்கு எதிர்த் திசையில்) கிழக்குத் திசை பார்த்தபடி திரும்பி இருப்பது, வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத ஒரு சிறப்பு அம்சம். "முல்லை வாயிற்குள் வைத்த முத்தி வித்தே" என்று வள்ளலார் அழைத்த எம் பெருமானை மனம்நிறைய வாழ்த்தி வணங்கி வெளியே வருகிறோம்.

பி.கு: இரும்புப் பட்டம் போடப்பட்டுள்ள நிலையில், ஒரு அடி விட்டம் கொண்ட இரண்டு வெள்ளெருக்குத் தூண்களும் பளபளவென இரும்புத் தூண்களென இருப்பதை இன்றும்கூட நேரில் பார்க்கலாம்.

**"துன்பமற**
**எல்லை வாயற்குணர் மட்டுமேகில் வினையேகுமெனும்**
**முல்லை வாயிற்குள் வைத்த முத்தி வித்தே"**

(அருட்பா)

# சீகாழி

சீகாழி என வழங்கப்படும் இத் திருத்தலம் சிதம்பரத்தை அடுத்துள்ளது. திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்து, ஞானப்பால் உண்ட அற்புதம் நிகழ்ந்த புண்ணியபூமி. "பிரம்மபுரம், தோணிபுரம், வேணுபுரம்..... என்கின்ற 12 பெயர்கள் இத்தலத்துக்கு உண்டு.

கோயில் நான்கு கோபுரங்கள் கொண்டதாயினும், கிழக்குக் கோபுரமே பிரதான வாசல். வாசலுக்கு வெளியே "தோடுடைய செவியன்" பதிகம் முழுவதும் சலவைக்கல்லில் பதிக்கப்பட்டு உள்ளது. வாசலைக் கடந்து உள்ளே சென்றால் நேரே மூலவர் தரிசனம். பக்கத்திலேயே திருஞானசம்பந்தர் சந்நிதி (பாற்கிண்ணத்தைக் கையில் ஏந்தியபடி) உற்சவ திருமேனியுடன் காணப்படுகிறது. கருவறையின் வெளிச்சுவர் ஞானசம்பந்தர் வாழ்க்கைச் சம்பவங்கள் அனைத்தும் வண்ண ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

கருவறையில் லிங்க வடிவில் "பிரம்மபுரீஸ்வரர்" பின்புறம் உள்ள சிறு குன்றின்மீது சில படிகள் ஏறிச்சென்றால் ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் தந்த "தோணியப்பர்" சந்நிதி. இன்னும் சற்று மேலே மரப்படிகளில் ஏறிச் சென்றால் "சட்டைநாதர்" சங்கம வடிவில்.

22 தீர்த்தங்கள் உள்ள சீகாழியில் "பிரம்ப தீர்த்தம்" எனப்படுகின்ற குளம் விசேடமானது. இதன் கரையிலேதான் ஞானசம்பந்தருக்கு, இறைவனும் இறைவியும் தோன்றி, ஞானப்பால் கொடுத்த அற்புதம் நிகழ்ந்தது. ஆண்டவன் திருப்பாதங்கள் பட்ட புண்ணிய பூமியாதலின் குளக்கரையில் நடந்துசெல்லக் கால்கள் கூசுகின்றன. குனிந்து இரு கைகளாலும் நிலத்தினைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்கிறோம். இந்தப் பிரம்ப தீர்த்தக் கேணியில் வாசல் வளைவில், சிவபாத விருதயருக்கு ஞானசம்பந்தர் தோணியப்பர் வீற்றிருக்கும் திசையைச் சுட்டிக்காட்டுவது, அம்பிகை பொற்கிண்ணத்தில் ஞானப்பால் கொடுப்பது சுதையால் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. பிரம்ப தீர்த்தத்தின்

சரி மேற்காக அம்பாள் சந்நிதி. தனியாக - கிழக்கு நோக்கியபடி அருள் பாலிக் கிறாள்.

மூவராலும் பாடல்பெற்ற திருத் தலம். இதைவிட பட்டினத்தார் பாடிய "திருக்கழுமல மும்மணிக்கோவை", நம்பியாண்டார் நம்பி பாடிய "மும்மணிக் கோவை", "திருவுலாமாலை" முதலிய பிரபந்தங்களும், மற்றும் பூந்துருத்தி காடநம்பி, அருணகிரிநாதர் முதலான பல ரும் சீர்காழியின் சிறப்பையும், ஞானசம் பந்தரின் பெருமையையும் பலபடப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

சீர்காழியில் உள்ள ஞானசம்பந்தர் பிறந்த இல்லம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தினரால் நினைவாலயமாக பராமரிக் கப்பட்டு வருகிறது.

குறிப்பு:

ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாறு நிகழ்ந்த ஸ்தலம்.

**பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி**
**புரமன்னு பூந்தராய் பொன்னாஞ் சிரபுரம் புறவஞ் சண்பை**
**அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங் காதி யாய**
**பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம் நாம் பரவு மூரே.**

- சம்பந்தர்-

## பாண்டிய மன்னனின் வருத்தம்

மதுரையில் அரசாண்ட விக்ரம பாண்டியனின் மைந்தன் இராஜசேகர பாண்டியன் தருமநெறி தவறாமல், இனிமையாக அரசாண்டான். அவன் ஒரு கலை தவிர, மீதிக் கலைகளை எல்லாம் அறிந்து இருந்தான். சோழ தேசத்திலிருந்து வந்த ஒருவன், தங்கள் மன்னன் கரிகால் வளவன் அறுபத்துநான்கு கலைகளிலும் திறமைசாலி என்றான். அதைக்கேட்ட பாண்டியமன்னன், தான் அறியாது இருந்த ஒரு கலையான பரத சாத்திரத்தைத் தக்கவர்களைக்கொண்டு பழகினான்.

அப்பொழுது தனக்கு ஏற்பட்ட கால் வலியை நோக்கி, "கொஞ்சநேரம் நடனம் ஆடுவதற்கே நம் கால் இப்படி வலிக்கின்றதே? நடராஜர் எப்போதும் ஓயாமல் நடனம் ஆடுகின்றாரே? அவருக்குப் பாதம் வருந்துமே? தாண்டவத்தை நிறுத்தச் சொன்னால், உலகம் இயங்காமல் அழியுமே. அதனால் கால்மாறி ஆடும்படிச் சிவபெருமானை வேண்டிக்கொள்வோம்" என்று நினைத்துக் கோவிலுக்குப் போய் பரமேஸ்வரனைக் கண்டு வணங்கினான்.

"நடராஜப் பெருமானே! நான் காணும்படி கால்மாறி ஆடி என் வருத்தத்தைப் போக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், நான் இப்போதே இறந்துபோவேன்" என்று முறையிட்டு உயிரைவிட முயற்சி செய்ய ஆரம்பித்ததும், சுவாமி வலது காலைத் தூக்கித் திருநடனம் புரிந்து அருளினார்.

உ

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

05-06-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## வருடாந்த வைகாசிப் பெருவிழா

சிறப்புநிகழ்வு:- சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின்

கலைநிகழ்வு

---

12-06-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

இசைநிகழ்வு:- "பாடும் பணியே பணித்தாய் அருள்வாய்"

வழங்குபவர்:- சிவயோகராணி கதிரவேலு ஆசிரியர் அவர்கள்

---

19-06-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10,30 மணியளவில்

சொற்பொழிவு:- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர்:- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

26-06-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10,30 மணியளவில்

## ஞானச்சுடர் 138வது மாத வெளியீடு
## ஆனி - 2009

வெளியீட்டுரை:- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா அவர்கள்

[நீர்வைமணி]

மதிப்பீட்டுரை:- திரு க. நவரெத்தினம் அவர்கள்

[ஆசிரியர்]

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2009

